www.padippakam.com

1-15 ஜனவரி 1999 ☐ ரூ. 4.00

# புதிய ஜனநாயகம்



## ஈராக் மீதான தாக்குதல்:

# ஒடுக்கப்படும் நாடுகளுக்கு அமெரிக்காவின் மிரட்டல்

படிப்பகம்

www.padippakam.com

# நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

★ செட்டித் திருக்கோணம் கிராமத்தைச் சேர்ந்த கள்ளச் சாராய வியாபாரி பாண்டியன், மாமூல் பிரச்சினையால், விக்கிரமங்கலம் போலீசாரால், போலீசு நிலையத்தில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டார். பிணத்தை போலீசு வீதியில் வீசிவிட்டது.

இதைக் கண்டு ஆத்திரமுற்ற கிராம மக்கள் சமூக விரோதச் செயல்களின் பிறப்பிடமான போலீசு நிலையம் கூடாது என அடித்து நொறுக்கினார்கள். தனது கொலைச் செயலை தற்கொலை என மூடி மறைக்கும் போலீசு, மக்கள் போலீசு நிலையத்தைத் தாக்கியதை பெரிய விசயமாக்கி அவர்களை ஒடுக்க முனைகிறது.

ஏற்கனவே இலஞ்சம் வாங்கிக் கொண்டு பாண்டியனை வளர்த்து விட்டவர்களே, இந்த போலீசார்தான். மாமூல் பிரச்சினையில் தகராறு செய்து, கொலையும் செய்துவிட்டது போலீசு. பிறகு அதை மூடி மறைக்க சாலையில் பிணத்தை வீசி விட்டது.

தட்டிக் கேட்க ஆள் இல்லை என்பதால், தான் வைத்ததே சட்டம் என காக்கிச் சட்டை கயவர்கள் செய்து வரும் அட்டூழியங்களின் எதிர் நடவடிக்கைதான் மக்களின் தாக்குதல். இது சரியானது தான். இப்படி அட்டூழியம் செய்த போலீசு, பாண்டியன் கொலைக்கு சட்டப்படி நடவடிக்கை எடுப்பதாகப் பசப்புகிறது. எந்தப் பிரச்சினையில்தான் இவர்கள் சட்டப்படி நடந்துள்ளனர்?

சட்டத்தை மீறுகின்ற முதல் குற்றவாளி போலீசுதான். கிரிமினல்களை ஊட்டி வளர்ப்பதும் போலீசுதான். கள்ளச் சாராயச் சாவுகளுக்குக் காரணமே போலீசுதான். இப்படி சமூக விரோதச் செயல்களின் மொத்தக் குத்தகைதாரர்களாகப் போலீசு செயல்பட்டதால்தான், ஆத்திரமுற்ற உழைக்கும் மக்கள் போலீசு நிலையத்தை அடித்து நொறுக்கினார்கள்.

போலீசு நிலையத்தைத் தாக்கியதாக மட்டும் வழக்குப் போட்டால், தனது குட்டும் அம்பலமாகிவிடும் என்பதால், சின்னதுரை என்ற போலீசை பொது மக்கள் தாக்கியதாக பொய் வழக்கொன்றையும் ஜோடித்து, பிணையில் வெளியில் வர முடியாத பிரிவுகளில், நியாயம் கேட்ட மக்களின் மீது வழக்குப் போட்டு, அவர்களைச் சிறையில் தள்ளவிட்டது, தமிழகப் போலீசு.

மக்கள் கொலை செய்ய முயன்றிருந்தால், காவல் நாய்களின் எலும்பு கூட மிஞ்சியிருக்காது. கள்ளச் சாராயத்தை வளர்த்த, கொலைகாரப் போலீசை கைது செய்வதற்கு பதில், மக்களை ஒடுக்க முனைகிறது தமிழக அரசு. ஊனமுற்ற நாகராஜ், மாணவர் ஜோதிவேல் ஆகியோரையும் குற்றவாளிகள் எனக் கைது செய்து, தனது யோக்கியதையை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டது.

கொலைகாரப் போலீசார் சுதந்திரமாக வெளியே உலா வருகின்றனர். ஆனால், கொலைக்கு நியாயம் கேட்டுப் போராடிய மக்களோ, போலீசின் பழி வாங்கும் வெறியில் இருந்து தப்பிக்க, ஊரை விட்டு வெளியேறி தலைமறைவாக வாழ வேண்டியுள்ளது. கொலைகாரப் போலீசைத் தண்டிக்கக் கோரியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும் அரியலூர் வட்டம் பு.மா.இ.மு.வினர் துண்டுப் பிரசுரம், சுவரொட்டி மூலம் பிரச்சாரம் செய்ததோடு, நவம்பர் இறுதியில் விக்கிரமங்கலத்தில் பொதுக் கூட்டமும் நடத்தினர்.

★ ☆ ★

**தி**ருச்சி, திருவெறும்பூர் பகுதியில் ஆட்டோ ஓட்டுநர் பாஸ்கர் என்பவரை, திருவெறும்பூர் போலீசு அடித்துக் கொலை செய்துவிட்டு, நஞ்சு குடித்துத் தற்கொலை செய்து கொண்டார் எனக் கைகழுவ முனைகிறது. இது நவம்பர் 25-இல் நடந்துள்ளது.

ஏற்கனவே திருவெறும்பூர் ஆட்டோ நிலையத்தில் ஆட்டோ ஓட்டும் பாஸ்கருக்கும் முருகனுக்கும் பிரச்சினை இருந்துள்ளது. ஒரு சிறிய பிரச்சினையை ஒட்டி பாஸ்கர் முருகனை அடித்துவிட்டார். முருகன் அன்றே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இதை ஒட்டி பாஸ்கரைச் சார்ந்தவர்களுக்கும் முருகனைச் சார்ந்தவர்களுக்கும் இடையே அடிதடியும் நடந்துள்ளது.

முருகன் பாரதீய ஜனதாவின் தொழிற்சங்கமான பி.எம்.எஸ்.இல் இருந்துள்ளார். பாஸ்கர் ம.தி.மு.க. பிரமுகர். ஆனாலும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தில் உள்ளார். பிரச்சினையை இருவரும் பேசித் தீர்த்திருக்கலாம். முருகன் வழக்கை திரும்பப் பெறுவதற்குக் கூட முயன்றுள்ளார். ஆனால் பிணங்களின் மீதே கட்சி கட்டி வந்துள்ள பாரதீய ஜனதாவின் தலைவர்கள் இதைத் தடுத்து, திருச்சி எம்.பி. ரங்கராசனின் நேர்முக உதவியாளர் மூலம் போலீசுக்கு நெருக்கடி தந்துள்ளனர். இதில் முன்னின்றவன் பி.எம்.எஸ். தலைவர் இராமையா.

அதன் பன்பு களத்திலிறங்கிய போலீசு, நீதிமன்றத்தில் சரணடைய வந்த பாஸ்கரை இழுத்துச் சென்று ஜட்டியுடன் காவல் நிலையத்தில் 25.11.'98 மாலை 3 மணிக்கு நிறுத்தியது. மாலை 4 மணிக்கு பாஸ்கரை குற்றுயிராக்கி, திருவெறும்பூரிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தது. அவர் இறந்த பின்பு அரசு பொது மருத்துவமனைக்குப் பிணத்தைக் கொண்டு சென்றது.

இதைக் கேள்விப்பட்ட மக்கள் சாலை மறியலில் இறங்கினர். சாலை மறியலுக்குப் பிறகே அதிகாரிகள் வந்து சமாதானக் கூட்டம் நடத்தினர். கூட்டத்தில் பங்கேற்ற ஒருவர், கொலைகார போலீசாரை ஏன் இன்னும் கைது செய்யவில்லை என கோபமாகப் பேசவே, சமாதானம் பேச வந்த வட்டாட்சியர் தர்மராஜன், மேலும் 4 வேன் போலீசை இறக்கி, ரவுண்டு கட்ட வேண்டும் எனத் திமிருடன் பேசியுள்ளார். மறுநாள் திருச்சி நகர் முழுதும் ஒரு ஆட்டோ கூட ஓடவில்லை.

இக்கொட்டடிக் கொலையை அம்பலப்படுத்தி திருச்சி நகர் முழுதும் ம.க.இ.க. - பு.மா.இ.மு.வினர் சுவரொட்டி ஒட்டினர். உடனே துண்டுப் பிரசுரமும் அச்சிட்டு வினியோகித்தனர்.

ஒருபுறம் இக்கொலைக்கு உடைந்தையான பா.ஜ.க. தலைவர்களுடன்தான் ம.தி.மு.க. தலைவர் வை.கோ. கூடிக் குழவுகிறார். மறுபுறம், தொண்டன் சாவுக்கு கண்ணீர் வடிப்பதாக நாடகமாடகிறார். எல்லாம் பதவி நாற்காலி சுகத்திற்குதான்.

தகவல்:
பு.மா.இ.மு., அரியலூர் வட்டம்
மற்றும் பு.மா.இ.மு., ம.க.இ.க., திருச்சி.

**திருச்சி போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்ட ம.தி.மு.க. பிரமுகர் பாஸ்கர்**



**பச்சை மனித இரத்தத்தைக் குடிப்பதில் தமிழக போலீசு புதிய சாதனைகளைப் படைத்துள்ளது. கடந்த ஆகஸ்டு 2-ஆம் தேதி தொடங்கி நவம்பர் 14-க்குள் தமிழகத்தில் 12 கொட்டடிக் கொலைகள் நடந்துள்ளன; சென்னையில் மட்டும், அக்டோபர் 11-ஆம் தேதி தொடங்கி நவம்பர் 14-க்குள், கிட்டதட்ட ஒரே மாதத்திற்குள் 4 கொட்டடிக் கொலைகள் நடந்துள்ளன. கடந்த பத்தாண்டுகளில், இந்த அளவுக்கு எந்தவொரு ஆண்டும் கொட்டடிக் கொலைகள் நடந்ததில்லை! ஜெயாவின் ஆட்சியில் போலீசு துறை கெட்டுப் போனகல்லீரல் என்றால், கருணாநிதியின் ஆட்சியில்...?**



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 14

**இதழ்: 2 – 4**

1 டிச.'98 – 15 ஜன.'99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# வடமாநிலத் தேர்தல் முடிவுகளும் போலி கம்யூனிஸ்டுகளின் பசப்பல்களும்

''நாங்கள் காங்கிரசிடம் தோற்கவில்லை, வெங்காயத்திடம்தான் தோற்றோம்'' என்றார்கள் பா.ஜ.க. தலைவர்கள். வெங்காயம், உருளைக்கிழங்கு, உப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் கடும் விலையேற்றம்தான் இந்தத் தோல்விக்குக் காரணம் என்பதை பா.ஜ.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றனர்.

600 சதவீதம் முதல் 1000 சதவீதம் வரை வரலாறு காணாத அளவில் விலைவாசி உயர்ந்ததில், வியாபாரிகள் மற்றும் வர்த்தகச் சூதாடிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. கடலை எண்ணெய் உற்பத்தியில் இந்தியாவிலேயே முதல் இடம் வகிக்கும் குஜராத்திலேயே எண்ணெய்த் தட்டுப்பாடு தோன்றும் அபாயம் ஏற்பட்டது. கடலை எண்ணெயைப் பிற மாநிலங்களுக்கு அனுப்பக்கூடாதெனத் தடை விதித்தது குஜராத் பா.ஜ.க. அரசு. ''உலக அளவிலான வர்த்தகச் சுதந்திரம் பற்றிப் பேசும் அரசு, உள்நாட்டில் சுதந்திர வர்த்தகத்தை எப்படித் தடை செய்யலாம்?'' என மடக்கினார்கள் எண்ணெய் வியாபாரிகள். பதுக்குவதும், தட்டுப்பாடான பொருளைக் கொள்ளை இலாபத்துக்கு விற்பதும்தான் வர்த்தகச் சுதந்திரம் என்று பச்சையாக பா.ஜ.க. அரசுக்கு எடுத்துச் சொன்னார்கள் பனியாக்கள். ஓட்டுச்சீட்டு அரசியலின் கட்டாயத்திற்கு உட்பட்டு, சில பதுக்கல் பேர்வழிகளைக் கைது செய்யும் சாகசத்தைக்கூட நிகழ்த்த முடியாமல், பனியாக்களிடம் தின்ற உப்புக்கு விசுவாசமாக நடந்து கொண்டது பா.ஜ.க.

காங்கிரசிற்கோ இந்த விலைவாசி உயர்வு ஒரு வரப்பிரசாதம். பா.ஜ.க. கூட்டணி, தன்னுடைய உள்முரண்பாடுகளால் தானே கவிழுமேயன்றி, நாங்கள் கவிழ்க்க மாட்டோம் என்று 'கண்ணியமாக'ப் பேசிவந்த காங்கிரசு பெருச்சாளிகள், விலைவாசிக் கொடுமையை மக்கள் அனுபவித்த போதும் 'கண்ணியமாகவே' மவுனம் சாதித்தார்கள். குப்பையைப் போலத் துடைத்தெறியப்பட்டிருந்த காங்கிரசை, மக்களின் கோபம் எனும் சூறாவளி மீண்டும் 3 மாநிலங்களின் சட்டமன்றப் பதவி நாற்காலிகளில் ஒட்ட வைத்துவிட்டது.

விலைவாசி உயர்வுதான் பா.ஜ.க.வின் இந்தப் படுதோல்விக்குக் காரணம் என்றால், அந்த விலைவாசி உயர்வுக்குக் காரணமான புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக மக்கள் வழங்கிய தீர்ப்பாகவே இதைக் கொள்ள முடியும். ஆனால், இந்த உண்மையை மறைப்பதில் ஓட்டுப் பொறுக்கிகள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர். இந்துத்துவத்திற்கெதிராக எந்த விதமான மக்கள் இயக்கத்தையும் கட்டாத காங்கிரசும், பிற எதிர்க் கட்சிகளும், இந்தத் தீர்ப்பு பா.ஜ.க.வின் சித்தாந்தத்திற்குக் கிடைத்த தோல்வி எனச் சித்தரிப்பதன் மூலம், இந்து மதவெறிக்கெதிராக இனிமேலும் தாங்கள் எதுவும் செய்யத் தேவையில்லை என்பதை உத்திரவாதப்படுத்திக் கொள்கின்றனர்.

காங்கிரசுக்கு வால் பிடிப்பதையும் தோள் கொடுப்பதையுமே தங்களது பாரம்பரியச் செயல் தந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வரும் 'இடது', வலது போலி கம்யூனிஸ்டுகளோ, காங்கிரசைப் பிரதமர் பதவியில் அமர்த்துவதற்காக ஒரு மூன்றாவது அணியை உருவாக்கி வருகின்றனர். இவ்வாறு உருவாகும் மூன்றாவது அணி, காங்கிரசை ஆட்சியில் அமர்த்தியபின், அதற்கெதிரான போராட்டத்தினூடாக வளர்ந்துவிடும் என்றும் கோமாளித்தனமாக விளக்கமளிக்கின்றனர்.

பாரதீய ஜனதாவை அரசியல் அரங்கிலிருந்து விரட்ட வேண்டுமென்று உண்மையிலேயே விரும்புகிறவர்கள் தெளிவாகச் சிந்திக்க வேண்டிய தருணமிது. போலி கம்யூனிஸ்டுகளின் கருத்துப்படி பா.ஜ.க.விற்கும் காங்கிரசுக்கும் உள்ள வேறுபாடு என்ன? இரண்டுமே தனியார் மயத்தைத் தீவிரமாக அமல்படுத்தும் கட்சிகளெனினும், பாரதீய ஜனதா இந்து மதவெறிக் கட்சி; காங்கிரசோ ஓப்பீட்டளவில் மதச்சார்பற்ற கட்சி. காங்கிரசுக்கும் மூன்றாவது அணிக்கும் உள்ள வேறுபாடு என்ன? தனியார்மயக் கொள்கையில் வேறுபாடு ஏதும் இல்லை என்பது மட்டுமல்ல, இவ்விசயத்தில் முன்னோடியே மூன்றாவது அணிதான்! 'மார்க்சிஸ்டுகள்' கருத்துப்படி மதச்சார்பின்மையில் மூன்றாவது அணி சொக்கத் தங்கம்.

வேறு வார்த்தைகளில் சொன்னால், தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கொள்கையை அமல்படுத்துவதற்கும், மைய அரசு மதச்சார்பற்ற ஜனநாயக அரசாக இருப்பதற்கும் எவ்வித முரண்பாடும் இல்லை என்பதுதான் போலிகளின் நிலை. தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற கொள்கையின் கீழ் பன்னாட்டு நிறுவனங்கள் மூலதனத்தை ஒன்று குவிக்கும் போது, பொருளாதாரத் துறையில் தனியார், அந்நிய மூலதனம் ஏகபோகச் சர்வாதிகாரம் செய்யும்போது; அரசியலில் ஜனநாயகம் தழைத்தோங்கும் என்று கூறுபவர்கள் கடைந்தெடுத்த அயோக்கியர்கள்; அதை நம்புகிறவர்கள் ஏமாளிகள்.

உலக வர்த்தகக் கழகம் வெளியில் இருந்தபடியே நாட்டின் இறையாண்மையைக் கட்டுப்படுத்துகிறது; இந்து மதவெறிக் குண்டர் படைகளோ வீதியில் இறங்கி நின்று நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை ஏளனம் செய்கின்றனர். ஏகாதிபத்திய மூலதனம், இந்துத்துவம் ஆகிய இரண்டிற்கும் எதிரான போராட்டம் நாடாளுமன்றத்தில் அல்ல, வீதியில்தான் நடத்தப்பட்டாக வேண்டும் என்பது காலம் அளித்துள்ள தீர்ப்பு.

படிப்பகம்

## ஈராக் மீதான தாக்குதல்:

# ஒடுக்கப்படும் நாடுகளுக்கு அமெரிக்காவின் மிரட்டல்

மாபெரும் கடல்களையும், பலவீனமான அண்டை நாடுகளையும் எல்லைகளாகக் கொண்டிருக்கும் அமெரிக்கா, தனது பாதுகாப்பிற்காக மிகப் பெரும் ஆயுதப் படையை வைத்திருப்பது ஏன்? அமெரிக்காவின் தோற்றத்திலேயே, ஆக்கிரமிப்பு என்பது அதன் இரத்தத்தோடு கலந்து விட்ட ஒன்று என்பதுதான் அதற்கான காரணம். செவ்விந்தியர்களை அழித்து கனடாவிற்கு விரட்டியது; கனடாவை அச்சுறுத்தி பல வட மாநிலங்களைச் சேர்த்தது; மெக்சிக்கோவுடன் போர் நடத்தி நியூமெக்சிகோ மாநிலத்தைப் பறித்தது; ரசிய ஜாரிடமிருந்து மலிவான விலையில் அலாஸ்காவைப் பெற்றது என்று பணம், படை மூலம் அச்சுறுத்தியும், ஆசை காட்டியும்தான் இன்றைய அமெரிக்கா உருவானது. பின்பு, ஏகாதிபத்தியமாக, மேல்நிலை வல்லரசாக வளர்ந்த நிலைக்கேற்ப, அதன் ஆக்கிரமிப்புக் குணமும் நாடு, கண்டம் தாண்டி, உலகெங்கும் படர்ந்திருக்கிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், உலகெங்கும் அமெரிக்கா நடத்தியிருக்கும் ஆக்கிரமிப்பில் 43-ஆவது சம்பவம்தான், தற்போதைய ஈராக் மீதான தாக்குதலாகும். இதை எதிர்த்து பல நாடுகளும், பத்திரிகைகளும் அறிக்கை வெளியிட்டிருக்கின்றன. அதிலும், குறிப்பாக இரண்டு வித கருத்துக்கள் மட்டும் உலக மக்களிடம் திணிக்கப்பட்டு, ஒரு பொதுக் கருத்தாக உருவாக்கப்படுகிறது. ஒன்று, ''ஈராக்கின் அதிபர் சதாம் உசேன் தவறிழைத்தாலும் பேசித் தீர்க்கலாம், குண்டு போட்டு ஈராக்கின் அப்பாவி மக்களைக் கொல்வது தவறு;'' இரண்டு, ''மோனிகா லிவின்ஸ்கி வழக்கில் சட்டம், நீதிக்கு முன்பாக கிளிண்டன் தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டார்; அவரைப் பதவி நீக்கக் கோரும் தீர்மானம் அமெரிக்கா பிரதிநிதிகள் சபையில் நிறைவேற இருந்தது. இதிலிருந்து திசை திருப்பி தன் பதவியைக் காப்பாற்ற ஈராக் மீது தாக்குதலை அறிவித்தார், எனவே இது தவறு.''

அமெரிக்காவும் இங்கிலாந்தும் இணைந்து நடத்திய இத்தாக்குதலை ஆதரிக்கும் ஏனைய வல்லரசுகளையும், அவற்றின் அடிமைகளையும் எளிதில் இனங்காண முடியும். ஆனால், பொதுவான மனித நேயத்தையும், கிளிண்டனின் தனி நபர் முடிவாகவும் வைத்து எதிர்ப்பதைப் போல் உருவாக்கப்படும் சமரசக் கருத்துக்கள்தான் பிரச்சினைக்குரியது.

அமெரிக்க அதிபர் ஒருவர், தனது தேர்தல் பிரச்சாரத்தில் தொடங்கி, அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், பத்திரிகையாளர்களிடம் பேசுவது, ஏழை குழந்தைகளிடம் நடிப்பது, பொது மக்களிடம் உரையாடுவது, பிற நாட்டுத் தலைவர்களிடம் இராஜாங்க முறைப்படி பேசுவது வரை அவரின் அங்க அசைவுகளும், வார்த்தை நயங்களும் விளம்பர நிறுவனங்களால் பயிற்றுவிக்கப்படுகின்றன. இது வடிவம் மட்டும்தான்; உள்ளடக்கமான அரசியல், பொருளாதாரக் கொள்கைகளை அமெரிக்காவின் பன்னாட்டு நிறுவன முதலாளிகள் தீர்மானிக்கின்றனர். பென்டகன் என்ற இராணுவத் தலைமையகமும், சி.ஐ.ஏ. என்ற உளவு நிறுவனமும், வெள்ளை மாளிகை என்ற அதிபரின் அதிகார வர்க்க நிர்வாகத் தலைமையகமும் இணைந்தே முதலாளிகளின் கொள்கைகளை அரசு என்ற முறையில் நடைமுறைப் படுத்துகின்றன. இதில் அதிபர் என்ற தனிநபரின் பங்கு பத்தோடு பதினொன்றுதான்.

சி.ஐ.ஏ.வும், பென்டகனும், அமெரிக்க மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கத்தின் கட்டுப்பாடு இன்றியே, சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் செயல்பட சட்டபூர்வ உரிமை பெற்றவை. இதைப் பயன்படுத்திக் கொண்டு, சி.ஐ.ஏ.வும், பென்டகனும் தாங்களே திட்டமிட்டு நடத்திய சதிகள் ஏராளமுண்டு. அமெரிக்காவை எதிர்த்த சிலி நாட்டு அதிபர் அலெண்டோ படுகொலை செய்யப்பட்டதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

மேலும், பல அதிபர்கள் வெளிப்படையாகவே அமெரிக்க ஏகபோக முதலாளிகளின் தரகனாகச் செயல்பட்டிருக்கின்றனர். 80-களில் அமெரிக்க ஆயுதத் தளவாட முதலாளிகளின் தரகனாகப் பதவியேற்ற ரீகன் அதற்கோர் சான்று. இவர் காலத்தில் அமெரிக்காவின் பொருளாதாரம் இராணுவமயமாக்கப்பட்டது. ஆயுத ஏற்றுமதி விற்பனையை அதிகரிப்பதற்காக, பல்வேறு பிராந்தியங்களில் நாடுகளுக்கு இடையே மோதலைத் தூண்டிவிட்டது. இந்தியா - பாகிஸ்தான் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு ஆயுத விற்பனை; அமெரிக்கா எதிர்ப்பு கொண்ட ஈரானை அடக்கி வைக்க, அதன் அண்டை நாடான ஈராக்கிற்கு ஆயுத ஏற்றுமதி. எனவே, அமெரிக்கா அதிபர் தனிநபர் என்ற முறையில், அவரின் பங்கு ஓரளவிற்கு மேல் பரிசீலிப்பதற்கு தகுதியற்றது.

நிகராகுவா, மெக்சிகோ, சிலி, கிரனாடா, கொரியா, வியட்நாம், லிபியா எனப் பல நாடுகளில், பல்வேறு வடிவங்களில் ஆக்கிரமிப்பு செய்ததுதான் அமெரிக்காவின் மேலாதிக்க வரலாறு. எனவே, கிளின்டன்கள், மோனிகாக்கள் வரலாம் போகலாம். ஆனால் அமெரிக்காவின் மேலாதிக்க வெறி மட்டும் மாறாது என்பதுதான் உண்மை.



ஏகாதிபத்தியங்களின் உலகமயமாக்கம் கொள்கையால், சிறுகச் சிறுக பசியால் செத்துக் கொண்டிருக்கும் ஆப்பிரிக்க கண்டத்து மக்கள்.

இரண்டாவதாக, ஈராக் மக்கள் கொல்லப் படுகிறார்கள் என்பதற்காக வருத்தப்படுபவர்களைப் பார்ப்போம். தற்போதைய குண்டு வீச்சு ஒரு வெளிப்படையான போர் நடவடிக்கை என்பதால் உயிரிழப்பு, பளிச்செனத் தெரிகிறது. ஆனால், ஆப்பிரிக்காவில் பஞ்சத்தாலும், இனக்குழுக்களுக்கு இடையேயான உள்நாட்டுச் சண்டையாலும் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப் படுகிறார்கள். இக்கண்டத்து நாடுகள் பல நட

மாடும் எலும்புக் கூடுகளையே மக்களாகக் கொண்டுள்ளன. இதற்கும் வல்லரசுகளின் உலகமயமாக்கமும், ஏகாதிபத்திய காலனியக் கொள்கையின் எதிர் விளைவான இனக்குழு மோதலும்தான் காரணம் என்பது நம் கண் முன்னே தெரிவதில்லை.

அதேபோல் வல்லரசுகளின் பிடியில் சிக்கிய தென் கிழக்காசிய நாடுகளின் பொருளாதாரம் இவ்வாண்டில் சீர்குலைந்தது. வேலையின்மை, விலைவாசி உயர்வு, ஆலைமூடல், பண வீக்கம் - இவை மக்களின் அன்றாட வாழ்க்கையை கேள்விக் குறியாக மாற்றிவருகின்றன. சொல்லப் போனால், மேல்நிலை வல்லரசுகளின் வெளிப்படையான இராணுவத் தாக்குதலைவிட, அமைதியான மூலதன ஆட்சிதான் ஏராளமான மக்களை மெல்ல மெல்லக் கொல்லுகிறது; பஞ்சைப் பராரிகளாக மாற்றுகிறது.

எனவே, ஈராக் மீதான தாக்குதலோ, ஆப்பிரிக்க பஞ்சமோ, ஆசிய நாடுகளின் பொருளாதாரச் சீர்குலைவோ இவற்றில் ஊடாடி வரும் வல்லரசுகளின் மேலாதிக்கக் கொள்கையை இனங்கண்டு எதிர்ப்பதுதான் முக்கியம். அப்போதுதான் ஏகாதிபத்திய பேரழிவிலிருந்து உலகைக் காப்பாற்ற அடியெடுத்து வைக்க முடியும். மாறாக, மனித நேயக் கண்ணீர் விடும் ஆட்சியாளர்கள் அனைவரும், குண்டு போடாமல் ஈராக்கை ஆக்கிரமிக்கக் கூடாதா என்று அமெரிக்காவின் காதில் உபதேசம் செய்கிறார்கள். மேலும், அத்தகைய நாடுகளின் அரசுகளும் மேற்படி அமைதி ஆக்கிரமிப்பை ஏற்றுக் கொண்டு வல்லரசு நாடுகளிடம் சரணடைந்தவைதான்.

தன் மேலாதிக்கத்தை ஏற்காத நாடுகளுக்கு, ஈராக்கின் கதிதான் ஏற்படும் என வெளிப்படையாக எச்சரிக்கும் அமெரிக்காவின் ஈராக் ஆக்கிரமிப்பையும் அதன் பின்னணியையும் முதலில் தெரிந்து கொள்வோம். அதற்கு வளைகுடா நாடுகளின் அளப்பரிய வளமான எண்ணெய் பொருளாதாரத்தையும், அதனை ஒட்டி அந்நாடுகளின் அரசியல் வரலாற்றையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

* * *

உலகின் எண்ணெய் வள இருப்பிலும், அதன் ஏற்றுமதியிலும் வளைகுடா அரபு நாடுகள்தான் பெரும் பங்கை வகிக்கின்றன. பெட்ரோலியப் பொருட்களின் பெரும் நுகர்வோராக, அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் ஏகாதிபத்தியங்களும், சிறு பகுதியை ஏழை உலக நாடுகளும் இறக்குமதி செய்கின்றன. எண்ணெய் சுத்திகரிப்புக்குத் தேவைப்படும் தொழில் நுட்பத்திற்கு அரபு நாடுகள் பன்னாட்டு நிறுவனங்களைச் சார்ந்துள்ளன.

எண்ணெய் விற்பனையின் மூலம் கிடைக்கும் பெரும் பணம் அரபு சேக்குகளால் ஐரோப்பிய, அமெரிக்க வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் போடப்பட்டுள்ளன. தற்போது எண்ணெய் ஏற்றுமதியில் கிடைக்கும் வருமானத்தைவிட, மேற்கத்திய நிதி நிறுவனங்கள் மூலம் வரும் வட்டியும், இலாப ஈவும்தான் இந்நாடுகளுக்கு அதிக வருமானத்தைத் தருகின்றன. பணக்கார அரபு நாடுகள் பலவும் வல்லரசுகளை ஆதரிப்பதன் இரகசியம் இவைதான்.

www.padippakam.com

எண்ணெய் வளம் ஒருபுறமிருக்க, ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுக்கு நேரடிக் கடல் வழியை ஏற்படுத்தும் சூயஸ் கால்வாயும் இப்பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை அதிகரிக்கிறது. 60, 70களில் நடந்த அரபு - இஸ்ரேல் போரின் போதுதான் எண்ணெய் வள நாடுகள் ஏற்படுத்தும் பாதிப்பை உணர்ந்து, வல்லரசு நாடுகள் அங்கே தமது நேரடி நடவடிக்கையை அதிகரித்தன. இந்நிலையில் தனது அடியாளான இஸ்ரேலை, ஏனைய அரபு நாடுகள் பொதுவில் வெறுப்பதைக் கண்ட அமெரிக்கா, அரபு நாடுகளிலேயே சிலரைக் கையாளாக மாற்ற விரும்பியது.

ஈரானில் அமெரிக்கா உதவியுடன் ஆட்சி நடத்தி வந்த மன்னர் ஷாவை கொமெய்னியின் தலைமையிலான இஸ்லாமியப் புரட்சி தூக்கி எறிந்தது அமெரிக்காவிற்கு பெரும் பின்னடைவாகும். இந்நிலையில் ஈரானின் அண்டை நாடான ஈராக்கில் ஆட்சியைப் பிடித்த சர்வாதிகாரியான சதாம் உசேனை அமெரிக்கா குளிப்பாட்ட ஆரம்பித்தது. ஈராக்கின் பெரும் எண்ணெய் வர்த்தகத்தை அனுபவித்துக் கொண்டு, மாற்றாக நவீன இராணுவத் தளவாடங்களை வல்லரசுகள் விற்பனை செய்ய ஆரம்பித்தன. ஈராக்கின் பொருளாதாரம் இராணுவமயமாக மாற்றப்பட்டது. சதாமை சர்வாதிகாரி, பயங்கரவாதி என இன்றைக்கு வசைபாடும் அமெரிக்காதான், சதாமை சர்வாதிகாரியாகவும், ஈராக்கை இராணுவ ரீதியிலான பிராந்தி வல்லரசாகவும் மாற்றியது என்பதுதான் முக்கியமான விசயமாகும்.



சி.ஐ.ஏ. சதி செய்து கொன்ற சிலி நாட்டின் முன்னாள் அதிபர் அலெண்டே (இடது)வும், அமெரிக்க கைக்கூலி பினோசெட்டும்.

அமெரிக்க எதிர்ப்பில் உறுதியாக இருந்த ஈரானை, ஈராக்கும் ஏனைய அரபு நாடுகளும் எதிர்த்தன. ஈரானின் பாணியில் தன் நாட்டிலும் ஒரு இசுலாமிய புரட்சி வந்துவிடக் கூடாது என்பதற்காகவும், பிராந்திய மேலாதிக்கத்திற்காகவும் ஈராக் அண்டை நாடான ஈரானின் மீது 80-களில் படையெடுத்தது. ஏனைய அரபு நாடுகளும், அமெரிக்கா, ரசியாவும் ஈராக்கை ஆதரித்து பொருள், ஆயுத உதவிகள் செய்தன.

8 ஆண்டுகள் நடைபெற்ற போரில் இருதரப்பிலும் 10 லட்சம் பேர் மாண்டனர். 15 லட்சம் பேர் முடமாக்கப்பட்டனர். ஈராக் பெரும் கடன் சுமையில் சிக்கிக் கொண்டது. போரினால் பெற்ற சுமையை போரினாலேயே தீர்த்துக் கொள்ள சதாம் உசேன் விரும்பினார். போருக்காக கடன் கொடுத்த குவைத்திற்கு நாமம் சாத்தவும், அதன் அபரிதமான எண்ணெய் வளத்தை அபகரித்து, வளைகுடாவில், "அகண்ட அரபு தேசத்தின்" சர்வாதிகாரியாக விரும்பிய சதாம் 91-இல் குவைத்தை ஆக்கிரமித்தார். வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதையாக, குவைத்தை ஆக்கிரமித்த ஈராக்கிற்கு பாடம் புகட்டவும், வளைகுடாவில் ஆயுதங்களை வாங்கிக் குவித்து வைத்துள்ள ஒவ்வொரு நாடும் சட்டாம் பிள்ளையாக மாறிவிட விரும்பக் கூடாது என எச்சரிக்கும் விதத்திலும் அமெரிக்கா வளைகுடாப் போரைத் தொடுத்தது.

வளைகுடாப் போரின் மூலம் ஈராக்கின் இராணுவ தளத்தை அடித்து நொறுக்கிய அமெரிக்கா, அந்நாட்டைப் பொருளாதார ரீதியாகப் பலவீனப்படுத்துவதற்காக பொருளாதாரத் தடைகளை விதித்தது. மக்களை நெருக்கடிக்குள் தள்ளுவதன் மூலம் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு, ஈராக் மக்கள் சதாமைத் தூக்கி எறிவார்கள் என்ற அமெரிக்காவின் நப்பாசைதான் இந்தப் பொருளாதாரத் தடையின் பின்னுள்ள அரசியல். ஐ.நா. சபை மூலம் அமெரிக்கா திணித்த அனைத்து நிபந்தனைகளையும் 8 ஆண்டுகளாக ஈராக் ஏற்று நடந்தது. இருந்தும், ஈராக்கில் பொருளாதாரத் தடைகளை அகற்றுவது அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கு உகந்ததாக இல்லை.

காரணம், 91 போருக்குப் பிறகு, பல அரபு நாடுகள் பெரும் ஆயுதத் தளவாடங்களை வல்லரசு நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்கின்றன. தற்போது, உலகின் மிகப் பெரும் இராணுவத் தளவாடங்கள் இறக்குமதி செய்யும் நாடு சவுதி அரேபியாதான் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். எனவே, ஈராக் பற்றிய பீதி ஏனைய அரபு நாடுகளிடம் தொடர வேண்டும் என்பதைத்தான் அமெரிக்கா விரும்புகிறது.

மேலும், தற்போதைய பொருளாதார மந்த நிலையில் கச்சா எண்ணெயின் உலக அளவிலான விலை குறைவாக இருக்கிறது. ஈராக் பழைய நிலையை அடைந்து இயங்க ஆரம்பித்தால், அதன் எண்ணெய் ஏற்றுமதி தற்போதைய விலையை மேலும் குறைக்கும். இதனால் அரபு நாடுகளின் ஆயுத இறக்குமதி குறையும். மேலும், உலகின் எண்ணெய் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கும், இந்தோனேசியாவும், மெக்சிகோவும் ஐரோப்பிய, அமெ



படிப்பகம்

www.padippakam.com

ரிக்க வங்கிகளிடம் பெரும் கடனைப் பெற்று அடைக்க முடியாமல் திணறுகின் றன. எண்ணெய் விலை குறையும் போது இந்நாடுகள் கடனைத் திருப்ப முடியாமல் போகும். இவையே அமெரிக்காவின் தற் போதைய ஆக்கிரமிப்பின் பொருளாதாரப் பின்னணி.

இந்நிகழ்ச்சிப் போக்கில் ஈராக் மீது வலிந்து குற்றம் சாட்டி அமெரிக்கா நடத்தி வரும் நயவஞ்சக நாடகம், நேர்மையும் ஜனநாயக உணர்வும் கொண்ட எவரையும் அதிர்ச்சியடைய வைக்கும் உண்மை, நீதி, அறம், "இறை யாண்மை எல்லாம் அமெரிக்காவிற்கு கால் தூசுதான் என்ப தையும், நாடுகளுக்கி டையே நல்லுறவு ஏற்ப டுத்த ஐ.நா. சபை வகுத்திருக்கும் சாசன விதிகளை இன்று வரை தொடர்ந்து திமிருடன் மீறும் ஒரே பயங்கர வாத நாடு அமெரிக்கா தான் என்பதையும் நாம் அறியும்போது ஆத்திரம் கொள் வோம்.

91 போரில் வெற்றி பெற்ற கையோடு, கடுமை யான நிபந்தனைகள் ஈராக் மீது விதிக்கப்பட் டன. அதன் தெற்கு, வடக்கு வான் வெளி யில் ஈராக் விமானங் கள் பறக்கக் கூடாது என்பதோடு, இழந்து போன இராணுவ வலி மையை ஈராக் மீண் டும் பெறக் கூடாது என்பதற்காக ஈராக் ஐ.நா. சிறப்புக் கமிஷ னின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட் டது.

மறைமுகமாக அமெரிக்கா தெரிவு செய்த பல்வேறு நாடுக ளின் உறுப்பினர்கள் அடங்கிய ஐ.நா. சிறப் புக் குழு 91-ஆம் ஆண்டிலிருந்து ஈராக் கில் டேரா போட்டு இன்று வரை ஆயுத சோதனைகளை நடத்திக் கொண்டுள்ளது. ஈராக்கின் சகல இராணுவ நிறுவனங்களி லும் ஆட்கொல்லி இரசாயன - உயிரியல் ஆயுதங்கள் இல்லை என ஐ.நா. சிறப்புக் குழு அறிவித்த பின்தான் படிப்படியாக பொருளாதாரத் தடைகள் விலக்கப்படும் என வல்லரசு நாடுகள் அறிவித்தன. இக் குழு அமெரிக்காவின் ஒரு துருப்புச் சீட்டா கும்.

உண்மையில் நாடுகளின் இறையாண் மையை [illegible] நடத் தும் ஒவ்வொரு அத்து மீறலுக்கும் ஐ.நா. சபை தான் மனித உரிமை, உலக அமைதி என்று, நியாயம் பேசி வழி ஏற்படுத்திக் கொடுக்கிறது. பாதுகாப்பு கமாண்டோக் கள் இணையுடன் பவனி வரும் அரசுத் தலைவர்களுக்கு முன்னே பாதையை சுத் தப்படுத்தும் பைலட் கார்களின் பணியைத் தான் ஐ.நா. சபை அமெரிக்காவிற்கு செய்து வருகிறது.

பயங்கரவாத, பிரிவினைவாத பீதி யூட்டி காங்கிரஸ் கும்பல் அரசியல் ஆதா யம் அடைவதற்காக ஜெயின் கமிஷன் என்ற அரட்டை மடம் எப்படி பயன்பட் டதோ, அப்படித்தான் ஐ.நா. சிறப்புக் குழு ஆயுத சோதனை பீதியூட்ட அமெரிக்கா விற்கு பயன்படுகிறது. ஈராக்கின் ஏவுக ணைகளில் ஆட்கொல்லி இரசாயனப் பொருள் உள்ளது என அமெரிக்க இரா ணுவ ஆய்வுக் கூடம் கறாராக தெரிவித் தது. ஆனால் பிரான்ஸ் மற்றும் சுவிட்சர் லாந்து நாட்டின் ஆய்வுக் கூடங்கள் அதே ஏவுகணைகளில் இரசாயன ஆட்கொல்லி இல்லை எனச் சான்றிதழ் கொடுத்திருக்கி றது. இதில் ஐ.நா. சிறப்புக் குழு அமெரிக்கா வின் முடிவைத்தான் தலை மேல் ஏற்றிருக் கும் என்பதில் ஆச்சரியமில்லை. அதே போல சர்வதேச அணுசக்தி நிறுவனம் பல மாதங்கள் சோதனை நடத்தி, ஈராக்கில் அணு ஆயுதம் தயாரிப்பதற்கான எந்த அடிப்படையும் இல்லை என்றும், சோத னைக்கு ஈராக் நன்கு ஒத்துழைத்தது என வும் அறிவித்துள்ளது. ஆனால் தனது ஆயுத சோதனைக்கு மட்டும் ஈராக் ஒத்து ழைக்கவில்லை என ஐ.நா. சிறப்புக் குழு கூறி வருவதில் என்ன நியாயம் இருக்க முடி யும்?



அமெரிக்காவின் ஆயுதக் கிடங்கில் உள்ள இரசாயன ஆட்கொல்லி ராக்கெட் குண்டுகள் (மேலே); ஈராக்கில் இரசாயன ஆயுதங்கள் உள்ளனவா எனத் "துருவித் துருவிச் சோதனையிடும்" ஐ.நா. சிறப்புக் குழு அதிகாரிகள். மாமியார் உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடமா?

அதே ஐ.நா. சபையில், ஈராக் மக்க ளின் துயரங்களைக் களைவதற்காக அமைக்கப்பட்ட மனி தாபிமானக் குழுவில் பணியாற்றும் ஒரு அதி காரி கூறுகிறார்: "ஈராக் கில் பெரும் எண்ணிக் கையான மக்களைக் கொல்லும் இரசாயன ஆட்கொல்லியாக ஐ.நா. சிறப்புக் குழு தான் இருக்கிறது. ஏனெனில், பொருளா தாரத் தடைகளை நீட் டிக்க வைத்து இலட்சக் கணக்கான ஈராக் மக் கள் சாவதற்கு அக்குழு தான் காரணம்." அமெ ரிக்காவின், ஐ.நா. சிறப்புக் குழுவின் ஓர வஞ்சனையை எதிர்த்து ஐ.நா. மனிதா பிமானக் குழுவின் அமைப்பாளர் டெனிஸ் ஹாலிடே ராஜினாமா செய்து விட்டு, பொருளாதா ரத் தடைகளை அகற்று மாறு உலக நாடுகளை வேண்டிக் கொண்டார்.

அடிப்படை மருந் தின்றி, ஊட்டச்சத்து உணவின்றி ஈராக் குழந்தைகளும், மக்களும் இறந்து போவ தற்கு வல்லரசு பிணந்தின்னிகளே முதற்கா ரணமாவர். கடந்த இரண்டு ஆண்டுகளாக உணவு, மருந்துப் பொருள் மட்டும் இறக்கு மதி செய்யும் அளவிற்கு கச்சா எண் ணெயை ஈராக் ஏற்றுமதி செய்யலாம் எனும் 'உணவிற்காக எண்ணெய்' என்ற திட்டம் ஐ.நா. சபையால் ஏற்கப்பட்டது. ஆனால் இதையும் நிறைவேற்றக் கூடாது என்பதில் சிறப்புக் குழுவில் இடம் பெற்ற அமெரிக்கா, இங்கிலாந்து உறுப்பினர்கள் கவனமாக இருந்தனர்.

www.padippakam.com

இவ்வளவு கொடுமைகளையும் வேறு வழியின்றி ஏற்றுக் கொண்ட ஈராக்கை, மேலும் ஆத்திரம் கொள்ள வைப்பதற்கு, ஆயுத சோதனை செய்யும் ஐ.நா. சிறப்புக் குழுவுக்குத் தலைவராக ரிச்சர்டு பட்லர் என்பவர் பொறுப்பேற்றார். ஆஸ்திரேலியரான அவர், தனது கடந்த கால செயல்பாடுகள் மூலம் தீவிர அமெரிக்க ஆதரவாளர் என்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டவர்தான். மேலும், இவர் தலைமையிலான குழு, சோதனை என்ற பெயரில் ஈராக்கின் இராணுவ நிலையங்களை உளவறிந்து தகவல்கள் சேகரித்தது; சதாம் உசேனுக்கு எதிரான அதிருப்தி பிரிவினருடனும் உறவும், தொடர்பும் கொண்டது. சேகரித்த உளவுத் தகவல்களை இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் அளித்து, பின் அம்பலப்பட்ட விவகாரம் ஒன்றில் - ஸ்காட் ரிட்டர் என்ற குழு உறுப்பினர் பிடிபட்டு, அதனால் பதவி விலகினார். மேலும், இவர் முன்னாள் அமெரிக்க உளவுத்துறை அதிகாரி என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே அமெரிக்க உளவாளிகள் அடங்கிய ஐ.நா. குழுவை மாற்றி அமைக்க வேண்டும் என ஈராக் பல முறை மன்றாடியும் பயனில்லை.

சோதனையும், பொருளாதாரத் தடையும் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலையில், ஐ.நா. சிறப்புக் குழுவுக்கு ஒத்துழைக்க முடியாது என கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் ஈராக் அறிவித்தது. உடனே ஐ.நா. செயலர் கோபி அன்னான் பாக்தாத் சென்று, ஐ.நா.வுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும், ஆறு மாதங்களில் பொருளாதாரத் தடை விலக்குவது பற்றி முடிவெடுக்கப்படும் என்றும் கேட்டுக் கொண்டார். அதன்படி ஈராக் நடந்தது. ஐ.நா. நடக்கவில்லை. நடக்காமல் இருக்குமாறு அமெரிக்கா பார்த்துக் கொண்டது.

ஈராக்கில் 300-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை செய்த ஐ.நா. குழு, 5 இடங்களில் மட்டும் சோதனை நடத்த ஈராக் அனுமதிக்கவில்லை என்பதை, மொத்தத்தில் ஈராக் ஒத்துழைக்கவில்லை என மட்டையடியாக அறிவித்தது. "சதாமின் அரசியல் கட்சியான பாத் கட்சியின் தலைமையிடம், வெல்டிங் பயிற்சி அளிக்கும் ஒரு கல்வி நிறுவனம், கல்லூரி ஒன்றில் அறிவியல் பிரிவு மாணவர்களிடம் பேட்டி எடுக்க முயன்றது, ஈராக்கின் வார விடுமுறையான வெள்ளியன்று இரு நிறுவனங்களில் சோதனையிட நிர்ப்பந்தம்" - இவைதான் ஈராக் ஆட்சேபம் தெரிவித்த இடங்களாகும். கல்லூரி மாணவர்களிடம் எதற்கு பேட்டி? விடுமுறை தவிர்த்து வேலை நாளன்று சோதனையிடுங்கள் என்று ஈராக் கூறியதைத்தான், சோதனையிட ஈராக் அனுமதி தரவில்லை என்று ஐ.நா. சிறப்புக் குழு ஊதிப் பெருக்கியது. 5 பைசாவுக்கு பெறாத இக்காரணங்களை வைத்துத்தான், பின்பு அமெரிக்காவும், இங்கிலாந்தும் ஈராக்கில் குண்டு போட்டன.

தொடரும்

# ஜி.டி. ரங்கா - தொழிலதிபர் போர்வையில் உலா வரும் சமூக விரோதி!

ஜி.டி. ரங்கா, இவரது மனைவி மங்கள ரங்கா இருவருமாக ஜி.டி.ஆர். வென்சர்ஸ் குழுமம் என்ற பெயரில் சென்னையில் பல்வேறு ஆயுத்த ஆடை ஏற்றுமதி நிறுவனங்களை நடத்தி வந்தனர். வருமான வரி ஏய்ப்புக்கும், தொழிலாளிகளை ஏய்ப்பதற்கும், வங்கி - நிதி நிறுவனங்களை மோசடி செய்வதற்குமே 14 பெயர்களில் நிறுவனங்களை நடத்தி வந்தனர். இவைகளில் 11 நிறுவனங்கள் ஒரே கட்டிடத்தில், ஒரே அலுவலகத்தில் இயங்கின. இவைகளில் மோசடி செய்து மூடியவை போக இன்று இருப்பவை 4 மட்டுமே.

இந்நிறுவனங்களில் தொழிற் சங்கமோ, உரிமைகளோ கிடையாது. அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச கூலியும் கிடையாது. பணி நிரந்தரமும் கிடையாது. சில நாட்களில் கூடுதல் நேரம் வேலை செய்தால் இரட்டிப்பு சம்பளம் கிடையாது. விடுமுறை கிடையாது. பணி நீக்கம் செய்தால் கணக்கு முடித்து பணம் தருவதும் கிடையாது.

இந்தத் தொழிலாளர் விரோதப் போக்குகளை தொழிற்சங்க ஒற்றுமையில்தான் முறியடிக்க முடியும் என்று உணர்ந்த தொழிலாளர்கள், ஜி.டி.ஆர். வென்சர்ஸ் குரூப் கம்பெனி எம்ப்ளாய்ஸ் யூனியன் என்ற தொழிற் சங்கத்தை நிறுவினார்கள்.

சங்கம் தொடங்கியவுடன், நிர்வாகம் தனது பழிவாங்கும் நடவடிக்கையைத் தொடங்கியது. ஜி.டி. ரங்கா சங்கப் பொறுப்பாளர்களை அழைத்து விலை பேச முயன்று தோற்றார். அவரின் அடுத்த கட்ட மிரட்டல்களையும் ஒற்றுமையாக இருந்து தொழிலாளிகள் முறியடித்தனர். அதன்பின் வேலை செய்ததற்கான சம்பளம் தருவதையே நிர்வாகம் நிறுத்தியது. திடீரென சங்க முன்னோடிகள் 54 பேருக்கு மட்டும் லே-ஆப் அறிவித்தது நிர்வாகம். இதுபற்றி தொழிலாளர் நல ஆணையத்திற்குத் தெரிவித்து, அவர்களிடமிருந்து முறையான அனுமதியும் பெறவில்லை. தொழிலாளர்களுக்கும் ஒரு மாதத்திற்கு முன்பே அறிவிக்க வேண்டும்.

இந்த சட்டவிரோத லே-ஆப்பை தொழிலாளர்கள் ஒன்றுபட்டு எதிர்த்தனர். சிறுகச் சிறுக ஒவ்வொரு துறையாக மூடி 20.11.'98 அன்று நிறுவனத்தை இழுத்து மூடிவிட்டான். 54 தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கி விட்டதாகக் கூறினான். தினமும் தொழிலாளர்கள் ஆலை முன் கூடி முழக்கங்கள் எழுப்பி போராடத் தொடங்கினர்.

தொழிலாளர் நலத்துறை ஆணையரிடம் சட்ட விரோத லே-ஆஃப் பற்றியும் 54 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததைப் பற்றியும் தொழிற் சங்கம் முறையிட்டது. இரு தரப்பினரையும் கூட்டி, பிரச்சினையைப் பேசித் தீர்க்க தொழிலாளர் இணை ஆணையர் முயன்றதையும் ரங்கா புறக்கணித்தான்.

ரங்காவின் முயற்சி எல்லாம், சம்பளத்தையும் சேமிப்புகளையும் தராமல் தொழிலாளர்களை விரட்டியடித்து, தொழிற் சங்கத்தையும் இல்லாமலாக்குவதுதான். இதுவரை ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை விரட்டியடித்து, அவர்களின் சம்பளத்தையும் சேமிப்புகளையும் ஏப்பம் விட்டுள்ளான்.

ஏனெனில், சேம நலநிதி அலுவலகத்தில் பணம் கட்டுவதற்காக தொழிலாளர்கள் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படும். ஆனால் சேம நலநிதி அலுவலகத்தில் பணம் கட்டுவதில்லை. இந்த முறைகேடு பற்றி இம்முறை தொழிற் சங்கம் மூலம் புகார் செய்யப்பட்டு, அதன் மீதும் வழக்கு பதியப்பட்டுள்ளது.

கிண்டி போலீசார் தங்களுக்கு நியாயம் கோரி மறியல் செய்த தொழிலாளர்களை அப்புறப்படுத்த முயன்ற போது, தொழிற் சங்கம் பொறுப்பாளர்கள், தமது தரப்பு வாதத்தை முன் வைத்து உறுதியாக நிற்கவே, போலீசும் ஏதும் செய்ய முடியாமற் போனது.

துண்டுப் பிரசுரம் அச்சிட்டும், சுவரொட்டி மூலமும் ஜி.டி. ரங்காவின் அடாவடித் தனங்களை தொழிற் சங்கம் திரை கிழித்தது. ஜி.டி. ரங்காவோ உயர் போலீசு அதிகாரிகள் மூலம் கிண்டி போலீசாரைப் போராடும் தொழிலாளர்களைக் கைது செய்ய நிர்ப்பந்தித்தான். ஆலை வாயிலில் சுவரெழுத்து செய்த காரணத்தை வைத்து, 30.11.'98-ல் தொழிலாளர்களைக் கைது செய்த போலீசு, வேறு வழியின்றி மாலையில் விடுவித்து விட்டது.

தொழிலாளர் நல ஆணையம், தொழிலாளர்களுக்கு மூன்று மாதமாகத் தரப்படாமல் உள்ள சம்பளத்தைத் தர வேண்டும் என உத்தரவிட்டும் ரங்கா சம்பளம் தரவில்லை.

தொழிலாளர்களை மட்டுமின்றி, இந்தியன் வங்கியில் ரூ. 28 கோடி மோசடி செய்துள்ள ஜி.டி. ரங்கா, பஞ்சாப் சிந்து வங்கியில் ரூ. 8 கோடியும் "டிக்" நிறுவனத்தில் 5 கோடியும் மோசடி செய்துள்ளான். வங்கிகளை மோசடி செய்ததோடு, மிகப் பெருமளவில் வரி மோசடியும் செய்துள்ளான். மக்கள் சேமிப்பை கோடிக் கணக்கில் மோசடி செய்த இந்த நபர் மீது இதுவரை நடவடிக்கை ஏதுமில்லை.

ஆனால் செய்த வேலைக்கு கூலி தரும்படி போராடும் தொழிலாளர்களை போலீசு கைது செய்கிறது. சட்ட விரோத நிறுவன மூடலுக்குத் துணை நிற்கிறது.

தகவல்:
ஜி.டி.ஆர். வென்சர்ஸ் குரூப் கம்பெனி எம்ப்ளாயிஸ் யூனியன்,
சென்னை.



படிப்பகம்

www.padippakam.com

# சட்டம் என் கையில்! நீதி என் பையில்!!

## ஜெயாவின் ஊழல் கொள்ளைக்கு பா.ஜ.க.வின் வக்காலத்து!

''ஊழல் தடுப்புப் பிரிவு 4(2)-ன் கீழ் ஊழல் வழக்குகளை விசாரிக்க ஒன்றுக்கு மேற்பட்ட சிறப்பு நீதிமன்றங்களை அமைக்கும் கடமையும் பொறுப்பும் மத்திய அரசுக்கு மட்டுமே உள்ளது. மாநில அரசுக்குக் கிடையாது''

தமிழக அரசு ஜெயா - சசி கும்பலின் ஊழல்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைத்தது செல்லாது என ஜெயலலிதா உச்சநீதி மன்றத்தில் தொடுத்துள்ள வழக்கில் மத்திய அரசின் கருத்து இது. ''சிறப்பு நீதிமன்றம் அமைத்தது விதிகளுக்குப் புறம்பானது. இது அதிகார முறைகேடு'' என மத்திய அரசு குற்றஞ்சாட்டி உள்ளது.

ஜெயலலிதா உயர்நீதி மன்றத்தில் 'சிறப்பு நீதி மன்றம் அமைத்தது செல்லாது' என்று தொடுத்த வழக்கில், 'தமிழக அரசு சிறப்பு நீதிமன்றம் அமைத்தது சரிதான்' என 678 பக்கங்களில் விரிவாக விளக்கி நவம்பர் துவக்கத்தில் உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. உடனே ஜெயலலிதா உச்சநீதி மன்றத்தில் முறையிட்டு, சிறப்பு நீதி மன்ற விசாரணைக்கும் தடை விதிக்கக் கோரினார்.

வழக்கை விசாரணைக்கு ஏற்ற உச்ச நீதிமன்றம், சிறப்பு நீதிமன்ற விசாரணைக்குத் தடை விதிக்க மறுத்து விட்டது. சிறப்பு நீதிமன்ற விசாரணைக்கு சுமார் இரண்டு ஆண்டுகளாக ஜெயா - சசி கும்பல் ஏற்படுத்தி வந்த பல்வேறு தடைகள் இப்போது தான் நீக்கப்பட்டுள்ளன. விரைவில் விசாரணை முடிந்து தீர்ப்பு வந்துவிட்டால் ஜெயலலிதா தண்டிக்கப்படுவது உறுதி.

மக்கள் கருத்திற்கு மதிப்பளித்து, விசாரணையை விரைவாக முடிக்க அமைக்கப்பட்டதே சிறப்பு நீதிமன்றங்கள். மத்திய அரசு கூறுவது போல இது விதிகளுக்குப் புறம்பானதோ, அதிகார முறைகேடோ அல்ல. தமிழக அரசுக்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கும் உரிமை உண்டு. உயர்நீதி மன்றம் இதைச் சரி என்று அனுமதித்துள்ளதே இதற்குச் சான்று.

ஓராண்டுக்கு முன்பு இது சரிதான் என்று கூறியது மத்திய அரசு. தவறு என்றார் ஜெயலலிதா. இன்று ஜெயலலிதா கூறிய படி, மத்திய அரசும் தவறு என்று கூறுவதற்கு என்ன காரணம்?

ஜெயலலிதா மத்திய அரசுக்கு ஆதரவளிப்பதே, தன் மீதான வழக்கை முறியடிப்பதற்குதான். பார்ப்பன பாசிச ஜெயாவின் வழி முறையோ தி.மு.க. ஆட்சியைக் கலைப்பதும், முறைகேடு செய்து எப்படியாவது மீண்டும் பொன் முட்டையிடும் ஆட்சியைப் பிடித்து விடுவது என்கிற வெறியும்தான்.

எடுத்தேன், கவிழ்த்தேன் எனச் செய்தால் மோசடி அம்பலமாகும் என்று நரித்தனமாகச் செய்ய நினைக்கிறது பார்ரதீய ஜனதா. பார்ப்பன பாசிச 'ஜெ'க்கும், பார்ப்பன மதவெறி பாசிச பாரதீய ஜனதாவிற்கும் உள்ள இந்த வழிமுறையிலான வேறுபாடுதான், ஜெயாவின் உருட்டல் மிரட்டல்களாக வெளி வருகின்றன.

4 மாநில தேர்தல்களில் பா.ஜ.க.வின் படுதோல்வி, ஜெயா கும்பல் ஆட்சியைக் கவிழ்த்து விடும் என்ற பீதியை பாரதீய ஜனதாவிற்கு உருவாக்கியது. சிறப்பு நீதி மன்ற விசாரணை தொடங்கி விடவே, ஒரு சமாதான ஒப்பந்தத்திற்கு வந்த பாரதீய ஜனதா, ஜெயா கருத்துப்படி சிறப்பு நீதி மன்ற விசாரணையை முடக்கி, ஆட்சியைக் காக்க முயல்கிறது.

அதனால்தான் 'சிறப்பு நீதிமன்றம் அமைத்தது சரிதான்' என்று தீர்ப்பு வழங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவரான தலைமை நீதிபதி லிபரான், உடனே மாற்றப்பட்டு விட்டார். ஜெயலலிதா மீதான இந்த சிறப்பு நீதிமன்ற விசாரனை பற்றி 'தனிநபரை பழிவாங்குவதையும் துன்புறுத்துவதையும் அனுமதிக்க முடியாது' என்று பிரதமர் அலுவலக அறிக்கை கூறுகிறது. இது பாரதீய ஜனதாவின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தி விட்டது.

ஜெயா ஆதரவில் ஆட்சியில் ஒட்டிக் கொண்டுள்ள பாரதீய ஜனதா, பீகாரில் லல்லு பிரசாத்திற்கு தனி நீதிமன்றம் அமைத்து, சிறையிலிட்டு, ஜாமீனில் விட மறுப்பதை ஊழலுக்கு எதிரானதாகச் சித்தரிக்கிறது. ஜெயா மீதான விசாரணை பழிவாங்குதல் என்றால், லல்லுவின் சிறைத் தண்டனை மட்டும் என்ன? லல்லு, ஜெயா இருவருமே தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

ஜெயா ஊழல் வழக்கில் அவருக்கு வாதாடிய வழக்கறிஞர் கூடுதல் அரசுத் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டது, அ.தி.மு.க. வழக்கறிஞர்கள் அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டது, இவற்றைச் செய்வதற்கு வசதியாக சட்டம் பற்றிய எந்த அறிவுமற்ற தம்பித்துரை மத்திய சட்ட அமைச்சராக்கப்பட்டது என முதலிலிருந்தே ஜெயாவின் வழக்குகளை முடக்குவதற்கான வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

இவை அனைத்திற்கும் உறுதுணையாக இருந்து செயல்பட்ட வை.கோ., அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து கழற்றப் பட்டதால், சிறப்பு நீதிமன்ற விசயத்தில் மத்திய அரசின் நிலைப்பாட்டுக்கு உடன்பாடு இல்லை என்கிறார். அரசியல் அசிங்கமான வாழப்பாடி ராமமூர்த்தி, பா.ஜ.க.வுக்கு முழு ஆதரவு தருவதன் மூலம் 'அம்மா'வின் அருள் கடாட்சத்திற்கு தவமிருக்கிறார்.

ஊழல் எதிர்ப்பாளராக தின்தோள் தட்டிய 'மறத்தமிழன்' இராமதாசு இதுவரை இதுபற்றி வாய் திறக்கவில்லை. ஊழலின் உறைவிடமான காங்கிரசுக் கட்சி, இதுபற்றிப் பேச யோக்கியதை கிடையாது என்பதாலும் இப்பிரச்சினையில் தனக்கு அரசியல் ஆதாயம் கிடைக்காதா என்ற நப்பாசையிலும் மௌனம் சாதிக்கிறது.

ஜெயாவின் ஆயிரம் கோடிக்கும் மேலான ஊழலில் வெறும் 65 கோடிக்குதான் வழக்கு தொடரப்பட்டுள்ளன. இதை விசாரிப்பதே பழிவாங்கும் நடவடிக்கையாக பாரதீய ஜனதா சித்தரிக்கிறது. அதனால் தான் சட்டத்திலுள்ள தெளிவின்மையைப் பயன்படுத்தி வழக்கை முடக்க முனைகிறது. பீற்றிக் கொள்ளப்படும் இந்திய ஜனநாயக அரசமைப்பில் மாநில அரசின் உரிமை அம்பலத்திற்கு வந்து நாறுகிறது.

வழக்கைத் தொடர்ந்த கருணாநிதிக்கு யோக்கியதை உள்ளதா என்பது ஒரு புறமிருக்க, வழமை





படிப்பகம்

யான வழியில் விசாரணைக் கமிசன் அமைத்து முடக்குவதற்கு பதில் வழக்குப் பதிந்து விசாரிப்பதே இந்திய அரசியலில் முதன் முறை நடப்பதாகும். ஜெயா - சசி மட்டுமல்ல, ஏறக்குறைய அன்றைய



அமைச்சர்கள் அனைவருமே நீதிமன்றப் படிகளில் நிற்க வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கிலிருந்து தப்பிவிட முடியும் என்ற அடிப்படையில்தான் கிரிமினல் - மா·பியா பாணியில் அ.தி.மு.க. பாசிச கும்பல் ஒன்று திரண்டுள்ளது. எம்.ஜி.ஆர். சமாதி ஊர்வல கலவரம் ஒரு சிறிய வெளிப்பாடுதான்.

உழைத்து வாழ வேண்டும் என்கிற மக்களின் பண்பாட்டையே இழிவுபடுத்து கிற வகையில்தான் பொறுக்கி கிரிமினல் அரசியல் கும்பல் ஆடம்பர ஆபாச வக்கிர வாழ்க்கை வாழ்கிறது. இந்தப் பண் பாட்டை மக்களிடையே விதைத்து, சமூகத் தையே சீரழிக்க முனைகிறது. ஜெயாவின் இந்த ஊழல் கொள்ளை - ஆடம்பர ஆபாச வக்கிர வாழ்க்கை மீதான மக்களின் கோபா வேசம்தான் சிறப்பு நீதிமன்ற விசார ணைக்கே காரணமாகியது.

இதை மக்களுக்குச் சம்பந்தமற்ற, சட் டவாதமாக்கி, முடக்கிவிட முனைகிறது ஜெயா கும்பலும் பாரதீய ஜனதாவும். இதை அங்கீகரிப்பது, நமது வாழ்வையே பறிக்கின்ற ஒன்று.

## நவம்பர் புரட்சி விழா

1917, நவம்பர் 7 ரசியப் பாட்டாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய நாள். உலகம் முழுதும் அடிமைப்பட்டுக் கிடந்த காலனி நாட்டு மக்களின் விடிவெள் ளியாய், நம்பிக்கை நட்சத்திரமாய் பாட் டாளி வர்க்க சர்வாதிகாரம் உதித்த நாள்.

மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட் சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவ சாயகள் விடுதலை முன்னணி - இம்மூன்று புரட்சிகர அமைப்புகளும் இணைந்து, 82-ஆம் ஆண்டு நவம்பர் புரட்சி விழாவை, நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கும், இந்து மதவெறி பாசிசத்திற்கும் எதிரான விழாவாக, சென்னை, திருச்சி, மதுரை, வேலூர், துறையூர், அரியலூர், கம்பம், பாளையம், இராசை என தமிழகமெங்கும் கொண்டாடின.

✽ பொய்கை அரசூரில் கடந்த ஆண்டு பண்ணையாரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பழியான உழைக்கும் மக்களில் சிலர் பிரிந்து நின்று வி.வி.மு. தோழர்களுடன் மோதினர். நவம்பர் புரட்சி விழாவைத் தடுக்கும் நோக் குடன் இவர்களில் ஒருவர் தமது வீட்டிற்குத் தானே தீ வைத்து, பழியை வி.வி.மு. தோழர் கள் மீது போட்டு, சிறையிலடைக்க முயன்ற பண்ணையாருக்குத் துணை போனார்.

இந்தச் சதிகளை முறியடித்து, இவ் வாண்டு உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு, ஊரே நவம்பர் புரட்சி விழா வைக் கொண்டாடியது, சிறப்பானது.

இந்து மதவெறி பயங்கரவாதம் தலை விரித்தாடும் கோவையில், அந்நகர பாட் டாளி வர்க்கத்தின் புரட்சிகர உணர்வைத் தட்டி எழுப்பி, ஒன்று திரட்டும் வண்ணம் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி இந்த ஆண்டு நவம்பர் புரட்சி விழாவை, "கம்யூனிசமே வெல்லும்" எனும் முழக் கத்தை முன் வைத்துக் கொண்டாடியது. சுவரெழுத்து, தட்டிகள், துண்டுப் பிரசுரங் கள் - இப்படி பல வழிகளிலும் இந்து மத வெறி பாசிஸ்டுகளையும், ஆலை மூடல் அபாயத்தையும் கம்யூனிசத்தால் தான் வீழ்த்த முடியும் எனப் பிரச்சாரம் செய்து, நவம்பர் புரட்சி தின விழாவில் பங்கேற்கு மாறு, கோவை நகர தொழிலாளி வர்க்கத் துக்கு அழைப்பு விடுத்தது, பு.ஜ.தொ.மு.

நவம்பர் 7 அன்று காலையில், சின்னி யம்பாளையத்தில் அமைந்துள்ள தியாகிகள் நினைவிடத்தில் வீர வணக்கம் செலுத்தப் பட்டது. "கம்யூனிசமே வெல்லும்" எனும் தலைப்பில், கணபதியில் நடத்தத் திட் டமிட்டிருந்த பொதுக் கூட்டத்திற்கு போலீசு அனுமதி அளிக்க மறுத்து விட்டதால், அரங் குக் கூட்டம் நடத்தப்பட்டது.

**தகவல்:**
ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு.,
பு.ஜ.தொ.மு., தமிழ்நாடு.

## டிசம்பர் 6 கருப்பு நாள் சுவரொட்டி இயக்கம்

அயோத்தியில் மசூதியை இடித்து, முஸ்லிம்களை நரவேட்டையாடியது பார்ப்பன மதவெறி பாசிச கும்பல். இதன் எதிர்வினையாகவே முஸ்லிம் மதவெறி தலையெடுத்தது. இரண்டுமே ஒழிக்கப்பட வேண்டியவை. ஆனால் பெரும்பான்மை யினர் மதம் என்பதால் பார்ப்பன இந்து மதவெறி தன்னை நியாயப்படுத்துகிறது. சிறுபான்மையினர் என்பதால் இசுலாமிய மத உணர்வு கூட மதவெறியாக சித்தரிக்கப் பட்டு, ஒடுக்கப்படுகிறது.

டிசம்பர் 6 இந்திய வரலாற்றில் ஒரு கருப்பு நாள். ஆனால் அதையே ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் நாளாக, அப்பாவி முஸ்லிம்களை ஒடுக் கும் நாளாக தமிழக அரசு மாற்றிவிட்டது. அபாயகரமான பார்ப்பன மதவெறி பாசி சத்தை எதிர்த்து முறியடிப்பதற்கு பதில், அந்த போராட்ட முனையை மழுங்கடிக் கும் வகையில் ஓட்டுப் பொறுக்கிக் கட்சி கள் மதநல்லிணக்கம் பேசுகின்றன. இதில் வலது - இடது போலிக் கம்யூனிஸ்டுகள் முன்னிற்கின்றனர்.

இங்கு அம்பலப்படுத்தி, அடித்து வீழ்த்த வேண்டியது பார்ப்பன மதவெறி பாசிசம். அம்பலப்படுத்தி, தனிமைப்ப டுத்தி முறியடிக்க வேண்டியது இசுலாமிய மதவெறி. இசுலாமிய மதவெறி அமைப்பு களைத் தடை செய்தது போலவே ஆர். எஸ்.எஸ்., இந்து முன்னணி, விசுவ இந்து பரிசத்து போன்ற பார்ப்பன மதவெறி அமைப்புகளுமே தடை செய்யப்பட வேண்டும். அயோத்தி பாபர் மசூதி இடம் இசுலாமியர்களுக்கு உரிமையாக்கப்பட்டு, அரசே மசூதியைக் கட்டித்தர வேண்டும்.

இந்த அடிப்படையில் டிசம்பர் 6 கருப்பு நாள் சுவரொட்டி பிரச்சார இயக் கம், சென்னை, மதுரை, திருச்சி, கோவை, நெய்வேலி, விழுப்புரம், இராசபாளை யம், ஈரோடு, தஞ்சை, கம்பம், உசிலை என பரவலாக நகரங்களிலும், கிராமப் புறங்களிலும் ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புக ளால் மேற்கொள்ளப்பட்டன.

ஈரோடில் போலீசு சுவரொட்டிகளை ஒட்டிய அன்று அதிகாலையே கிழித்தெ றிந்து, தனது பார்ப்பன மதவெறி பாசிச விசுவாசத்தை வெளிப்படுத்திக் கொண் டது. இராசபாளையத்தில் பு.மா.இ.மு. தோழர்கள் கணபதி, பெரியசாமி, காளியப் பன், சங்கர், ஸ்டாலின் ஆகியோர் இரு நாட்கள் காவல் நிலையத்தில் சட்ட விரோ தமாக அடைத்து வைக்கப்பட்டனர். விசா ரணை என்ற பெயரில் தோழர் பெரியசாமி வீட்டில் நுழைந்து மூக்குடைப்பட்டு ஓடி யது. ஜெயங்கொண்டம் பகுதியில் சுவ ரொட்டி ஒட்டிய தோழர் தமிழ்ச் செல்வன் அவர்களை போலீசு கைது செய்து, பொய் வழக்குப் போட்டு சிறையிலடைத்தது. டிசம்பர் 6 ஞாயிறன்று கைது செய்து காவல் நிலையம், நீதிபதி வீடு, திருச்சி மத்திய சிறைக்கு என கொண்டு சென்ற வழிநெடுக சரியான அரசியல் முழக்கங்களை முழங்கி, மக்களிடையே வீச்சாக அரசியல் பிரச்சாரமும் செய்து, தனிநபராகவே அர சின் அடக்குமுறைகளை அம்பலப்படுத்தி னார். டிசம்பர் 12-இல் தோழர் பிணையில் வெளி வந்தார்.

www.padippakam.com

# விபச்சாரத்திற்கு பெண்கள் ஏலம் நாட்டிற்கே அவமானம்



"ஆந்திர மாநிலத்தின் விஜயவாடா நகருக்கு அருகிலுள்ள எலுரு என்ற சிறு நகரத்தில் டிசம்பர் மாத முதல் வாரத்தில் இப்படியொரு ஏலம் நடந்தது:

"இதோ இந்த அழகான ஒன்றைப் பாருங்கள்; இது கிளுகிளுப்பாக மட்டுமா தெரிகிறது? கவர்ச்சியாகவும் உள்ளது. ஐயாயிரம் ரூபாய் கொடுத்தால், இது உங்களுக்கே சொந்தம்" என்று ஏலம் விடுபவன் ஏலத்தைத் தொடங்கி வைத்தான். "ஐயாயிரம் தர நான் தயார்" என்றான் ஏலம் கேட்க வந்த ஒருவன். "இதற்குத் தாராளமாக ஆறாயிரம் தரலாம்" என்றான் மற்றொருவன். "இவனை விடக் கூடுதலாக ஐநூறு ரூபாய் தருகிறேன்" என்றான் முதலாமவன். "ஒன்பதாயிரம் ரூபாய்... அதை என்னிடம் ஒப்படைத்து விடு" என்று சத்தமாகக் கூறிவிட்டு, பணத்தை வேகமாக எண்ண ஆரம்பித்தான், ஒரு நடுத்தர ஆசாமி.

ஏலக்கடைகளில் இப்படி போட்டா போட்டி நடப்பதெல்லாம் சாதாரணமானதுதான். ஆனால், நாம் இங்கு குறிப்பிடுவது சாதாரண ஏலமல்ல. அதேசமயம், இந்த 'அசாதாரணமான' ஏலம் உங்களுக்கு நிச்சயமாக வியப்பைத் தரப் போவதில்லை; வேதனையும், ஆத்திரமும், அருவெறுப்பும் தரக் கூடியது.

ஐயாயிரத்தையும், பத்தாயிரத்தையும் கத்தையாகத் தூக்கியெறிந்து, அந்தக் கூட்டம் அரிய கலைப் பொருட்களை, ஏலம் எடுக்க முண்டிக் கொண்டு நிற்கவில்லை. மாறாக, இளம் பெண்களை... பருவமடைந்த அழகான இளம் பெண்களை... தான் கூவி கூவி ஏலம் கேட்டார்கள். விபச்சாரச் சந்தையினுள் தள்ளப்படுவதற்காகவே, இந்தப் பெண்கள் பகிரங்கமாக, பட்டப் பகலில் ஏலம் விடப்பட்டார்கள்; ஏலத்தில் எடுக்கப்பட்டார்கள். இப்படி விபச்சாரத்திற்காக பெண்கள் விற்கப்படுவது, ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரை நடந்து வந்த அடிமை வியாபாரத்தை விடக் கேவலமானதில்லையா?

எலுருவில் நடந்த அந்த ஏலத்தில் 16 வயதிலிருந்து 30 வயதுக்குள்ளான எட்டு பெண்கள் விற்கப்பட்டார்கள். இது, இந்த ஆண்டின் கடைசி ஏலம். அடுத்த ஏலம், அடுத்த ஆண்டின் (1999) மார்ச் மாதம் நடக்கும். எலுருவில், ஒவ்வொரு ஆண்டும், மூன்று மாதத்திற்கு ஒருமுறை, பெண்கள் ஏலத்தில் விற்கப்படுவது, ஆடு - மாடு சந்தையைப் போல, காலம் தவறாமல், எவ்விதத் தடையுமின்றி, வாடிக்கையாக நடந்து வருகிறது.

எலுருவில் மட்டுமில்லாமல், ஆந்திர மாநிலத்தின் கிழக்கு கடற்கரை மாவட்டங்களிலுள்ள தெனாலி, குண்டூர், தனுகு, தடேபள்ளிகுடம், நிடதவோலே போன்ற பல நகர்ப்புறங்களிலும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஏலம் நடந்து வருகிறது. ஒவ்வொரு ஏலத்தின் போதும் கிட்டதட்ட 10 இளம் பெண்கள் விபச்சாரத்திற்கு விற்கப்படுகின்றனர். தெனாலி, நிடதவோலே, வேல்புர், தனுகு, தடேபள்ளிகுடம் பகுதிகளில் வசித்து வரும் "தொம்மரா", "போகாம்" என்ற இரு சாதிகளைச் சேர்ந்த பெண்கள்தான், அஃறினைப் பொருட்களைபோல, ஏலத்தில் விற்கப்படுகின்றனர்; இச்சாதிகளைச் சேர்ந்த, கிட்டத்தட்ட 10,000 இளம் பெண்கள் ஏலத்தில் எடுக்கப்பட்டு, மும்பை சிவப்பு விளக்கு விபச்சார சந்தையில் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தச் சாதிகளைச் சேர்ந்த ஆண்கள்தான் ஏலத்தை நடத்துகிறார்கள். ஏலத்தில் விற்கப்படும் பெண்கள், அடுத்த ஒரு வருடத்திற்கு ஆந்திராவிலோ அல்லது மும்பையிலோ விபச்சாரத்தினுள் தள்ளப்படுகிறார்கள். ஒரு வருட ஒப்பந்தம் முடிந்த பின், ஏலம் எடுத்த விபச்சாரத் தரகன், அந்தப் பெண்ணை, அவளது உறவினர்களிடம் கொண்டு வந்து ஒப்படைத்து விட வேண்டும். தவறினால், ஏலம் எடுத்த விபச்சாரத் தரகன் தண்டிக்கப்படுவான். தண்டனையை முடிவு செய்ய பஞ்சாயத்துகள் கூட்டப்படும்.

இப்படி எழுதப்படாத சட்டத்தின் அடிப்படையில், ஓர் 'ஒழுங்கு'க்கும், 'கட்டுப்பாட்டு'க்கும் உட்பட்டு நடந்து வரும் இந்த ஏல விபச்சாரத்தில் புரளும் பல கோடி ரூபாய் வருமானத்தை, விபச்சார தரகர்கள், "கம்பெனி" என்று கௌரவமாக அழைக்கப்படும் விபச்சார விடுதிகளின் அதிபர்கள், இவர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுக்கும் பைனான்சுக்காரர்கள் என்ற சமூக விரோதக் கூட்டணிதான் அனுபவித்து வருகிறது. தொம்மரா, போகாம் சாதி மக்களின் ஏழ்மை, இச்சமூக விரோதக் கும்பலுக்குப் பணம் காய்க்கும் மரமாக மாறிப் போனது.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் கம்ப்யூட்டர் மூளை கண்டு கொள்ளாமல்விட்ட இந்தக் கேவலத்தை, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளேடுதான் அம்பலப்படுத்தி எழுதியது. இதன்பின், எலுருவிற்குள் புகுந்து வேட்டை நடத்திய ஆந்திர போலீசு, பெண்களை ஏலம் போட்ட சில குற்றவாளிகளைக் கைது செய்தது. போலீசின் அதிரடி - "ஆக்ஷன்" நடவடிக்கையில், எலுருவில் ஏலம் நடத்துவதற்குப் பாதுகாப்பு கொடுத்துவரும் நகராட்சி உறுப்பினர் ஒருவரும், சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் சிக்கிக் கொள்ளவில்லை. பெண்களை ஏலம் எடுக்கும் விபச்சாரத் தரகர்களுக்கு வட்டிக்குப் பணம் தரும் பைனான்சுக்காரர்கள் யாரும் சிக்கவில்லை. பாம்பும் சாகாமல், தடியும் நோகாமல் அடித்த கதைதான் இது!

"மத்தியப் பிரதேசத்தில் உள்ள தாப்ரி மந்தி என்ற சிறு நகரத்தில், ஆயிரத்திற்கும் இரண்டாயிரத்திற்கும் பெண்களை விலைக்கு வாங்கி அவர்களை வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளலாம்; விபச்சார சந்தையில் மீண்டும் விற்க

**எலுருவில் விபச்சாரத்தில் தள்ளப்பட்ட பெண்கள்: இதுதான் ஐம்பதாண்டுகால முன்னேற்றமா?**






படிப்பகம்

www.padippakam.com



லாம்'' என்ற செய்தி 1981-இல் அம்பலமானது. இரண்டாயிரத்து முந்நூறு ரூபாய்க்கு விலைக்கு வாங்கப்பட்ட விதவையும், ஆறு குழந்தைகளின் தாயுமான கமலா, ''வறுமைதான் இதற்குக் காரணம்'' எனக் கூறினார். 1998-இல் எலுருவில் ஏலம் விடப்பட்டப் பெண்களிடம், ''ஏன் இப்படி?'' என்று கேட்ட பொழுது, அவர்களும் கமலாவைப் போலதான் பதில் கூறினார்கள்: ''பசி'' என்றார்கள். பின், இந்தப் பதினேழு ஆண்டுகளாக ''21-ஆம் நூற்றாண்டு'', ''நவீனமயம்'', ''தாராளமயம்'' என்று ஆளுங் கும்பல் போடும் கூச்சலுக்கெல்லாம் பொருள்தான் என்ன?

★☆★

விபச்சார விடுதிகளை நடத்தும் சமூக விரோதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு இருப்பது ஒருபுறமிருக்க, தாராளமயமாக்கலின் பின் இந்திய அரசு நோகாமல் வருமானம் ஈட்டிக் கொள்ள, சுற்றுலாகத் துறையைதான் பெரிதும் நம்பியுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து குவிய வேண்டும் என்றால், அவர்களுக்குக் கன்னி கழியாத பெண்கள் வேண்டும்; பருவத்திற்கு வராத சிறுமிகள் வேண்டும்; சிறுவர்கள் வேண்டும்.



இந்தச் சனியன்புடிச்ச இண்டர்நெட்டால, எலுருவில் நடந்த விபச்சார ஏலம் உலகெங்கும் தெரிஞ்சு போச்சே!

இந்தியாவில் வருடமொன்றுக்கு சதவீதம் அளவுக்கு வளர்ச்சி அடைந்துவரும் ஒரே ''தொழில்'' விபச்சாரம்தான். இந்தத் தொழிலில் வருடமொன்றுக்கு 40,000 கோடி ரூபாய் அளவிற்குப் பணம் புழங்குகிறது. இதில், குழந்தை விபச்சாரத்தின் மூலம் ஈட்டப்படும் வருமானம் 11,000 கோடி ரூபாய். வருமானம் வருகிறது என்பதற்காக சாராயக் கடைகளைத் திறந்து விட்டு, ''குடி குடியைக் கெடுக்கும்'' என்ற போதிப்பதைப் போல, ''பாதுகாப்பான உடலுறவுக்கு ஆணுறையைப் பயன்படுத்துங்கள்'' என்று ஆலோசனை கூறுகிறது ஆளுங்கும்பல். இது வெறும் ஆலோசனையா? இல்லை, ''விபச்சாரத்தை எங்களால் ஒழிக்க முடியாது'' என்று ஆளுங்கும்பல் தரும் ஒப்புதல் வாக்கு மூலமா?

வருமானத்திற்காக லாட்டரி சீட்டு விற்பனை; வருமானத்திற்காக குதிரைப் பந்தயம் - சூதாட்ட விடுதி; வருமானத்திற்காக சாராயக்கடை ஏலம். இந்த வரிசையல், விபச்சாரம் புறக்கடை வழியாக உள்ளே நுழைந்துவிட்டது. சமூக விரோதத் தொழில்தான் என்றாலும், அதைவிட 'தேச'த்தின் நலன் முக்கியமானதல்லவா?!

• ரஹீம்


# ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பார்ப்பனர்களின் கொட்டம்

இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தில் (எல்.ஐ.சி) பார்ப்பனர்களின் ஆதிக்கம் மிகுந்திருப்பது யாவரும் அறிந்த சங்கதி தான். இத்துறையில் சிரமப்பட்டு வேலைக்குச் சேரும் தாழ்த்தப்பட்டோரைப் புழுவைப் போல அற்பமாக நடத்துவதும், அவர்களைத் தனிமைப்படுத்துவதும், இங்குள்ள ஒரு சில பார்ப்பன உயர்சாதி ஊழியர்களின் நடைமுறையாக உள்ளது. அதுவும் ஒரு தாழ்த்தப்பட்டவர் அவர்களுக்கு அதிகாரியாக வந்து விட்டாலோ, அவர் பாடு திண்டாட்டமாகிவிடும். அவர்களுடைய எடுபிடியாக, ஆமாம் சாமியாக மாற்றும் வரை விட மாட்டார்கள். இத்துறையிலுள்ள போலி கம்யூனிஸ்டுகளின் ஊழியர் சங்கமும் இதற்குத் துணையாக நின்று பார்ப்பன மயமாகி வருகிறது.

திருச்சியில் உள்ள எல்.ஐ.சியின் சி.ஏ.பி. கிளையில் செல்வேஸ்வரன் என்பவர் துணை நிர்வாக அதிகாரியாக உள்ளார். அவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். தாழ்த்தப்பட்ட - பழங்குடியின ஊழியர் சங்கத்தின் முக்கிய பொறுப்பில் இருக்கிறார். இக்கிளையில் பார்ப்பனர்களை அதிகமாகக் கொண்ட போலி கம்யூனிஸ்டுகளின் அகில இந்திய காப்பீட்டுத் துறை ஊழியர் சங்கமும் உள்ளது. இச்சங்கத்திற்கு இணையாக தாழ்த்தப்பட்ட ஊழியர் சங்கத்தின் செயல்பாடுகளை செல்வேஸ்வரன் முடுக்கிவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த பார்ப்பன ஊழியர்கள் இவரைக் கேலி - நையாண்டி செய்து, தொல்லை கொடுக்கும் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அனைத்து ஊழியர்களும் அலுவலகத்திற்கு காலை 10.15 மணிக்குள் வரவேண்டுமென்பது விதி. ஆனால் எந்த ஊழியரும் அதை மதித்து உரிய நேரத்திற்குள் வருவதில்லை. செல்வேஸ்வரன் அதை ஒழுங்குபடுத்தி, அலுவலக விதியைக் கறாராக்கினார். விளைவு, பார்ப்பன ஊழியர்கள் அவர்களது போலி கம்யூனிஸ்டு சங்கம் மூலம் நிர்வாகத்துக்கு நிர்ப்பந்தங்கள் கொடுத்து, செல்வேஸ்வரன் பொறுப்பிலிருந்த வருகைப் பதிவேட்டை எடுத்துவிடச் செய்தனர். ஆர்.எஸ்.எஸ். பெயரில் செல்வேஸ்வரனுக்கு ஆபாச வார்த்தைகளில் மொட்டை - மிரட்டல் கடிதங்களை அனுப்பினர்.

ஒருநாள் ஓய்வறையில் நந்தகுமார் என்ற பார்ப்பன ஊழியர், தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை இழிவுபடுத்தியும், ''பள்ளன் - பறையனெல்லாம் பதவிக்கு வந்ததால்தான் எல்.ஐ.சி.யே கெட்டுப் போச்சு'' என்றும் சாதி வெறியோடு கிண்டல் செய்து பேசியுள்ளார். இப்பார்ப்பனத் திமிரைக் கண்டித்து நந்தகுமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு நிர்வாகத்திடமும் போலீசிடமும் தாழ்த்தப்பட்டோர் சங்கம் புகார் செய்தது. வழக்கறிஞர் மூலம் அவருக்க வக்கீல் நோட்டீசும் அனுப்பப்பட்டது. நந்தகுமார் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மக்கள் கலை இலக்கியக் கழகம் (திருச்சி கிளை) விரிவாக சுவரொட்டி பிரச்சாரம் செய்தது.



உடனே பொங்கியெழுந்தது போலி கம்யூனிஸ்டுகளின் சங்கம். செல்வேஸ்வரன் மீது புழுதி வாரித் தூற்றியும், நந்தகுமாரைக் காப்போம் என்றும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டும் தனது பார்ப்பன பாசத்தைக் காட்டிக் கொண்டது.

செல்வேஸ்வரன் ஒரு அதிகாரி என்ற முறையில் நிர்வாக விதியைக் கறாராகச் செயல்படுத்தியது சரியா, தவறா என்று சொல்ல வக்கற்ற இச்சங்கம்,

நந்தகுமார் தாழ்த்தப்பட்டோரை இழிவுபடுத்திப் பேசியது சரியா, தவறா என்று சொல்ல வக்கற்ற இச்சங்கம்,

தமது சங்கத்தின் மீது செல்வேஸ்வரன் பொறாமை கொண்டு, நந்தகுமார் மீது வீணாகப் புகார் கொடுத்தாக அவதூறும் பரப்பி வருகிறது.

முன்பு, தேர்தல் ஆணையாளர் சேஷன் போன்ற பார்ப்பனர்கள் கறாராக நடந்து கொண்டால், உடனே, ''ஆஹா! இவர்தான் நேர்மையானவர்'' என புளகாங்கிதம் அடையும் இவர்கள், ஒரு தாழ்த்தப்பட்டவர் அதே நேர்மையைக் கடைபிடிக்கும் போது எதிர்த்து நிற்பது ''வர்ணாசிரமம்'' அன்றி வேறென்ன?

நந்தகுமார் மீதான துறை சார்ந்த விசாரணையில் அவர் மீது தவறு உள்ளதாக விசாரணை அதிகாரி உறுதி செய்த பின்னரும், அவர் மீது நடவடிக்கை கூடாது என்று போலி கம்யூனிஸ்டு சங்கம் மிரட்டி வருகிறது. அதோடு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும் முதலைக் கண்ணீர் வடிக்கிறது.

புரிந்து கொள்ளுங்கள், பூணூல் கம்யூனிஸ்டுகளின் யோக்கியதையை!

தகவல்: தொழிலாளர் பிரச்சாரக் குழு, திருச்சி.


படிப்பகம்

www.padippakam.com

# விவசாயத்தை நாசமாக்க அமெரிக்காவின் புதிய சதி

**புழு - பூச்சி அழிப்புத் தன்மை கொண்டவை என்ற பெயரில் நச்சு உயிர்ம விதைகள் மூலம், இந்தியப் பருத்தி விவசாயத்தைப் பாழடிக்க அமெரிக்கா கிளம்பிவிட்டது.**



பசவண்ணா - கர்நாடக மாநிலத்தின் ரெய்ச்சூர் மாவட்டத்திலுள்ள சிந்தானூர் கிராமத்தைச் சேர்ந்த சிறு விவசாயி. ஓராண்டுக்கு முன்பு பருத்தி சாகுபடி செய்து, குறுத்துப் புழுக்களும் பூச்சிகளும் பயிரைத் தாக்கியதால் கடனாளியாகிப்போனவர். கடந்த ஜூலை மாதத்தில் அவர் ''மகிகோ''விதை நிறுவனத்திடம் பருத்தி விதைகளை வாங்கினார். குருத்துப் புழுக்களைத் தாக்கக் கூடிய வீரியமிக்க விதை என்றும் அமோக விளைச்சல் தரும் என்றும் அந்நிறுவனம் கூறியதை நம்பி, தனது அரை ஏக்கர் நிலத்தில் பயிரிட்டார். எதிர்பார்த்தபடியே பருத்திப் பயிர் புழு - பூச்சிகள் தாக்காமல், நன்றாக விளைந்து அறுவடைக்காகக் காத்திருந்தது.

ஆனால் பசவண்ணாவுக்கும், அவரைப்போல ''மகிகோ'' விதை நிறுவனத்திடம் பருத்தி விதைகளை வாங்கிப் பயிரிட்ட பெல்லாரி, ஹாவேரி மாவட்ட விவசாயிகளுக்கும் இதனால் ஏற்பட்டுள்ள பேரபாயம் பற்றி அப்போது தெரியவில்லை. உலகின் மொத்தப் பருத்தி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை விளைவிக்கும் இந்திய விவசாயிகளைப் போண்டியாக்கி, விவசாயத்தையே நாசமாக்கும் அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள விதை நிறுவனத்தின் சதித் திட்டத்தை கர்நாடக பருத்தி விவசாயிகள் அப்போது அறிந்திருக்கவில்லை.

''மான்சாண்டோ'' என்ற விதை நிறுவனம் அமெரிக்காவின் ஏகபோக விதை நிறுவனமாகும். இது குறுத்துப்புழு-பூச்சிகளைத் தாக்கி அழிக்கும் உயிர்மக் கூறு கொண்ட விதைகளைத் தயாரித்துள்ளதாகக் கூறி, அதற்கு வடிவுரிமையும் பெற்றுள்ளது. இவ்விதைகளைக் கொண்டு ''போல்கார்ட்'' எனப்படும் பி.டி.பருத்தியை சோதனைச்சாலையில் பயிரிட்டு, புழு-பூச்சி எதிர்ப்பும், அமோக விளைச்சலும் கொண்ட புதிய ரகம் என நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது. இப்புதிய ரக பி.டி.பருத்தியை விளைநிலங்களில் பயிரிட்டுச் சோதித்தறிய, அது இந்தியாவைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஏனெனில், இந்தியாவில்தான் அண்மைக் காலமாக புழு-பூச்சிகளால் பருத்திப் பயிர் பாழாகி வருகிறது. விவசாயிகள் இதனால் பெரிதும் நட்டமடைந்து, கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொள்வதும் அதிகரித்து வருகிறது.

இந்திய அறிவியல் - தொழில் நுட்ப அமைச்சகத்தின் உயிரியல் தொழில் நுட்பத் துறையானது, மகாராஷ்டிர கலப்பின விதை நிறுவனமான ''மகிகோ''வுக்கு ''மான்சாண்டோ''வின் புதிய ரக விதைகளைச் சோதித்துப் பார்க்க அனுமதி அளித்துள்ளது. இதன்படி இந்நிறுவனம் 3 மாநிலங்களில் 25 பகுதிகளில் விவசாயிகளுக்கு புதியரக விதைகளைக் கொடுத்து, பி.டி. பருத்தியைப் பயிரிட்டுச் சோதித்து வருகிறது. இவ்வாண்டின் இறுதிக்குள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இப்புதியரகப் பருத்தியை அறிமுகப்படுத்திப் பயிரிடத் தீர்மானித்துள்ளது.

குருத்துப் புழு-பூச்சித் தாக்கி அழிக்கும் ''பாக்டீரியா'' உயிர்மக் கூறு கொண்ட விதைகள் என்று மான்சாண்டோ நிறுவனம் கூறுகிறது. ஆனால், புழு- பூச்சிகளைத் தாக்கி அழிக்கும் உயிர்மக் கூறு தொழில் நுட்பம், உலகெங்கும் சோதனைச் சாலைகளில் ஆய்வு நிலையில் உள்ளனவே தவிர, எங்கேயும் வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டு, விஞ்ஞானிகளாலும், விவசாயிகளாலும் ஏற்கப்படவில்லை. மேலும் மான்சாண்டோவின் விதைகளைக் கொண்டு பருத்தி பயிரிட்ட அமெரிக்காவின் தெற்கு மாநில விவசாயிகள் பெருத்த நட்டமடைந்து, அந்நிறுவனத்தின் மீது கடந்த செப்டம்பரில் வழக்கு தொடுத்தனர்.

வழக்கு, விசாரணைகள் மூலம் அம்பலப்படாதிருக்க, அந்நிறுவனம், விவசாயிகளுக்கு பல இலட்சம் டாலர்களை நட்ட ஈடாகக் கொடுத்து, வழக்கை திரும்பப் பெறச் செய்துள்ளது. உண்மையில், குறுத்துப் புழு-பூச்சி தாக்குதலை இந்நிறுவனத்தின் விதைகள் தடுப்பதுமில்லை; சில அமெரிக்க விவசாயிகள் இந்நிறுவனத்தின் நட்ட ஈட்டை ஏற்க மறுத்து வழக்கைத் தொடர்ந்ததால், 20 இலட்சம் டாலர்(8 கோடி ரூபாய்) தொகையை நட்ட ஈடாகப் பெற்றுள்ளார்கள். இந்த உண்மைகளை ''உயிரியல் வாழ்க்கை சூழலாளர்'' (The Ecologist) என்ற ஆங்கிலப் பத்திரிகையே அம்பலப்படுத்தியுள்ளது.

மேலும், மான்சாண்டோ நிறுவனத்தின் புதியரகப் பருத்தி விதைகள் மண்ணின் உயிரியல் தன்மையை அழித்து விடுகின்றன. விவசாயிகளின் நண்பனாகிய மண்புழு மற்றும் பிற உயிரிகள் இப் புதிய ரகப் பருத்தியால் கொல்லப்படுகின்றன. இவ்வகை பருத்திப் பூவின் மகரந்தத் துகள்கள் காற்றின் மூலமோ, பிற பூச்சிகள் மூலமோ அண்டையிலுள்ள வேறு பயிர்களில் சேர்ந்தால், அப்பயிரின் விதைகளும் மண்ணின் உயிரியல் தன்மையை அழிப்பதாக மாறிவிடும். எதிர்காலத்தில் எதையும் பயிரிட முடியாதபடி விளை நிலங்கள் தரிசாகிவிடும்.

பருத்தியிலிருந்து பஞ்சு எடுத்த பிறகு, பருத்திக் கொட்டையிலிருந்து சமையல் எண்ணெய், புண்ணாக்கு தயாரிப்பதும், அல்லது பருத்திக் கொட்டைகளை நேரடியாக மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்துவதும் பாரம்பரியமாக இந்தியாவில் நடந்து வருகிறது. தற்போதைய மான்சாண்டோ பருத்திக் கொட்டையிலிருந்து சமையல் எண்ணெயோ, புண்ணாக்கோ தயாரிக்க

**பாரம்பரிய பருத்திச் செடியும், அமெரிக்க விதையில் உருவான பருத்திச் செடியும்: விவசாயிகளை மோசடி செய்யும் விளம்பர வித்தை.**









**அமெரிக்க நச்சு விதைகளால் விளைந்த பருத்திப் பயிரைத் தீயிட்டுக் கொளுத்தும் கர்நாடக விவசாயிகள்.**

எந்த உத்திரவாதமுமில்லை. இந்த வகைப் பருத்திக் கொட்டையால் மனிதர்களுக்கும் விலங்கினங்களுக்கும் என்ன பாதிப்பு ஏற்படும் என்றும் தெரியவில்லை, எல்லாவற்றையும் விட, தற்போது பயிரிட்டுள்ள பருத்தியிலிருந்து விதைகளை எடுத்து அடுத்த பட்டத்தில் பயிரிட்டால், விதைகள் முளைக்குமா, செடி வளருமா, பருத்தி பூக்குமா, புழு - பூச்சிகள் தாக்காமல் இருக்குமா என்பதற்கு எந்த உத்திரவாதமுமில்லை.

மேலும், இந்த விதைக்கு வடிவுரிமை கொடுக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் இந்த விதையை இருப்பு வைத்துக் கொள்ளவோ, மற்றவருக்கு கொடுக்கவோ, விற்கவோ முடியாது. எனவே இத்தகைய பருத்தி விதைகளுக்கு மான்சாண்டோ நிறுவனத்தையே விவசாயிகள் என்றென்றும் சார்ந்திருக்க வேண்டும். இந்நிறுவனம் அநியாய விலைக்கு விதையை விற்றாலும், அதை விவசாயிகள் வாங்கிப் பயிரிட வேண்டிய அவல நிலை ஏற்படும். இந்தியாவில் விவசாயிகளுக்குத் தேவையான விதைகளில் 32 சதவீதத்தை மட்டுமே தேசிய மற்றும் மாநில விதைக் கழகங்கள் வழங்குகின்றன. மீதி 68 சதவீத விதைகள் விவசாயிகளிடமிருந்து விவசாயிகளுக்கு என்கிற முறையில் தான் விநியோகிக்கப்படுகிறது. இந்திய விவசாயத்தின் உயிர்நாடியாக உள்ள இத்தகைய விநியோக முறை இப்போது கழுத்து நெறிக்கப்பட்டு கொல்லப்படுகிறது.

மகாராஷ்டிரா, வட கர்நாடக மாநிலங்களில் ''மகிகோ'' நிறுவனத்தின் விதைகள் விவசாயிகளிடம் பிரபலமானவை என்பதாலேயே, இந்நிறுவனத்துடன் ''மான்சாண்டோ'' ஒப்பந்தம் செய்து கொண்டு, அதன் பங்குகளை மிக அதிக விலைக்கு வாங்கியுள்ளது. மான்சாண்டோவின் சதித்திட்டத்தை அறியாமல் ''மகிகோ''வின் விதைகள் என்று வில்சாயிகள் நம்பி ஏமாந்துள்ளனர். இப்படிதான் அர்ஜென்டினா நாட்டில் நுழைந்த ''மான்சாண்டோ'', அங்கு பெருமளவில் பயிராகும் மக்காச்சோள உற்பத்தி முழுவதையும் தனது கோரப்பிடியில் கொண்டு வந்துவிட்டது. இந்தியாவின் பருத்திஉற்பத்தியையும் தனது இரும்புப்பிடியில் கொண்டுவரும் நோக்கத்தோடுதான் இச்சதிகளில் இறங்கியுள்ளது.

மேலும், அது விளம்பரப்படுத்தும் புழு-பூச்சி அழிப்பு உயிர்மக்கூறு விவகாரமும் மோசடியானதுதான் என்று இப்போது அம்பலமாகியுள்ளது. அமெரிக்காவின் ''கழிமுகப்பகுதி மற்றும் ஊசியிலைக் காட்டுப் பகுதி விவசாய ஆய்வுக் கம்பெனி'' என்ற நிறுவனம், தனது விதைகளின் தொழில்நுட்ப பாதுகாப்பு முறைக்கு வடிவுரிமை பெற்றுள்ளது. (வடிவுரிமை எண்:57,23,765). இந்த நிறுவனத்தை மான்சாண்டோ கைப்பற்றிக் கொண்டு, இந்த வடிவுரிமையைதான் புழு அழிப்பு உயிர்மக்கூறுக்கான வடிவுரிமை என்று மோசடி செய்துள்ளது.

இந்த உண்மைகளை, டாக்டர் நஞ்சுண்டசாமி தலைமையிலான கர்நாடக மாநில விவசாயிகள் சங்கம் (KRRS), பருத்தி விவசாயிகளிடம் விளக்கியதோடு, கடந்த நவம்பர் 25-ஆம் தேதியன்று கர்நாடக மாநில அரசிடம் இன்னும் 24 மணி நேரத்திற்குள் மான்சாண்டோ-வின் சோதனைகளுக்குத் தடை விதித்து, வெளியேற்ற வேண்டும் எனக் கெடுவிதித்தது. ஏற்கனவே, விவசாயிகளின் வாழ்வைக் சூறையாட வந்த அமெரிக்காவின் ''கார்கில்'' விதை நிறுவனத்தையும், அமெரிக்காவின் ''கெண்டகி'' கோழி இறைச்சி உணவு நிறுவனத்தையும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுடன் திரண்டு வந்து, தாக்கி விரட்டியடித்த போர்க்குணமிக்க சங்கம்தான் இது.

இச்சங்கத்தின் கெடுவினால் பீதியடைந்த கர்நாடக அரசு இவ்விதை நிறுவனத்தை நாங்கள் அனுமதிக்கவில்லை; அதைத் தடை செய்யவும் எங்களுக்கு அதிகாரமில்லை என்று நழுவிக் கொண்டது. விவசாய சங்கத்தினர் மான்சாண்டோ நிறுவனத்துக்கு எதிரான போராட்டத்தின் ஓர் அங்கமாக, 3 இடங்களில் பருத்தி விவசாயிகளின் ஒப்புதலோடு, அறுவடைக்குக் காத்திருந்த பருத்தியைப் பிடுங்கி விளைநிலத்திலேயே தீயிட்டுக் கொளுத்தினர். கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பசவண்ணாவும் தனது அரை ஏக்கரில் பயிரிட்ட பருத்தி முழுவதையும் விவசாய சங்கத்தினர் முன்னிலையில் தீயிட்டுக் கொளுத்தியதோடு, மான்சாண்டோ நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்து நட்ட ஈடு கோரியுள்ளார்.

இது ஏதோ தனிப்பட்ட ஒரு விதைக் கம்பெனியின் மோசடியால் விளைந்த துயரக் கதை அல்ல. தனியார் மயம், தாராளமயம் என்ற பெயரில் நாட்டை மறுகாலனியாக்கிவரும் மக்கள் விரோத ஆட்சியாளர்கள் விவசாயிகளுக்கு அளித்துள்ள பரிசு இது தான். விவசாயத் துறை முழுவதையும், காடுகளையும் வளங்களையும் ஏகாதிபத்திய தொழிற்கழகங்களின் வேட்டைக்கும் சுரண்டலுக்கும் தாராளமாக அனுமதிக்கும் கேடு கெட்ட கொள்கையை விவசாயிகள் இனியும் அனுமதிக்கலாமா? தலைமுறை தலைமுறையாக இந்த மண்ணில் தமது வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தி வளமாக்கிய விவசாயிகளை போண்டியாக்கி, விவசாயத்தையே நாசமாக்கும் ஏகாதிபத்திய நிறுவனங்களை இனிமேலும் விட்டு வைக்கலாமா? விவசாய நாடான இந்தியாவை, உணவுக்காக ஏகாதிபத்தியங்களிடம் கையேந்த வைக்கும் சதிச் செயலை, புதிய வகை விவசாயம் என்ற பெயரில், இறால் பண்ணை, தேக்கு, பழப் பண்ணைகளை நிறுவி, பாரம்பரிய விவசாயத்தை அழித்து வரும் துரோகத்தனத்தை இனியும் ஏற்கத் தான் முடியுமா? நாட்டுப் பற்றும் தன்மானமும் கொண்ட இந்திய விவசாயிகள் தமது போராட்டங்களின் மூலம் இவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டியது இன்றைய அவசர - அவசியக் கடமையாகும்.

• குமார்



**தலைமுறை தலைமுறையாக இந்த மண்ணில் தமது வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தி வளமாக்கிய விவசாயிகளைப் போண்டியாக்கி, வில்சாயத்தையே நாசமாக்கும் ஏகாதிபத்திய நிறுவனங்களை இனிமேலும் விட்டு வைக்கலாமா?**

www.padippakam.com

# விதை வியாபாரிகள் மோசடி பருத்தி விவசாயிகள் பரிதவிப்பு

தேனி மாவட்டம் கூடலூரில் 80 விவசாயிகள் கடந்த வைகாசியில் (மே மாதம்) மனோகரன் என்ற விதை வியாபாரியிடம் பருத்தி விதை வாங்கிப் பயிரிட்டனர். ஆனால் ஆறு மாதங்களுக்கு மேலாகியும், மழை சாதகமாக இருந்த நல்ல சூழலில் பயிரிட்டும் செடியிலிருந்து பூவோ, பிஞ்சோ வரவில்லை. கடன் வாங்கி, உரம் போட்டு, களையெடுத்து, மருந்து அடித்த விவசாயிகள் வெறும் செடியைப் பார்த்து அதிர்ந்து போனார்கள். விதை வியாபாரியிடம் சென்று கேட்டதற்கு, "நான் எல்.ஆர்.ஏ. கம்பெனி விதையைத்தான் விற்றேன். எல்லோருக்கும் நல்லா வெளஞ்சிருக்கு. உங்களுக்கு மட்டும் வெளையலைன்னா நான் என்ன செய்ய முடியும்? நல்லா மருந்து அடிங்க!" என்றார். அதன்படி, ஒவ்வொரு விவசாயியும் 13 முறை மருந்து அடித்தும் கூட எந்தப் பலனுமில்லை. பதறிப்போன விவசாயிகள் மீண்டும் விதை வியாபாரியிடம் முறையிட்டபோது, "அப்படியா?... பெரிய கொடுமையாக இருக்கே!" என்று அனுதாபப்பட்டார்களே தவிர, ஒரு துரும்பையும் அசைக்கவில்லை.

பாதிக்கப்பட்ட விவசாயிகள், இப்பகுதியில் இயங்கும் விவசாயிகள் விடுதலை முன்னணித் தோழர்களிடம் முறையிட்டதும், அவர்கள் கள ஆய்வு செய்து, பூக்காத பருத்தி செடியை வேரோடு பிடுங்கி கையில் எடுத்துக் கொண்டு, விவசாயிகளுடன் சென்று விதை வியாபாரியிடம் நியாயம் கேட்டனர். பீதியடைந்த அவர், "பின்னர் பொறுமையாகப் பேசுவோம்" என்று சொல்லி அனுப்பிவிட்டு, "விவசாயிகள் என்னைத் தாக்க வந்தார்கள்" என்று கூடலூர் தெற்கு போலீசு நிலையத்தில் புகார் கொடுத்தார்.

இதற்கிடையில், விவசாயிகளின் வாழ்வை நாசமாக்கிய மோசடி விதை வியாபாரி மனோகரனைக் கைது செய்யக் கோரியும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்கக் கோரியும் வி.வி.மு. பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. தட்டி, சுவரொட்டி, துண்டுப் பிரசுரம் மூலம் பிரச்சினையை மக்களிடம் கொண்டு சென்றது. வட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர், வேளாண்மை அமைச்சர், முதலமைச்சர், மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் ஆகியோருக்கு புகார் செய்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. வேளாண்மை அதிகாரிகளோ, "அரசு சான்றிதழ் பெறாத விதைகளை வாங்கினால் இப்படித்தான் நடக்கும்" என்று வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சினார்கள்.

வி.வி.மு.வின் பிரச்சாரம் தீவிரமாவதைக் கண்டு பீதியடைந்த மனோகரன், தான் சார்ந்த கவுண்டர் சாதிப் 'பெரிய மனிதர்'களைக் கொண்டு, பாதிக்கப்பட்ட கவுண்டர் சாதி விவசாயிகளிடம் சமாதானம் செய்ய முயன்றார். இதனால் வெறுப்புற்ற விவசாயிகள், "நம்ம பொழைப்பிலே மண்ணை அள்ளிப் போட்டவனுக்கு நம்ம சாதியே துணை போகுதுன்னா, நமக்கு அந்த சாதி எதுக்கய்யா?" என்று கட்டுப்பாடுமிக்க அந்தச் சாதி சங்கத்திலிருந்து வெளியேறி விட்டனர். பின்னர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடன் போலீசு நிலையம் சென்று, மோசடி விதை வியாபாரியால் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதை உறுதியாக நின்று விளக்கினர். விவசாயிகளின் ஒற்றுமையைக் கண்ட போலீசு, மனோகரன் கொடுத்த புகார் மீது வழக்கு பதிவு செய்யாமல் விவசாயிகளைத் திருப்பி அனுப்பியது.

மோசடி மனோகரன், ம.தி.மு.க. கட்சிக்காரர் என்பதால் அக்கட்சியின் உள்ளூர்ப் பிரமுகர் இராமர் மூலம் விவசாயிகளை சமரசப்படுத்த முயன்றார். தனது தேவர் சாதியைச் சேர்ந்த விவசாயிகளும் மனோகரனால் பாதிக்கப்பட்டுள்ளதால், கட்சிக்காரர் தனது சாதியினரைப் பகைத்துக் கொள்ள முடியாமல், ஆளை விட்டால் போதும் என்று இராமர் நழுவி விட்டார். போலி கம்யூனிஸ்டு 'மார்க்சிஸ்ட்' கட்சியைச் சேர்ந்த ஒரு சிலர், வி.வி.மு.வை அவதூறு செய்து 'கவுண்டர் சாதி கம்யூனிசம்' பேசித் திரிகின்றனர். விவசாயிகள் நலன் பற்றி மேடைகளில் வாய்கிழியப் பேசும் ஓட்டுக் கட்சிகள், தமது சாதிய - வர்க்க நலன்களுக்காக விவசாயிகளுக்கு வெளிப்படையாகத் துரோகமிழைத்து வருவதை இந்த விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது. பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகள் சாதியத்தால் பிளவுபடாமல், வி.வி.மு. தலைமையில் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

— விவசாயிகள் விடுதலை முன்னணி
கூடலூர்.

# பாரம்பரிய விவசாயத்தை நாசமாக்கும் "மெடிசின் காய்"

தர்மபுரி மாவட்டத்தின் ஒசூர், தேன்கனிக் கோட்டை, தளி ஆகிய பகுதிகள் வளமான மண்ணும் நீர்வளமும் கொண்டவையாக இருந்ததால் ஒரு காலத்தில் "லிட்டில் லண்டன்" என்று அழைக்கப்பட்டது. செழுமையான இப்பகுதியின் விவசாயம் அண்மைக் காலமாக நாசமாக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் பல வெளிநாட்டு நிறுவனங்கள் தேக்கு, பூந்தோட்டம், பழப் பண்ணை, காய்கறிகள் பயிரிட்டு "புதிய வகை விவசாயம்" என்ற பெயரில் இந்த வட்டாரம் முழுவதும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்து வருகின்றன. உரம், பூச்சி மருந்து விலையேற்றத்தாலும், விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காததாலும் விவசாயம் செய்ய முடியாமல் உள்ள நிலங்களை உள்ளூர் தரகர்கள் மூலம் அதே பண்ணையில் வேலை தருவதாக ஆசை காட்டியும் வாங்கியுள்ளன.

இப்புதிய வகை விவசாயத்தின் ஓர் அங்கமாக வெள்ளரிப் பிஞ்சு போல காய்க்கும் ஒரு வகை காய் பயிரிடுமாறு ஏழை - சிறு விவசாயிகளுக்கு இந்நிறுவனங்கள் தரகர்கள் மூலம் விதைகளைக் கொடுக்கின்[illegible]தைப் பயிரிட்டால் ஏக்கருக்கு 30, 40 ஆயிரம் இலாபமீட்ட முடியும் என்று ஆசை காட்டுகின்றன. இதன்படி, இக்காயைப் பயிரிட்ட விவசாயிகளிடமிருந்து, அந்நிறுவனங்கள் தமது தரகர்கள் மூலம் விளைச்சலைப் பெற்றுக் கொள்கின்றன.

இந்தக் காயை ஆடு, மாடுகளோ, எலிகளோ சீண்டுவதில்லை. ஏதோ மருந்துக்காக இக்காயைப் பயிரிடுவதாக தரகர்கள் கூறுவதால், விவசாயிகள் இதனை "மெடிசின்காய்" என்றழைக்கின்றனர். இக்காயைப் பயிரிடும் விவசாயிகளுக்கும் நிலத்தில் வேலை செய்வோருக்கும் கை, கால் அரிப்பும், தோல் நோய்களும், வயிறு எரிச்சல், பேதி முதலானவையும் ஏற்பட்டுள்ளன. இக்காயைப் பயிரிட கொடிய இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதால் (தரகர்கள் மூலம் இந்நிறுவனங்களே இவற்றைக் கொடுக்கின்றன) நிலம் அடுத்த பருவத்தில் பயிரிட முடியாமல் தரிசாகிப் போகிறது. மேலும், மண்ணில் உள்ள மண்புழு மற்றும் பிற உயிரிகள் மடிந்து நிலம் பயன்படாமல் போகிறது; நிலத்தடி நீரும் குறைந்து போய் நஞ்சாகி விடுகிறது. இந்த மெடிசின் காயை என்ன செய்கிறார்கள்? எந்த நிறுவனத்திற்காக இது இரகசியமாகப் பயிரிடப்படுகிறது என்பது யாருக்கும் தெரியாத மர்மமாகவே உள்ளது. தரிசாக்கப்படும் விவசாய நிலம் அடிமாட்டு விலைக்கு விவசாயிகளிடமிருந்து பறிக்கப்படுகிறது.

காவிரி கழிமுகம் பகுதியில் இறால் பண்ணை; போடி - கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் தேக்குப் பண்ணை என பாரம்பரிய விவசாயம் பாழடிக்கப்பட்டு, சிறு விவசாயிகளின் நிலங்கள் பறிக்கப்பட்டதைப் போலவே, இப்போது தர்மபுரி மாவட்ட மேற்குப் பகுதியின் விவசாயம் நாசமாக்கப்பட்டு வருகிறது. "புதிய வகை விவசாயம்" என்ற பெயரில் இறால் மீன், காய்கறி, பூ, பழம், தேக்கு, மெடிசின் காய் எனத் தொடரும் இத்திட்டங்களால் விவசாயமும் விவசாயிகளும் சூறையாடப்படுகிறார்கள். நமது நாடும் மக்களும் ஏகாதிபத்தியங்களிடம் நிரந்தரமாகக் கையேந்த வைக்கும் சதித் திட்டமே இது. தனியார்மயம், தாராளமயம் எனும் கேடு கெட்ட கொள்கையின் விளைவுதான் இது.

புதிய வகை விவசாயம் என்ற பெயரில் விவசாயின் வாழ்வையும் மண்ணின் வளத்தையும் சூறையாடும் இந்நாசகாரத் திட்டங்களையும், மெடிசின் காய் உற்பத்தியையும் எதிர்த்து விவசாயிகள் விடுதலை முன்னணி இவ்வட்டாரத்தில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகிறது.

— விவசாயிகள் விடுதலை முன்னணி,
தர்மபுரி மாவட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# புதைக்கப்பட்ட உண்மைகள் பூதமாகக் கிளம்பும்

**28 ஆண்டுகளுக்கு முன்பு நக்சல்பாரி புரட்சியாளர் தோழர் வர்கீசைச் சுட்டுக் கொன்றதாக, ஒரு போலீசுக்காரர் இப்போது வாக்குமூலம் அளித்துள்ளார். கொலைகார போலீசு அமைப்புக்கு எதிரான புயல் கேரளாவில் சுழன்றடிக்கிறது.**

"திருநெல்லியில் இன்று இரவு இரு விண்மீன்கள் உயர்ந்தோங்கி மின்னும்; அவை தோழர் வர்கீசின் கண்களாகும்'' என்று ஆண்டு தோறும் தோழர் வர்கீசின் நினைவு நாளான பிப்ரவரி 18-ஆம் தேதியன்று கேரளத்தில் சுவரெழுத்துகளும் சுவரொட்டிகளும் பளிச்சிடும். "கேரளத்தின் சேகுவேரா'' என்றழைக்கப்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர் தோழர் வர்கீசின் நினைவு 28 ஆண்டுகளாகியும் இன்னமும் மக்களின் மனங்களிலிருந்து நீங்கவில்லை..இளைய தலைமுறையின் எழுச்சி நாயகனாக அவர் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

1960-களின் இறுதியில், வசந்தத்தின் இடிமுழக்கமாக எழுந்த நக்சல்பாரி புரட்சியைத் தொடர்ந்து, அப்போது 'மார்க்சிஸ்ட்' கட்சி செயல் வீரராக இருந்த தோழர் வர்கீசு, அக்கட்சியின் திரிபுவாதத்தைத் திரைகிழித்து நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தில் இணைந்தார். அவர் வயநாடு காடுகளுக்கும் மலைகளுக்கும் சென்றார்; இயற்கையை ரசிப்பதற்கு அல்ல. வயநாடு ஆதிவாசி மக்களிடம் 'நாகரீக' மனிதர்களின் சூழ்ச்சிகளைச் சொன்னார். தேயிலை எஸ்டேட்டு முதலாளிகளின், நிலப்பிரபுக்களின் கொடூரச் சுரண்டலையும், கொத்தடிமைத் தனத்தையும் விளக்கி வயநாடு மக்களை எழுச்சியுறச் செய்தார். காடுகளும் மலைகளும் அவர்களுக்கே சொந்தமாக வேண்டுமென்றார். ஆண்டுதோறும் வள்ளியூர் கோயில் திருவிழாவில் ஆதிவாசிகளைப் பிடித்து ஆடு - மாடுகள் போல் விற்கும் கொடுமையை எதிர்த்து நின்றார். இந்தப் போராட்டத்தில் வாசுதேவ அதிகா என்ற கொடிய நிலப்பிரபுவும் ஒரு போலீசு ஆள்காட்டியும் புரட்சியாளர்களால் அழித்தொழிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து நக்சல்பாரி புரட்சியாளர்களை ஒழிக்க கொலைகார போலீசு வெறியன் லட்சுமணா மற்றும் விஜயன் தலைமையில் ஒரு போலீசு அதிரடிப் படை நிறுவப்பட்டு வயநாட்டில் தேடுதல் வேட்டை தீவிரமானது. தோழர் வர்கீசு தலைமறைவாகி திருநெல்லி அருகே ஒரு மூதாட்டியின் வீட்டில் தங்கியிருந்தார். இதை ஆள்காட்டிகள் மூலம் அறிந்த போலீசு 1970 - பிப்ரவரி 18 அன்று காலை, தோழர் வர்கீசைக் கைது செய்து ஜீப்பில் இழுத்துச் சென்றது. பின்னர் போலீசாரால் சித்திரவதை செய்யப்பட்டு, திருநெல்லி அருகேயுள்ள காட்டில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது கண்கள் போலீசாரால் பிடுங்கி எறியப்பட்டன. பின்பு, போலீசாருடன் நடந்த ஆயுத மோதலில் அவர் குண்டடிபட்டு மாண்டதாக அன்றைய காங்கிரசு அரசும் போலீசும் கதை கட்டின.

வர்கீசுடன் இணைந்து செயல்பட்ட அவரது தோழர்கள் போலீசாரால் கொடூரமாக வதைக்கப்பட்டனர். வயநாட்டு மக்களைச் சித்திரவதை செய்து மிரட்டி, நிராயுதபாணியாக வர்கீசைக் கைது செய்து இழுத்துச் சென்றதை போலீசார் மூடி மறைத்தனர். நக்சல்பாரி இயக்கத்தின் முன்னணித் தலைவர்களும் செயல் வீரர்களும் நாடெங்கும் நரவேட்டையாடப்பட்ட இருண்ட காலம் அது. கேள்வி முறையின்றி நடந்த இத்தகைய அரசு பயங்கரவாத வெறியாட்டத்தால், கொலைகார போலீசார் எந்த விசாரணையுமின்றி திமிராகத் திரிந்தனர். அவர்களுக்குப் பரிசுகளும் பதவி உயர்வும் அளிக்கப்பட்டது.

ஆனால், புதைக்கப்பட்ட உண்மைகள் இப்போது பூதமாகக் கிளம்பியுள்ளன. '70-களில் நக்சல்பாரி ஒழிப்பு அதிரடிப் படையில் பணியாற்றி, இப்போது ஓய்வு பெற்றுள்ள இராமச்சந்திரன் நாயர் என்ற போலீசுக்காரர், "எனது மேலதிகாரி லட்சுமணாவின் உத்தரவின்படி, நான் தான் வர்கீசைச் சுட்டுக் கொன்றேன் '' என்று இப்போது வாக்கு மூலம் அளித்துள்ளார். நக்சல்பாரி இயக்க ஆதரவாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்பினரின் முன் முயற்சியால் வெளிவந்த இந்த உண்மை, கேரள பத்திரிகைகளிலும் சில ஆங்கிலப் பத்திரிகைகளிலும் விபரமாக வெளிவந்து, கொலைகார போலீசின் கோர முகத்தையும், அன்றைய காங்கிரசு - வலது கம்யூனிஸ்டு கூட்டணி அரசின் பயங்கரவாத வெறியாட்டத்தையும் படம் பிடித்துக் காட்டியது.


கொலைகார போலீசுப் படைத் தலைவனாகிய லட்சுமணா, அவசரநிலை பாசிச ஆட்சிக் காலத்தில் கள்ளிக் கோட்டை பொறியியல் கல்லூரி மாணவரும், நக்சல்பாரி இயக்க ஆதரவாளருமான தோழர் ராஜனை காகயம் முகாமில் சித்திரவதை செய்து கொன்று, பீச்சி அணைக்கட்டில் உடலை வீசியெறிந்தவன். இவனது தலைமையில், 1976-இல் நக்சல்பாரி புரட்சியாளர் தோழர் விஜயன் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். அவரது உடலை யாருக்கும் தெரியாமல் வர்க்கலா எனுமிடத்தில் எரிக்கக் கொண்டு சென்றதாக ஓய்வு பெற்ற போலீசு வாகன ஓட்டுநர் ஒருவர் அண்மையில் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

அடுத்தடுத்து வெளிவந்த இந்த வாக்கு மூலங்களைத் தொடர்ந்து கேரள மக்கள், போலீசின் பயங்கரவாத வெறியாட்டங்களை அறிந்து அதிர்ச்சியும் ஆத்திரமும் கொண்டுள்ளனர். பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், புரட்சிகர இயக்கங்களும் தோழர் வர்கீஸ், விஜயன் கொலைகளுக்கு முழுமையான நீதி விசாரணை கோரியும், கொலைகார போலீசாரைத் தண்டிக்கக் கோரியும் பிரச்சார இயக்கங்களை நடத்தி வருகின்றன. கேரள 'மார்க்சிஸ்டு' அரசோ, "அவர்கள் நக்சல்பாரி தீவிரவாதிகள்; மேலும் இந்த சம்பவங்கள் காலம் கடந்தவையாகிவிட்டன'' என்று எந்த விசாரணையும் நடத்த முடியாது என அறிவித்தது. ஆனால் கேரளா மட்டுமின்றி நாடெங்கும் பொது மக்களின், மனித உரிமை - ஜனநாயக உரிமை அமைப்புகளின் கண்டனமும் நிர்ப்பந்தமும்

**மேலதிகாரியின் உத்திரவின்படி தோழர் வர்கீசைச் சுட்டுக் கொன்ற இராமச்சந்திரன் நாயர்.**



28 ஆண்டுகளுக்கு முன்பு போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர் தோழர் வர்கீசு.





படிப்பகம்

www.padippakam.com

வலுக்கத் தொடங்கியதாலும், 'மார்க்சிஸ்டு' கட்சிக்குள்ளேயே எதிர்ப்புகள் கிளம்பியதாலும் வேறு வழியின்றி கேரள மாநில அரசு இப்போது நீதி விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளது.

* * *

போலீசுடன் மோதல் என்ற பெயரில் நக்சல்பாரி புரட்சியாளர் தோழர் வர்கீசு கொல்லப்பட்ட சம்பவம் தனிப்பட்ட ஒரு போலீசு பயங்கரவாத விவகாரம் அல்ல. '70-களில் நாடெங்கும் நக்சல்பாரி புரட்சியாளர்களைக் கொன்றொழிக்க கட்டவிழ்த்து விடப்பட்ட அரசு பயங்கரவாத அடக்குமுறையின் ஓர் அங்கம்தான் அது. கேரளத்தின் வர்கீசைப் போலவே, மே. வங்கத்தில் சாரு மசும்தார், சரோஜ் தத்தா; ஆந்திராவில் பஞ்சாத்ரி கிருஷ்ண மூர்த்தி, வெம்படப்பு சத்திய நாராயணா; தமிழகத்தில் தோழர் அப்பு என நூற்றுக்கணக்கில் நக்சல்பாரி புரட்சியாளர்கள் போலீசாரால் கொல்லப்பட்டனர்.

'80-களின் தொடக்கத்தில் தமிழகத்தின் தர்மபுரி - வட ஆற்காடு மாவட்டங்களில் போலீசு 'சூரப்புலி' தேவாரம் நடத்திய நரவேட்டையில் தோழர் பச்சையப்பன் மற்றும் பத்துக்கும் மேற்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர்கள் மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இன்று ஆந்திராவிலும் பீகாரிலும் இதே வழியில் கொலை வெறியாட்டங்கள் தொடர்கின்றன. மனித உரிமை - ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து, இரகசிய கொலைக் குழுக்களை நிறுவி, மோதல் என்ற பெயரில் நக்சல்பாரிப் புரட்சியாளர்களைக் கொன்றொழிக்கும் இத்தகைய பயங்கரவாத நரவேட்டைக்கு முடிவு கட்ட வேண்டும்.

கேரளத்தின் லட்சுமணா, தமிழகத்தின் தேவாரம், ஆந்திராவின் உமேஷ் சந்திரா போன்ற கொலைகார போலீசு அதிகாரிகள், கொலைக் குழுக்கள், இந்நரவேட்டைக் கொள்கையை வகுத்துச் செயல்படுத்திய அரசு அதிகாரிகள், இதற்குத் துணை நின்ற அரசியல்வாதிகள், அமைச்சர்கள் உள்ளிட்டு அனைத்து குற்றவாளிகளும் தண்டிக்கப்பட வேண்டும்.

விசாரணைக் கமிஷன் மோசடிகளுக்குப் பெயர்போன கேரளத்தின் 'இடதுசாரி' அரசு, நீதி விசாரணை நாடகமாடி குற்றவாளிகளைத் தப்புவித்தாலும், இந்த விவகாரங்கள் பயங்கரவாதப் போலீசின் கொடுமைகள் - கொலைகளுக்கு எதிராக மக்களை விழித்தெழச் செய்யும்; மனித உரிமை ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தில் பெரும்படையாய்த் திரண்டெழச் செய்யும். இப்புரட்சிகர எழுச்சியில் மக்கள் மன்றங்கள் கொலைகார போலீசு குற்றவாளிகளைத் தண்டிக்கவே செய்யும்.

• மனோகரன்

# திவாலான ஏழைநாட்டில் ஏகாதிபத்திய சூறையாடல்

***நிதித்துறை தாராளமயத்தைக் கொண்டு பிரேசிலை விழுங்கிய ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள், வர்த்தகச் சூதாட்டத்தின் மூலம் எஞ்சிய செல்வத்தையும் சூறையாடி வருகின்றன. இன்று; பிரேசில்; நாளை இந்தியாவா?***

பிச்சைக்காரனிடம் வழிப்பறி செய்த கதையாக, திவாலாகும் நிலையிலுள்ள பிரேசில் நாட்டை ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் மேலும் ஒட்டச் சுரண்டி சூறையாடக் கிளம்பி விட்டன. கடந்த ஜூலையிலிருந்து மாதத்திற்கு 500 கோடி டாலர் அளவுக்கு அந்நாட்டின் செல்வங்கள் தொடர்ந்து சூறையாடப்பட்டு வருகிறது.

தென் அமெரிக்கக் கண்டத்திலுள்ள நாடான பிரேசில் காபிக்கும் சர்க்கரைக்கும் பெயர்போன நாடாகும். கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக உலகவங்கி - ஐ.எம்.எப்-பின் மேற்பார்வையில், அந்நாட்டில் 'கட்டுமானச் சீர்திருத்தங்கள்' என்ற பெயரில் தனியார் மயமும் தாராளமயமும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது. ஆனாலும், இக்கொள்கைகள் படுதோல்வி அடைந்து, மீளமுடியாத பொருளாதார நெருக்கடியிலும் வறுமையிலும் அந்நாடு சிக்கித் தவித்து வருகிறது.

1994-இல் இத்தகைய நெருக்கடிகள் தீவிரமானதும், அந்நியக் கடன்களுக்கான வட்டியை விரைவாகச் செலுத்த, பட்ஜெட் பற்றாக்குறையை உடனடியாகக் குறைக்குமாறு ஐ.எம்.எப். உத்திரவிட்டது. இதனால் சேவைத் துறைகளுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யமுடியாமல் முடமாக்கப்பட்டது. வேறுவழியின்றி, நாட்டில் தொலைபேசித் துறையும் மின்துறையும் தனியார்மயம் என்ற பெயரில் அந்நிய முதலீட்டாளர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டன. நகராட்சி குடிநீர் விநியோகம், கழிவுநீர் அகற்றல் கூட தனியார்மயமாக்கப்பட்டன. ஆனாலும், இத்தகைய சீரமைப்பு நடவடிக்கைகளின் மூலம் கடன்களுக்கான வட்டியின் சுமை கடுகளவுதான் குறைந்தது.

அதே சமயம் பிரேசிலின் நாணய மதிப்புச் சரிவினால் வட்டிச் சுமை தொடர்ந்து உயர்ந்து கொண்டே போனது. இந்நிலைமைகளைச் சீரமைக்க, மேலும் கூடுதலாக வரிவிதிப்பும், ஊதியமுடக்கமும், மீண்டும் உலக வங்கி - ஐ.எம்.எப்.-பிடம் கடன்வாங்குவதும், நிதித்துறையை அந்நிய நிறுவனங்களுக்குத் திறந்து விடுவதும் தீவிரமாக்கப்பட்டன. சுருக்கமாகச் சொன்னால், நாடும் மக்களும் மொட்டையடிக்கப்பட்டனர்.

ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு முன்பு, தென் கிழக்காசிய நாடுகளின் நாணய மதிப்பை வீழ்த்தியதன் மூலம், அந்நாடுகளின் தொழில் மற்றும் நிதித்துறைகளைக் கைப்பற்றிக் கொண்டு, அந்நாடுகளை மறுகாலனியாக்குவதை ஏகாதிபத்தியங்கள் தீவிரப்படுத்தின. இதை அனுபவமாகக் கொண்டு, ஏழை நாடுகள் அனைத்தையும் இந்த உத்தியுடன் மறுகாலனியாக்க தீவிரமாக முயற்சித்து வருகின்றன, அவை.

ஆனால், பிரேசில் ஏற்கனவே உலக வங்கி - ஐ.எம்.எப்.-பின் கடுமையான நிபந்தனைகளில் சிக்கி ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியாக்கப்பட்ட நாடு. அந்நாட்டின் தொழில் மற்றும் நிதித்துறைகள் ஏகாதிபத்தியங்களின் கோரப்பிடியில் தான் உள்ளன. ஏற்கனவே மொட்டையடிக்கப்பட்ட அந்நாட்டின் எஞ்சிய செல்வங்களையும் சூறையாட புதிய உத்தியுடன் ஏகாதிபத்தியங்கள் கிளம்பியுள்ளன.

தென்கிழக்காசிய நாடுகளைப் போலவே, பிரேசில் நாட்டின் நாணய மதிப்பு உலக வங்கி - ஐ.எம்.எப்.-பின் சதிகளால் கடந்த ஜூலையில் சரியத் தொடங்கியது. நாணய மதிப்புச் சரிவை தடுப்பதற்காக அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுக்கவும் ஐ.எம்.எப். ஒப்புதல் அளிக்கவில்லை. பிரேசிலுக்குக் கடன் கொடுத்த மேலைநாட்டு வங்கிகள், கடன் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் ஆகியன தமது முதலீடுகளை திரும்ப பெற்றுக் கொள்வதாக எச்சரித்தன. இதனால் பங்குச் சந்தையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டு, அமெரிக்க டாலர் நாட்டினுள் வருவது குறைந்து போய், வெளியேறுவது அதிகரித்தது. இதன் விளைவாக அந்நியச் செலாவணி இருப்பு குறைந்து, அதை ஈடு கட்ட உள்






படிப்பகம்

நாட்டு வங்கிச் சேமிப்புகளை அடகு வைத்து மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலைக்கு பிரேசில் தள்ளப்பட்டது. இந்நிலையில் பிரேசிலுக்கு குறுகிய கால கடன் கொடுத்த ஏகாதிபத்திய வங்கிகள், தமது வட்டி விகிதத்தை திடீரென இருமடங்கு உயர்த்தின. இதன் விளைவாக மாதம் ஒன்றுக்கு 500 கோடி டாலர் அளவுக்கு கூடுதலாக வட்டி கட்ட வேண்டிய் அவலத்தில் பிரேசில் திணறியது. பிரேசிலின் மத்திய வங்கி தனது சொத்துக்களை மறு அடகு வைத்தது. இப்படி கடந்த ஆறு மாதங்களாக வெளிப்படையாகவே அந்நாடு சூறையாடப்பட்டது.

தென்கிழக்காசிய நாடுகளை பொருளாதாரச் சரிவிலிருந்து மீட்க, உலக வங்கியும் - ஐ.எம்.எப்.பும் கடன் கொடுத்து, 'உதவி' என்ற பெயரில் கடுமையான நிபந்தனைகளை விதித்து மறுகாலனியாதிக்கத்தைத் தீவிரப்படுத்தியதைப் போல, பிரேசிலை மீட்க அவை 'உதவி'க்கு ஓடோடி வந்தன. கடந்த அக்டோபரில் உலக வங்கி-ஐ எம்.எப்.பின் வருடாந்திரக் கூட்டத்தில் பிரேசில் நிலைமை பற்றி விவாதிக்கப்பட்டது. அதே நேரத்தில் பிரேசிலுக்கு பெருமளவு கடன் கொடுத்துள்ள அமெரிக்காவின் சிட்டி வங்கி துணைத் தலைவருடன் உலக வங்கி - ஐ.எம்.எப். அதிகாரிகள் திரைமறைவில் இரகசிய ஆலோசனைகள் நடத்தினர். அதன்படி ஐ.எம்.எப்., பிரேசிலை மீட்க 3000 கோடி டாலரை அவசரக் கடனாகக் கொடுத்தது. ஆனால் மூன்று மாதங்களுக்கு முன்னதாக, இதே அளவு தொகை நாணய மதிப்பு வீழ்ச்சியாலும் அந்நிய நிதி நிறுவனங்கள் தமது முதலீடுகளை திரும்பப் பெற்றதாலும், கடன் நிறுவனங்களின் கூடுதல் வட்டியாலும் பிரேசிலிலிருந்து கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. ஐ.எம்.எப்.பின் கடனைக் கொண்டு, ஏகாதிபத்திய கடன் நிறுவனங்களின் கூடுதல் வட்டியைத்தான் செலுத்த முடிந்தது. உண்மையில் ஐ.எம்.எப்.பின் 'உதவி', பிரேசிலுக்குள் நுழையவேயில்லை. அது அமெரிக்காவின் கடன் மற்றும் நிதி நிறுவனங்களால் அங்கேயே அபகரிக்கப்பட்டு விட்டது.

பிரேசிலின் பொம்மை அதிபரான கார்டோசோ, இப்பகிரங்கச் சூறையாடலுக்கு விசுவாசமாகக் கைகட்டி நின்றதைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை. ''எல்லா வகையான நிதி மோசடிகளின் களமாக பிரேசில் மாற்றப்பட்டு விட்டது'' என்று புலம்புவதைத் தவிர அந்நாட்டின் நிதியமைச்சரால் வேறொன்றும் செய்ய முடியவில்லை. இச்சூறையாடலைத் தொடர்ந்து நாடெங்கும் ஊதிய முடக்கம், வேலையின்மை, கூடுதல் வரி, விலையேற்றம், பணவீக்கம் முதலான பொருளாதாரத் தாக்குதல்களின் [illegible] அந்நாட்டின் 16 கோடி மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் பரிதவிக்கிறார்கள்.

www.padippakam.com

பிரேசிலைத் தொடர்ந்து, அதே வழியில் நாணய மதிப்புச் சரிவினாலும், நிதித்துறை தாராளமயத்தாலும் பெரு, அர்ஜெண்டினா, வெனிசூலா, சிலி ஆகிய தென்னமெரிக்க நாடுகள் திவால் நிலைக்குத் தள்ளப்பட்டு, ஏகாதிபத்தியங்களால் சூறையாடப்படுகின்றன. அர்ஜெண்டினாவின் மிகப் பெரிய வர்த்தக வங்கிகள் திவாலாக்கப்பட்டு, அந்நிய நிதி நிறுவனங்களுக்கு அடிமாட்டு விலைக்கு அண்மையில் விற்கப்பட்டுள்ளன. பெரு நாட்டில் ஐ.எம்.எப். கட்டளைப்படி தொடரும் பொருளாதாரத் தாக்குதல்களை எதிர்த்து, கடந்த அக்டோபரில் நடந்த பொது வேலை நிறுத்தம், இராணுவத்தால் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டது. மொத்தத்தில் தென் அமெரிக்கக் கண்டம் ஏகாதிபத்திய ஓநாய்களின் வேட்டைக் காடாக மாற்றப்பட்டுவிட்டது.

★☆★

ஏகாதிபத்திய நிறுவனங்கள் ஏழை நாடுகளில் உற்பத்தி சார்ந்த துறைகளில் முதலீடு செய்து கொள்ளையடிப்பது என்பது இப்போது பழமையானதாகி விட்டது. குறுகிய காலத்தில், ஊக வணிகச் சூதாட்டங்களின் மூலம் எவ்விதச் சிரமும் இன்றி, வெகு எளிதாகக் கொள்ளையடிக்க ஏழைநாடுகளின் நிதித் துறையைக் கைப்பற்றுவதே அவற்றின் அண்மைக்கால உத்தியாக உள்ளது. அதனாலேயே நிதித்துறையில் - வங்கி காப்பீட்டுத் துறையில் ஏகாதிபத்திய நிறுவனங்களை உடனடியாக அனுமதிக்க வேண்டும் என்று ஏழை நாடுகளை அவை நிர்பந்தித்து வருகின்றன. முதலாளித்துவ பொருளாதாரத்தில் ஊக வணிகச் சூதாட்டம் ஒரு அங்கமாக இருந்தது போய், ஊக வணிகச் சூதாட்டத்தையே ஏழை நாடுகளின் பொருளாதாரமாக மாற்றிவிட அவை முயற்சிக்கின்றன.

> **வங்கி, காப்பீடு, பங்குச் சந்தை வணிகம் போன்ற துறைகளில் தாராளமயத்தைப் புகுத்துவதன் மூலம் ஏழை நாடுகளின் வறுமையும், வேலையின்மையும் ஒழிந்து விடப் போவதில்லை; மாறாக, இந்தியா உள்ளிட்ட ஏழை நாடுகள், பன்னாட்டு நிதி நிறுவனங்கள் உள்ளே நுழைந்து சூதாடுவதற்கான, சூதாட்ட விடுதிகளாக மாற்றியமைக்கப்படுகின்றன.**

சுதேசி வீரம் பேசிய இந்துவெறி ஆட்சியாளர்களோ, காப்பீட்டுத் துறையை அந்நிய நிதி நிறுவனங்களுக்குத் திறந்து விட்டு பிரேசிலைப் போல இந்தியாவைக் கொள்ளையிடத் தாராளமாக அனுமதித்துள்ளனர். இது வெறுமனே வங்கி-காப்பீட்டுத்துறை ஊழியர்களின் எதிர்கால வாழ்வு பற்றிய பிரச்சினை மட்டுமல்ல; நாட்டையே சூறையாட அனுமதிக்கும் அயோக்கியத்தனமாகும். தலைப்பாகைக்கு அல்ல; தலைக்கே ஆபத்து வந்துள்ளதை உணர்ந்து நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கு எதிராக, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் இந்துவெறி பாசிச துரோகிகளுக்கு எதிராக, நாட்டு மக்கள் கிளர்ந்தெழ வேண்டிய தருணமிது.

• குமார்

## மக்களின் போராட்டத்திற்கு அடிபணிந்தது அதிகார வர்க்கக் கூட்டம்

மழை, வெயில், குளிர், பூகம்பம், புயல் என எந்த இயற்கைச் சீற்றமானாலும் பலியாவது உழைக்கும் மக்களே! சமீபத்திய பெரு மழையால் தமிழகம் முழுதும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர். பல்லாயிரம் பேர் வீடு, வாசல் இழந்து வீதியில் வீசப்பட்டுள்ளனர். அரசோ, எருமை மாட்டில் பெய்த மழையாக அசையாது நிற்கிறது.

விழுப்புரம் நகரில் பாப்பாங்குளம், முத்தோப்பு, ஊரல் மேடு, கே.கே. ரோடு சுடுகாட்டுப் பாதை, புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ள நாராயணன் நகர், கணபதி நகர் போன்ற பகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்து, மக்களின் அற்ப உடமைகளும் மூழ்கிப் போயின.

மழைக்கு முன்பே வெள்ளம் புகும் அபாயம் பற்றி இந்தப் பகுதி மக்கள் அரசு அதிகாரிகளிடம் எடுத்துக் கூறியிருந்தும் கூட, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை, வெள்ளம் சூழ்ந்த பின் நகராட்சி ஆணையர், நகர் மன்றத் தலைவர் என பலரிடம் முறையிட்டும் கூட, நிவாரண உதவி எதுவும் வழங்காமல் அந்தப் பகுதி மக்கள் அலட்சியப்படுத்தப்பட்டு, அவமானத்துக்குள்ளாயினர். ஊரல் மேடு, பாப்பாங்குளம், முத்தோப்பு பகுதிகளில் பெரும்பாலான வீடுகள் இடிந்து போயின.

இப்பகுதி கவுன்சிலர் உமாவதி குப்புசாமி, ஊர்ப் பணத்தைச் சூறையாடி சொத்து சேர்க்க அக்கறை காட்டியுள்ளாரே தவிர, கடுகளவு கூட மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க அக்கறை காட்டவில்லை. பொறுத்திருந்த மக்கள் 12.12.'98-இல் சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர்.

200-க்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் சாலை மறியலில் இறங்கவே விழுப்புரம் - பாண்டிச்சேரி சாலை 2 மணி நேரத்திற்கு செயலற்றுப் போனது. போக்குவரத்து நின்ற சற்று நேரத்தில் அங்கு வந்த கவுன்சிலர் உமாவதி குப்புசாமி, 'இதோ மழை நீரை வெளியேற்ற அதிகாரிகளிடம் ஆணை பெற்றுள்ளேன்; மறியலைக் கைவிடுங்கள்' என ஒரு துண்டுச் சீட்டைக் காட்டி பகுதி மக்களை ஏய்க்கப் பார்த்தார். அவரை பெண்களே விரட்டியடித்தனர்,

அவர் போன பின்பு உதவி ஆய்வாளர் சங்கர் தலைமையில் காவல்துறை குவிக்கப்பட்டது. போராடிய ஆண்களும் பெண்களும் கைது செய்யப்பட்டனர். அதன் பின்பே அதிகாரிகள் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மக்களும் மாலையில் விடுதலை செய்யப்பட்டனர். 'போராட்டம் இல்லாமல் வாழ்க்கை இல்லை' என அனுபவ பூர்வமாக மக்கள் உணர்ந்து கொண்டனர்.

— புதிய ஜனநாயக வாசகர் வட்டம்,
விழுப்புரம்.



படிப்பகம்

www.padippakam.com

# 'நீதி' மன்றங்களின் ஆணாதிக்க கழிசடைத்தனம்

**பாலியல் குற்ற வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்தின், அதிகார வர்க்கத்தின் அணுகுமுறையே பெண்களுக்கு எதிராக இருக்கும் பொழுது, தூக்கு தண்டனைச் சட்டம் கொண்டு வருவதால், குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என நம்புவதற்கு இடமில்லை!**



பெண்கள் மீது பாலியல் வன்முறைத் தாக்குதல் நடத்தும் காமுகர்களுக்கும், சமூக விரோதிகளுக்கும் தூக்கு தண்டனை வழங்குவதற்கு ஏதுவாக சட்டம் கொண்டு வரப்படும் என்று அறிவித்துள்ளார், உள்துறை அமைச்சர் அத்வானி. ''பச்சப் புள்ளய்யா அது... அதைத் தூக்கிட்டுப் போயி கெடுத்துட்டான் அந்தப் பாவிப்பய'' என்பது போன்ற செய்திகளைக் கேள்விபடும் பொழுது, நமக்கும்கூட இந்த மிருகங்களையெல்லாம் தூக்கில்தான் போடவேண்டும் என்ற நினைப்புத் தோன்றும்.

இந்தியாவில், நாளொன்றுக்கு சராசரியாக 24 பெண்கள் - அதாவது ஒரு மணி நேரத்துக்கு ஒரு பெண் என்ற விகிதத்தில் - பாலியல் வன்முறைக்குப் பலியாகின்றனர். இதுகூட முழுமையான புள்ளி விவரம் கிடையாது. மானத்திற்குப் பயந்து பாதிக்கப்பட்ட பெண் வெளியே சொல்லாத, போலீசு அதிகாரிகளால் பதிவு செய்ய மறுக்கப்படுகின்ற, தீவிரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில், காசுமீரிலும், வடகிழக்கு இந்தியாவிலும் இராணுவம் புரியும் பாலியல் வன்முறைத் தாக்குதல்களையும், பெற்ற தந்தையாலும், நெருங்கிய உறவினர்களாலும் பாலியல் பலாத்காரப்படுத்தப்படும் பெண்களின் / சிறுமிகளின் வழக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், இந்த எண்ணிக்கை கூடுதலாகத்தான் இருக்கும். இப்படிப்பட்ட தருணத்தில்தான், அத்வானி, பாலியல் தாக்குதலுக்கு ஏழு ஆண்டுகால கடுங்காவல் தண்டனை வழங்கும் சட்டத்தைத் தூக்கிப் போட்டுவிட்டு, தூக்கு தண்டனை வழங்கும் சட்டத்தைக் கொண்டு வரப்போவதாக அறிவித்துள்ளார்.

தண்டனையைக் கடுமையாக்குவதன் மூலம் குற்றங்களைக் குறைத்துவிட முடியும் என்பது ஆளுங்கும்பலின் வாதம். ''தடா''வும், ''பொடா''வும் இந்த அடிப்படையில் பிறந்தவைதான். நம்முள் பலரும் கூட, குற்றங்கள் குறைய அரபு நாடுகளைப் போல கடுமையான சட்டங்கள் வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கலாம். ஆனால், தண்டனை கடுமையாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் இருக்கும் அரபு நாடுகளில் கூட குற்றங்கள் குறைவாகிக் கொண்டு வருகின்றன என்று சொல்லி விட முடியாது!

குற்றங்கள் நிகழ்வதற்கான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஒழிக்காமல், குற்றங்களை ஒழித்துவிட முடியாது என்பதுதான் சமூகவியல் உண்மை. தாராளமயம் என்ற பெயரில், எல்லாவித பாலியல் ஒழுக்கக் கேடுகளையும் - வக்கிரச் சீரழிவுகளையும் பரப்புவதற்கு ஒருபுறம் அனுமதித்துக் கொண்டு, மறுபுறம் பாலியல் குற்றங்களுக்குத் தூக்கு தண்டனை என்று ஆளுங்கும்பல் பூச்சாண்டி காட்டுவது, கபடத்தனமாகாதா?

நடைமுறையில் இருந்து வரும் சட்டத்தின்படி, பதிவான பாலியல் தாக்குதல் வழக்குகளில், 4 சதவீதக் குற்றவாளிகள்தான் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுகின்றனர். இதை வேறுவிதமாகச் சொன்னால், ஒரு நாளைக்கு 24 பெண்கள் பாலியல் வன்முறைக்குப் பலியானால், அவர்களுள் ஒரு பெண்ணுக்கேனும் நீதியும், நியாயமும் கிடைப்பது அரிதாக உள்ளது.

கீழ் நீதிமன்றங்களில் தண்டிக்கப்படும் பாலியல் குற்றவாளிகளைக் கூட, மேல் நீதிமன்றம் ''சாட்சியம் தெளிவாக இல்லை'' என்ற சட்டவாதத்தை முன்வைத்து, நிரபராதியாக வெளியே அனுப்பி விடுகிறது. இந்த நிலையில், தூக்கு தண்டனைச் சட்டம் வந்துவிட்டால், பாலியல் குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்பட்டு விடுவார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது?

பாலியல் குற்றங்களை விசாரிக்கும் அதிகார வர்க்கத்தின், நீதிமன்றத்தின் நாணயத்தையே கேள்விக்குள்ளாக்க வேண்டியுள்ளது. ஏனென்றால், சட்டத்தை மாற்றி விடுவதால், பாலியல் குற்றங்களை விசாரிக்கும் அதிகார வர்க்கத்தின், நீதிமன்றத்தின் ஆணாதிக்கமும் பெண்களை வெறும் போகப் பொருளாக என்னும் அதன் பிற்போக்கு கண்ணோட்டமும் மாறிவிடப் போவதில்லை. ஒவ்வொரு முறையும், பாலியல் குற்றவாளிகளை வழக்கில் இருந்து நீதிமன்றம் விடுவிக்கும் பொழுது, அவனால் பாதிக்கப்பட்ட பெண்ணின் ஒழுக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி விடுகிறது. பச்சையாகச் சொன்னால், இந்திய நீதிமன்றங்கள், பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டதாக வழக்கு தொடரும் பெண்களில், 96 சதவீதப் பெண்களை ஒழுக்கம் கெட்டவர்களாக முத்திரை குத்துகிறது. நாடெங்கிலும் அதிர்ச்சியை ஏற்படுத்திய தொடர் பாலியல் குற்ற வழக்குத் தீர்ப்புகளிலும் கூட நீதிமன்றத்தின் இவ்வக்கிர புத்தியைக் காணலாம்.

**இராசஸ்தானைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவரின் மகளான இவர், தன்னை மிரட்டி தொடர்ச்சியாக பாலியல் பலாத்காரப் படுத்திய கும்பல் மீது வழக்கு தொடுத்த வுடனேயே, அந்தக் காமுகர்கள் இவரை, காமவெறி பிடித்தவள் என அவதூறுப் பிரச்சாரம் செய்தனர்.**



★ ☆ ★

மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த மதுரா என்ற பதினாறே வயதான ஆதிவாசிப் பெண்ணை, இரண்டு போலீசுக்காரர்கள் போலீசு நிலையத்தில் வைத்து பாலியல் பலாத்காரப்படுத்தினர். இச்சம்பவம் 1972- மார்ச் மாதத்தில் நடந்தது. மதுராவின் உறவினர்களும், பொதுமக்களும் பெரும் போராட்டத்தை நடத்தி, போலீசு நிலையத்தைக் கொளுத்தி விடுவோம் என எச்சரித்த பிறகுதான், குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இரண்டு ஆண்டுகள் கழித்து வந்த இந்த வழக்கின் தீர்ப்பில், ''மதுரா மிகப் பெரிய புளுகி; அவள் அடிக்கடி ஆண்களுடன் உறவு கொள்ளும் பழக்கமுடையவள்; மதுரா, குற்றஞ்சாட்டப்பட்ட போலீசுக்காரர்களுடன் உறவு கொண்டதாகத்தான் நிருபிக்கப்பட்டுள்ளதேயொழிய, 'கற்பழிக்கப் பட்டதாக நிரூபிக்கப்படவில்லை' என அந்தச் சிறுபெண்ணை நடத்தை கெட்டவளாகச் சித்தரித்தது, நீதிமன்றம்.

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த அருணா ஷான்பாக், மும்பையிலுள்ள மருத்துவமனையொன்றில் செவிலியாக வேலைக்குச் சேர்ந்தாள். நோயாளிகளைப் பரிவோடும், அதே சமயம் திறமையாகவும் கவனித்து வந்த அருணாவிற்கும், அம்மருத்துவமனையிலேயே பணியாற்றி வந்த மருத்துவர் ஒருவருக்கும் காதல் மலர்ந்து, திருமண நிச்சயதார்த்தமும் முடிந்துவிட்டிருந்தது. அந்தச் சமயத்தில், ஒரு நாள், தனது வேலையை முடித்துவிட்டு விடுதிக்குச் செல்ல, அம்மருத்துவமனையின் அடித்தளத்தில் இருந்த தனது அறை



படிப்பகம்

www.padippakam.com



யில் உடை மாற்றிக் கொண்டிருந்த அருணாவை, அந்த மருத்துவமனையிலேயே வேலை பார்த்து வந்த துப்புரவுத் தொழிலாளி, கொடூரமாகத் தாக்கி, நாய்ச் சங்கிலியால் கட்டி போட்டு விட்டு, 'கற்பழித்தான்'. இத்தாக்குதலில், அருணாவின் மூளை நரம்பொன்றும், தொண்டையில் இருந்து நுரையீரலுக்குச் செல்லும் மூச்சுக் குழலும் சேதமாகி, அருணா முற்றிலுமாக நினைவிழந்து, செயலிழந்து (கோமா) போனாள்.

இவ்வழக்கு விசாரணையின் போது, அந்தத் துப்புரவுத் தொழிலாளிதான் அருணாவை கொடூரமாகத் தாக்கி கற்பழித்தான் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், நீதிமன்றம் அவனை விடுதலை செய்துவிட்டது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவமிது. அருணாவிற்கு இன்னும் நினைவு திரும்பவில்லை.

✽ அத்வானி பாலியல் குற்றவாளிகளுக்குத் தூக்கு தண்டனை வழங்க சட்டம் கொண்டுவரப் போவதாகச் சொன்ன அதே சமயத்தில், மகாராஷ்டிரா மாநில உயர்நீதி மன்றம், ஜலகான் தொடர் பாலியல் குற்ற வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஓம்கர் சப்காலேயை நிரபராதி எனத் தீர்ப்பெழுதி விடுதலை செய்தது.

ஓம்கர் சப்காலே காங்கிரசு கட்சியைச் சேர்ந்தவன்; ஜலகான் நகரசபையில் உறுப்பினராக இருந்து வந்தான். ஓம்கார் சப்காலேயின் அரசியல் பின்னணி காரணமாக, பாதிக்கப்பட்ட பெண்கள் பலரும் பயந்து கொண்டு, அவன் மீது புகார் கொடுக்க முன்வரவில்லை. சிறப்பு நீதிமன்றமும், சப்காலேயின் மீது பதிவான பத்து வழக்குகளில் எட்டு வழக்குகளைத் தள்ளுபடி செய்துவிட்டது. அரசியல் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாமல், 17 வயதான பெண் கொடுத்த சாட்சியத்தின் அடிப்படையில்தான், மீதி இரண்டு வழக்குகளில் சப்காலேக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இப்பொழுது, பம்பாய் உயர்நீதி மன்றம் இந்த இரண்டு வழக்குகளில் இருந்தும் சப்காலேயை விடுதலை செய்துவிட்டது.

அந்த இளம் பெண், குற்றம் நடந்து 5 மாதங்கள் கழித்து சப்காலே மீது வழக்குப் பதிவு செய்த கால தாமதத்தைக் காட்டி, பம்பாய் உயர்நீதி மன்றம் ஜலகான் பாலியல் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது. ஆனால், இந்திய 'நீதி' மன்றங்கள், பல்வேறு வழக்குகளிலும் குற்றவாளிகளைத் தண்டிப்பதில் இந்த அக்கறையை



**பன்வாரி தேவி மேல்சாதி வெறியர்களால் பாலியல் பலாத்காரப் படுத்தப்பட்ட வழக்கின் தீர்ப்பில், நீதிமன்றம் மேல்சாதி வெறியைக் கக்கியது.**

யும், அவசரத்தையும் காட்டுவதில்லையே! பம்பாய் உயர்நீதி மன்றம் சொன்ன இந்தக் காரணத்தை வைத்துப் பார்த்தால், பீரங்கித் திருடன் ராஜீவ் காந்தி உட்பட எந்தவொரு அரசியல் கிரிமனல்களையும் தண்டிக்க முடியாது. பாதிக்கப்பட்ட பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தைவிட, சட்டத்தின் 'புனிதம்' பெரிதா?

மேலும், பம்பாய் உயர்நீதி மன்றம், "அந்த இளம்பெண் அடிக்கடி உடல் உறவு கொள்ளும் வழக்கம் உடையவள்; எனவே, அவளது சாட்சியத்தை நம்ப முடியாது" என்றும் கூறியுள்ளது. திருமணமான பெண்கள் கூடதான் தாம்பத்திய வாழ்க்கை நடத்துகிறார்கள். அதனால், திருமணமான பெண்களின் "கற்பை", வேறொரு ஆடவன் பலவந்தமாக உறவு கொண்டு அழித்து விட்டதாகக் கூற முடியாது என்று சொல்லிவிட முடியுமா? மனைவியின் விருப்பமின்றி, கணவன் பலவந்தமாகக் கொள்ளும் உடல் உறவு கூட "கற்பழிப்பு" தானே? விபச்சாரத்தில் தள்ளப்பட்ட பெண்கள் தாங்கள் 'கற்பழிக்க'ப் பட்டதாகப் புகார் கொடுக்க சட்டபூர்வ உரிமையே கிடையாதா?

**அஞ்சனா மிஸ்ரா என்ற பெண்ணைக் கெடுக்க முயன்ற மாநில அரசின் தலைமை வழக்கறிஞருக்குப் பாதுகாப்பு கொடுக்கும் ஒரிஸ்ஸா முதல்வரை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டம்.**



✽ கேரளாவைச் சேர்ந்த சகினா என்ற இளம் பெண்ணை, அவள் பக்கத்து வீட்டுக்கார பெண் வேலை வாங்கித் தருவதாக எர்ணாகுளத்திற்கு அழைத்துச் சென்று, விபச்சாரச் சந்தையில் தள்ளிவிட்டாள். சகினாவை விலைக்கு வாங்கிய விபச்சாரத் தரகன், விபச்சாரம் செய்யாவிட்டால் அவளைக் கொலை செய்து விடுவதாக மிரட்டியும், 18 மாதங்கள் அவளைத் தனி அறையில் பூட்டி வைத்தும், சமூகத்தின் பெரிய மனிதர்களுக்கு அவளை இரையாக்கினான்.

எதிர்பாராதவிதமாக போலீசாரால் மீட்கப்பட்ட சகினாவின் வழக்கை, கேரளா மாநில மகளிர் கமிஷனே எடுத்து நடத்தியது. சகினாவைப் பாலியல் பலாத்காரப்படுத்திய 110 'பெரிய' மனிதர்களுக்கு எதிராக தகுந்த ஆதாரங்களும், சாட்சியங்களும் இருந்தபோதும் சகினா வழக்கை கேரளா உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

அத்தீர்ப்பில், "பணம் கொடுத்து உடல் உறவு கொள்ள விரும்பும் ஒருவன், அதற்குச் சம்மதிக்காத ஒரு பெண்ணிடம் செல்லுவானா என்பது நம்புவதற்கு கடினமானது. நாட்கள் செல்ல செல்ல, சகினா, மேனாமினிக்கியாகவும், களி வெறியாட்டங்களில் ஈடுபாடு கொண்டவளாகவும் மாறிவிட்டாள். சகினா, பணத்தாசையும், காம வெறியும் கொண்டவள். வாழ்க்கையில் பலவித இன்பங்களையும் அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற அவளது அடங்காத ஆசையினால், அவள், தானே விரும்பி விபச்சாரியாக மாறிவிட்டாள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நன்றி கெட்ட விபச்சாரத் தரகன் கூட ஒரு பெண்ணை இப்படியெல்லாம் அவமதிக்கத் துணிய மாட்டான்.

✽ அத்வானியின் உள்துறை அமைச்சகச் செயலகத்தில், கே.சி. ஜாகு என்பவன் கீழ்நிலைச் செயலாளராக வேலை பார்த்து வருகிறான். இவன், தனது எட்டு வயது மகளுடன் வாய்வழிப் புணர்ச்சியில் ஈடுபட்டு வந்தான். தனது நான்கு நண்பர்களோடு சேர்ந்து குடித்து கும்மாளமிட்டுக் கொண்டு, அச்சிறுமியின் பிறப்புறுப்பிலும், ஆசன வாயிலிலும் ஒரு பொருளைத் திணித்து, அச்சிறுமி வலி தாங்காமல் கதறி துடித்ததை ரசித்து மகிழ்ந்தான்.

இந்த மனித மிருகங்களை உச்சநீதி மன்றம் கூடத் தண்டிக்க முன்வரவில்லை. "ஆண் உறுப்பை, பெண் உறுப்புக்குள் நுழைப்பதை மட்டுமே பாலியல் பலாத்காரமாக வகைப்படுத்த முடியும்" என்ற சட்டத்தின் ஓட்டையைக் காட்டி, அவனை நீதிமன்றங்கள் விடு



படிப்பகம்

www.padippakam.com



தலை செய்துவிட்டன.

✱ தூக்கத்தில் நடந்து செல்லும் வியாதியுடைய 17 வயது இளம் பெண்ணை, ஐந்து பேர் அடங்கிய கும்பல் பாலியல் பலாத்காரப்படுத்திய வழக்கு விசாரணையின் போது, அந்தப் பெண்ணிடம், ''புணர்வதற்கு எந்த உறுப்பைப் பயன்படுத்தினார்கள்? முதல் குற்றவாளி உன்னைப் புணர்ந்தபொழுது, நீயும் உடல் உணர்ச்சி கொண்டாயா? ஐந்து குற்றவாளிகளின் விந்து வெளிப்பட்ட பொழுது, அதனின் இளஞ் சூட்டை உணர்ந்தாயா?'' எனக் கூனிக் குறுகிவிடும் படியான கேள்விகள் நீதிமன்றத்தில் கேட்கப்பட்டன.

✱ தமிழ்நாட்டை உலுக்கிய பத்மினி 'கற்பழிப்பு' வழக்கை விசாரித்த பழனியப்பன் விசாரணைக் கமிஷன், ''பத்மினி மானபங்கப்படுத்தப் பட்டாலே ஒழிய, கற்பழிக்கப்படவில்லை'' என்று ஒரு அபத்தமான தீர்ப்பைக் கூறியது.

இப்படி பாலியல் வன்முறைக்கு ஆளான பெண்களை, நீதிமன்றமும் பழி தீர்த்துக் கொண்ட வழக்குகளை அடுக்கிக் கொண்டே போகலாம். பாலியல் குற்றம் தொடர்பான சட்டத்தில் உள்ள ஓட்டைகள் ஒருபுறமிருக்க, அந்த ஓட்டைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகார வர்க்கமும், நீதிமன்றமும் ஆணாதிக்கம் கொண்டதாக உள்ளது. குற்றம் நிகழ்ந்திருக்கிறதா, இல்லையா என்பதை இந்த ஓட்டை சட்டப்படியேனும் தீர்மானிப்பதற்கு முன்பாக, அதிகார வர்க்கத்தின் பிற்போக்கு கண்ணோட்டம் தீர்ப்பை எழுதி விடுகிறது. இதன் காரணமாகவே, பெரும்பாலான பாலியல் குற்ற வழக்குகளை சர்வ அலட்சியமாக அணுகி குற்றவாளிகளைத் தப்பவிடுகின்றனர்.

★☆★

பாலியல் வன்முறை, பெண்கள் மீது தொடுக்கப்படும் உடல் ரீதியிலான தாக்குதல் மட்டுமன்று; ஆணாதிக்கத்தையும், இன்னும் சாதி - மத ஆதிக்கத்தையும் தக்க வைத்துக் கொள்ளப் பயன்படுத்தப்படும் வன்முறை ஆயுதங்களில் பாலியல் வன்முறையும் ஒன்று.

இராசஸ்தானில் பன்வாரி தேவி என்ற சமூக நல ஊழியரை, மேல் சாதி வெறியர்கள் பாலியல் பலாத்காரப்படுத்திய வழக்கை விசாரித்த நீதிமன்றம், குற்றவாளிகளை விடுதலை செய்த பின்பு, குஜ்ஜார் சாதியின் மானத்தைக் காப்பாற்றி விட்டதாகக் கூறி, குற்றவாளிகள் ஐந்து பேரையும் ஊர்வலமாக அழைத்து வந்து, மேடையில் ஏற்றி, மரியாதை செய்தனர் மேல்சாதி வெறியர்கள். கன்னையா லால் என்ற பாரதீய ஜனதா எம்.எல்.ஏ. வக்கிரம் பிடித்த இச்சாதிவெறி கொண்டாட்டத்திற்குத் தலைமை தாங்கினார்; அக்குற்றவாளிகளைப் பாராட்டுவதில், பாரதீய ஜனதாவுடன் காங்கிரசு போட்டியிட்டது.

மத்திய பிரதேசத்தில், ஜாபுவா கிராமத்தில் நான்கு கிறித்தவப் பாதிரிப் பெண்களை, சில சமூக விரோதிகள் பாலியல் பலாத்காரப்படுத்தியதை, பா.ஜ.க.வின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், விசுவ இந்து பரிசத்தின் தலைவருமான பி.எல். சர்மா, ''இது தேச விரோத அமைப்புகளுக்கு எதிராக இந்து இளைஞர்கள் கொண்ட சீற்றத்தின் வெளிப்பாடு'' என்று நியாயப்படுத்தினார். பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன் இந்துமத வெறியர்கள் நடத்திய இரத யாத்திரைகளின் பொழுது, பா.ஜ.க.வின் பெண் சாமியாரார் ரிதம்பரா, ''முஸ்லீம் பெண்களுக்குள் இந்துக்களின் விந்து பாய வேண்டும்'' என வெளிப்படையாகப் பேசினார்.



**கேரளாவிலும், மகாராஷ்டிராவிலும் நடந்த தொடர் பாலியல் குற்ற வழக்குகளில் கூட, குற்றவாளிகள் நீதிமன்றங்களால் தண்டிக்கப்படவில்லை. எனவே, பாலியல் குற்றங்கள், குற்ற வழக்குகள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும், போராட்டத்தையும் உருவாக்குவதன் மூலம் மட்டுமே, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியும், நியாயமும் கிடைக்கும்.**

தேசிய இன உரிமைக்காகப் போராடி வரும் வட கிழக்கு இந்தியாவிலும், காசுமீரிலும், இந்திய இராணுவம் 'தேசிய ஒருமைப்பாடு' எனும் பெயரில், பாலியல் தாக்குதல்களை நடத்தி வருகிறது. போலீசு 'உண்மை'யை வரவழைப்பதற்காகப் பாலியல் தாக்குதல் நடத்துகிறது.

— இப்படி பெரும்பான்மையான பாலியல் குற்ற வழக்குகளின் பின்னே ஆதிக்க சக்திகளின் - ஆளும் கும்பலின் அரசியல் மறைந்து கிடப்பதால்தான், பாலியல் குற்ற வழக்குகள் 'நீதி' மன்ற வாயிலைத் தொடுவதற்கு முன்பாகவே, அவற்றின் கழுத்தை நெறித்துவிடத் துடிக்கிறது அதிகார வர்க்கம். சிதம்பரம் பத்மினி மற்றும் சின்னாம்பதி பாலியல் வழக்குகளை விசாரித்த விசாரணைக் கமிஷன்கள், இவ்வழக்குகளில் பாதிக்கப்பட்ட பெண்களை உடனடியாக மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பாமல், வழக்கை நீர்த்துப் போகச் செய்யவும், பாலியல் தாக்குதலை மூடி மறைக்கவும் அதிகாரிகள் செய்த தகிடுதத்தங்களைப் பெரிதாகப் பட்டியல் இட்டுக் காட்டியுள்ளது.

வட கிழக்கு மாநிலங்களிலும், காசுமீரிலும் 'பணியாற்றி' வரும் இராணுவத்தினர் மீது, பொது மக்கள் யாரும் அவர்கள் மீது பாலியல் குற்ற வழக்குகளோ அல்லது வேறு ஏதாவது மனித உரிமை மீறல் வழக்குகளோ போட்டு விடாதபடி, இந்திய அரசு அவர்களுக்குச் சட்டபூர்வ பாதுகாப்பு அளித்துள்ளது.

பாலியல் குற்ற வழக்குகளில், பாதிப்படைந்த பெண்ணின் கடந்த கால பாலுறவு நடத்தையை, எதிர்த்தரப்பு சாட்சியாகப் பயன்படுத்தக் கூடாது என்பது அனைத்துலகச் சட்டம். இதனை ஏற்றுக் கொண்டு, கையெழுத்திட்டுள்ள இந்தியா, உள்நாட்டில் இதற்கு நேர்மாறாக நடந்து கொள்கிறது.

இந்தத் தடைகளின் காரணமாகதான், பாலியல் வழக்குகளை போலீசு நிலையத்தில் பதிவதற்கே பெரும் போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது. அதன்பின், புகார் கொடுத்த பெண்ணை விசாரணை என்ற பெயரில் பலவாறு கேள்வி கேட்டு அவமானப்படுத்துவதன் மூலமும், அவளது நடத்தையைக் கேள்விக்குள்ளாக்குவதன் மூலமும் ஒரு மனோவியல் யுத்தத்தை நடத்தத் தொடங்கி விடுகிறது, அதிகார வர்க்கம். இதன் மூலம், பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்ட பெண்களிடம், வழக்குத் தொடர்வதைவிட, பேசாமல் இருந்து விடலாம் என்ற மனோநிலையை உருவாக்க முனைகின்றனர்.

இத்தகைய சூழலில், தண்டனையைக் கடுமையாக்குவதால், பாலியல் குற்றவாளிகள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என்றோ / பாலியல் குற்றங்கள் குறைந்துவிடும் என்றோ நம்புவதற்கு இடமில்லை. பாலியல் குற்றங்களுக்கு எதிரான போராட்டங்களை பரந்துபட்ட மக்கள் திரள் போராட்டங்களாகக் கட்டியமைப்பது; பாலியல் குற்ற வழக்குகளில், பாதிப்படைந்த பெண்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் சட்டப் பிரிவுகளை நீக்கக் கோருவதும், வழக்குகளை நீர்த்துப் போகச் செய்ய முயலும் அதிகார வர்க்கத்தைத் தண்டிக்கக் கோரிப் போராடுவதும், பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்ட பெண்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு உறுதுணையாக இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# ''அனுபவ் நிலங்களைப் பறிமுதல் செய்வோம்!''

## அனுபவ் தேக்கு மர நிறுவனத்திடம் நிலங்களை இழந்த விவசாயிகளுக்கு வி.வி.மு.வின் அறைகூவல்!

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் தாராளமயம் - தனியார்மயம் - உலகமயம் கொள்கைகள் புகுத்தப்பட்ட ஆரம்ப நாட்களில் பங்குச் சந்தை சூதாட்டம் மிகவும் பரவலாக்கப்பட்டது. அதில் நடுத்தர மக்களின் சொற்ப சேமிப்புகளும் ஒரு சுற்று சூறையாடப்பட்டன. அந்த பல்லாயிரங் கோடி ஊழல் நாயகன் அர்சத் மேத்தாவோ, அவனுக்கு உதவிய வங்கி பார்ப்பன உயரதிகாரிகளோ இன்றுவரை தண்டிக்கப்படவில்லை. அர்சத் மேத்தா இன்று மிகப் பெரும் பங்குச் சந்தை ஆலோசகர்!

அடுத்த கட்டமாக நிதி நிறுவனங்கள் புற்றீசல்களாகப் பெருகின. கருப்புப் பண முதலைகள் தமது கள்ளப் பணத்தை இந்நிறுவனங்களில் கொட்டிக் குவித்து, அவற்றை ஊதிப் பெருக்கினர். இந்நிறுவனங்கள் மத்திய - மாநில அரசுகளாலோ, ரிசர்வ் வங்கியாலோ கட்டுப்படுத்தப்படவில்லை; முறைப்படுத்தப்படவுமில்லை. இதுவே கருப்புப் பண முதலைகள் தமது பணத்தை முதலீடு செய்வதற்கு வாய்ப்பாக அமைந்தது.

ஏறக்குறைய இந்த நிதி நிறுவனங்கள் எல்லாமே கருப்புப் பண முதலைகளின் பினாமிகளால் தான் இயக்கப்பட்டன. இதன் மூலம் சட்டபூர்வமாக முதலீடுகளைத் திரட்டிக் கொண்டனர். அதன் பயன் முடிந்தபின் இவை இழுத்து மூடப்பட்டன. இந்த மோசடி நிதி நிறுவன அதிபர்களும் இன்று வரை தண்டிக்கப்படாமல் சுதந்திரமாக உல்லாசமாக உலா வருகின்றனர்.

இதே கட்டத்தில் தாராளமயத்தின் இன்னொரு விளைவாக புதிய வகையிலான முதலீட்டு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. தேக்கு மரப் பண்ணைத் திட்டங்கள், பழப் பண்ணை, பூந்தோட்டம், காய்கறிப் பண்ணை, ஆடு - மாடு வளர்ப்புப் பண்ணைகள் என இவையும் புற்றீசல்களாகப் பெருகின. நீங்கள் முதலீடு செய்யும் பணம் நிலமாக, பண்ணைகளாக உங்கள் கண்ணெதிரே வளர்ந்து வருகின்றன. இலாபமெல்லாம் உங்களுக்கே என ஆசை காட்டின. இவற்றுக்கும் அரசின் எவ்விதக் கட்டுப்பாடும், முறைப்படுத்தலும் கிடையாது. அதிக வட்டி ஆசை காட்டிய நிதி நிறுவனங்களைக் கூட நம்பாத பலரும் இந்த நிறுவனங்களை நம்பினார்கள்.

தமிழகத்தில் தஞ்சைக்கு அடுத்த வளமான பூமி கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி. இப்பகுதியில் பண்ணை விவசாயம் என அனுபவ் பிளாண்டேசன், மேக்ஸ்வொர்த், வி.ஜி.பி., டான்பரோ, ரடான்தே அக்ரோ என பல நிறுவனங்கள் படையெடுத்தன. இந்நிறுவனங்கள் அனைத்தும் மோசடி, மிரட்டல் மூலம் நிலங்களை அபகரித்தன.

அனுபவ் இங்கு 1500 ஏக்கர் நிலத்தை வளைத்த பெரிய நிறுவனம். பொட்டிப்புரம் கிராமத்தில் ஏக்கருக்கு ரூ. 14,000 கொடுத்து, நிலங்களை வாங்கியதாக பத்திரம் பதிந்த அனுபவ், விவசாயிகளுக்கு ரூ. 6000 மட்டும் கொடுத்து மோசடி செய்தது. பல கிராமங்களில் விவசாயகள் அனுபவ் - இன் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி நிலத்தை விற்றனர். விற்க மறுத்தவர்களை மிரட்டி வாங்கினர். பிறகு, புறம் போக்கு நிலங்களையும், ஓடைகளையும் ஆக்கிரமித்தனர். ஆழ்குழாய் கிணறுகள் போட்டதால், அண்டை நிலக் கிணறுகள் வறண்டன. இதனால் விவசாயம் இல்லாமற் போன நிலங்களை அடிமாட்டு விலைக்கு விற்க நிர்பந்தித்து வாங்கினர். இப்படித்தான் 'நவீன' பண்ணைகள் முளைத்தன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கம்பம் பகுதி விவசாயிகள் விடுதலை முன்னணி, 'அனுபவ்' மோசடிக் கும்பலுக்கு எதிராகப் போராடத் தொடங்கியது. 'எதை எடுத்தாலும் எதிர்ப்பதே உங்கள் வேலையாகிப் போச்சு' என்று வி.வி.மு.வை வசை பாடிய சென்னை இடைநிலை அரசு அதிகாரி ஒருவர், இன்று தலையைக் கவிழ்ந்து கொண்டு செல்கிறார். அவர் 'அனுபவ்' தேக்கு மரத் திட்டத்தில் முதலீடு செய்த பல ஆயிரங்கள் பறிபோனதே காரணம். இவரைப் போன்று சுமார் 600 பேருக்கு மேல் அனுபவ் நடேசன் கிட்டதட்ட 24 கோடி ரூபாய்க்கு மேல் மோசடி செய்து விட்டதாகப் புகார் தந்துள்ளனர்.

இந்தத் தேக்கு மரப் பண்ணைக்கு இவர்கள் செய்த விளம்பரத்திற்கு கணக்கே கிடையாது. தொலைக்காட்சி, பத்திரிக்கைகள் விளம்பரம் மட்டுமல்ல. சென்னை ஜெமினி மேம்பாலமருகே மிகப் பிரம்மாண்டமான நிஜ மரம் போன்று செய்து வைத்து சுற்றுச் சூழல் காப்பாளராக காட்டிக் கொண்டனர். வெட்டுவதற்காகவே வளர்க்கப்படும், இலைகள் குறைந்த தேக்கு மரம், எப்படி சுற்றுச் சூழலைக் காக்கும் என்பது அனுபவ் மோசடி கும்பலுக்கே வெளிச்சம்.

சிறையிலிருக்கும் அனுபவ் முதலாளி நடேசன் தினமலருக்கு அளித்த பேட்டியில் ''டிபாசிட்தாரர்களை ஏமாற்றவில்லையா?'' என்ற கேள்விக்கு,

''இப்போதும் சொலகிறேன். என்னிடம் உள்ள சொத்துக்களை ஒப்படைத்து விடுகிறேன். என்னை விட்டு விடுங்கள். 'சைபர்' பைசாவிலிருந்து என்னால் முன்னேற முடியும்; பிசினசை நடத்திக் காட்ட முடியும்'' என்று திமிருடன் பேசுகிறார். யார் நிலத்தை யாருக்கு யார் தருவது?

முதலீட்டை விட அதிக சொத்து இருப்பதாக நடேசன் கூறுகிறார். இவர் கணக்கில் தேக்கு மரங்களும் அடக்கம். இது வெறும் புள்ளி விவரம்தான். மரத்தின் லட்சணமோ இவர் கூறுவதில் பாதி கூட இல்லை. இவ்வளவு குறைவான வளர்ச்சி உள்ள மரத்திற்கு கன அடி கணக்கில் மதிப்பிடுவது சிரமம், சந்தையிலும் விலை போகாது.

தவிர, 6 மாதங்களுக்கு மேலாகவே அனுபவ் மோசடி செய்து விட்டது என அவ்வப்போது வதந்திகள் வந்து கொண்டே இருந்தன. தேனி அருகே உள்ள சங்கராபுரம் தேக்குப் பண்ணையில் அங்குள்ள

அனுபவ் நடேசனால் மோசடி செய்யப்பட்ட நடுத்தர வர்க்க முதலீட்டாளர்கள்



www.padippakam.com

மோட்டார்களை எல்லாம் அதன் நிர்வாகி ஐ. சுரேஷ் வதந்தி வரத் தொடங்கிய போதே விற்றுத் தின்று விட்டான். தொடர்ந்து மழை பெய்வதனால்தான் ஏதோ பசுமை தெரிகிறது. சொட்டு நீர் பாசனமே இல்லாத இந்த மரங்களைத்தான் நன்றாக வளர்கிறது என அனுபவ் நடேசன் கதையளக்கிறார். போலியான புகைப் படங்களை அனுப்பி முதலீட்டாளர்களை ஏய்த்து வருகிறார்.

மேலும் முதலீட்டாளர்களுக்கு பிரித்துக் கொடுக்காமல் உள்ள நிலங்களை தனது பெயரில் அதிகாரப் (பவர் ஆஃப் அட்டர்னி) பத்திரம் உள்ளதை வைத்து விற்று சுருட்டிக் கொண்டு ஓடும் முயற்சியில் உள்ளான் சுரேஷ். இந்த மோசடிப் பேர்வழி மீது இன்றுவரை நடவடிக்கை இல்லை. சங்கராபுரம் பண்ணையின் நிலை இதுதான். பிற இடங்களிலும் இதே நிலை தான்.

தனது நிர்வாகத்தின் கீழ் என்ன நடக்கிறது என்றே தெரியாமல், முழுதும் குளிரூட்டப்பட்ட, சகல வசதிகள் கொண்ட சொகுசுப் பேருந்தில் உல்லாச உலா வந்த நடேசன், மேலும் 36 சொகுசுக் கார்களும், பண்ணை வீடுகளும் வாங்கிக் குவித்துள்ளார். மோசடிச் சாமியாரும் பெண் பித்தனுமான சங்கர் பாபாவுக்கான, தொலைக் காட்சி விளம்பரத்திற்கு மட்டும் 1 1/2 கோடி செலவிட்டுள்ளார்.

ஆன்மீகக் கவர்ச்சியில் மக்களை ஏய்த்துக் கொண்டே, சினிமாக் கவர்ச்சியில் பல கோடிகளை தனது உல்லாசத்திற்கு வாரியிறைத்தார் அனுபவ் நடேசன்.

அனுபவ் தேக்குப் பண்ணை திட்டத்திற்கு தேனி, போடி பகுதிகளில் நிலத்தைப் பறி கொடுத்த விவசாயிகள், கஞ்சிக்கு இன்றி வாடி வதங்க விவசாயிகள் விடுதலை முன்னணி அனுமதிப்பதாக இல்லை.

ஏற்கனவே, 'அனுபவ்' தனது தேக்குப் பண்ணைத் திட்டத்திற்கு ஒரே நாளில் 6 கோடி முதலீடு திரட்டி உச்சத்திலிருந்த போதே, இது மோசடி நிறுவனம் என எதிர்த்துப் போராடிய அமைப்பு வி.வி.மு. ஓராண்டுக்கு முன்னர் தேக்குப் பண்ணைகளை பிரச்சாரம் செய்து அழிப்போம் என விவசாயிகள் மத்தியில் அப்பாவி விவசாயிகளிடமிருந்து அடித்துப் பிடுங்கப்பட்ட நிலங்களில் வளர்ந்து நின்ற தேக்கு மரங்களை வெட்டிச் சாய்த்தது வி.வி.மு.

அனுபவ் கும்பலின் மோசடி முழுவதும் அம்பலமாகிவிட்ட நிலையில், அனுபவ் ஆக்கிரமித்துக் கொண்ட நிலங்களை, அதனிடமிருந்து பறித்து, அனுபவ் நிறுவனத்தால் நிலங்களை இழந்த விவசாயிகளுக்கு, அவர்களது நிலங்களைச் சொந்தமாக்கும் போராட்டத்தை வி.வி.மு. நடத்தத் தொடங்கியுள்ளது. இதனின் முதல் கட்டமாக, சங்கராபுரம் பண்ணையில் செங்கொடி நட்டு நிலத்தை மீட்டுள்ளது வி.வி.மு. அனுபவ் கும்பல் ஆக்கிரமித்துள்ள பிற கிராமங்களிலும் இதேபோல செய்யும்படி இந்தப் பிரச்சாரத்தை வீச்சாகக் கொண்டு செல்கிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பாரம்பரிய விவசாயத்தை அழிக்கும் அனுபவ் கும்பலுக்கு எதிராக போராடிய வி.வி.மு.வின் மீது போலீசு கொலை முயற்சி உட்பட ஒன்பது பொய் வழக்குகள் போட்டு மாதக் கணக்கில் சிறையிலடைத்தது. எந்த மோசடி கூடாது என வி.வி.மு.வினர் போராடினார்களோ, அந்த மோசடி நபர் இன்று சிறையில். ஆனால் அநியாயத்தை எதிர்த்துப் போராடிய வி.வி.மு.வினர் மீதான பொய் வழக்கு இன்னும் தொடர்கிறது.

இன்று மோசடி அம்பலமாகி சிறையிலுள்ள அனுபவ் நடேசன், மக்களிடம் வாங்கிய பணத்தை நிலத்தில் போட்டுள்ளேன்; அதில் மரம் உள்ளது; எடுத்துக் கொள்ளலாம் என்று பேசுகிறார். அடிமாட்டு விலையில், விவசாயிகளை மிரட்டியும், ஆக்கிரமித்தும், புறம்போக்குகளையும் ஆக்கிரமித்துக் கொண்டவனுக்கு அந்த நிலத்தில் எங்கிருந்து வந்தது உரிமை? எனவே, நிலம் பறிகொடுத்த விவசாயிகள் அனுபவ்விடமிருந்து நிலத்தைப் பறித்தெடுப்பதே நீதியானது.

— விவசாயிகள் விடுதலை முன்னணி
தேனி, மதுரை மாவட்டங்கள்,
போடி வட்டம்.

## பார்ப்பன வெறியர்களின் முகத்தில் கரி

ஆலயங்களில் தமிழில் வழிபாடு நடத்த வேண்டும் என தி.மு.க. அரசு உத்தரவிட்டவுடன், ''இது பக்தர்கள் விவகாரம்; நாத்திகர்கள் இதில் தலையிடக்கூடாது'' என 'சோ' உள்ளிட்ட பார்ப்பன வெறியர்கள் எகிறிக் குதித்தனர். இந்து முன்னணி இராம. கோபாலன், ''பக்தர்களிடம் வாக்கெடுப்பு நடத்தத் தயாரா?'' எனச் சவால் விட்டார். இந்து முன்னணியின் சவாலை ஏற்றுக் கொண்ட பழ. நெடுமாறன் தலைமையில் இயங்கும் தமிழர் தேசிய இயக்கம், மதுரை மீனாட்சியம்மன் கோயில், சீறிரங்கம் - அரங்கநாதன் ஆலயம், பேரூர் - பட்டீசுவர திருக்கோயில் உள்ளிட்ட ஒன்பது ஆலயங்களில் நவம்பர் 27 அன்று இரகசிய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்தியது. இவ்வாக்கெடுப்பில் 18,700 பக்தர்கள் வாக்களித்தனர். 17,695 பக்தர்கள் தமிழ் அர்ச்சனைக்கு ஆதரவாக வாக்களித்தனர். சமசுகிருத மொழி வழிபாட்டிற்கு ஆதரவாக விழுந்த வாக்குகளின் எண்ணிக்கை வெறும் 823 தான்! சென்னை - வடபழனி முருகன் ஆலயத்தில் நடந்த கருத்துக் கணிப்பின்போது, 90 சதவீதத்துக்கும் மேலான தமிழக பக்தர்கள், தமிழ் அர்ச்சனைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.




ஆறாம் ஆண்டு

**தமிழ் மக்கள் இசை விழா**

சனவரி 29 மற்றும் 30, 1999
தஞ்சை, திலகர் திடல்.

| | |
|---|---|
| சனவரி 29 மாலை | - தமிழ் மொழி உரிமை குறித்த கருத்தரங்கம் |
| சனவரி 30 காலை முதல் நள்ளிரவு வரை | - இசை விழா கருத்தரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் |

✿ தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் அறிவியல் தமிழ்த் துறைத் தலைவர் பேரா. இராம. சுந்தரம், தமிழ்ப் பல்கலைக் கழக இசைத் துறைத் தலைவர் பேரா. முனைவர் அங்கயற்கண்ணி, மைசூர் திறந்தவெளிப் பல்கலைக் கழக முனைவர் தமிழ் மாறன் மற்றும் பல தமிழ் அறிஞர்கள் கருத்தரங்குகளில் உரையாற்றவிருக்கின்றனர்.

✿ கலைநிகழ்ச்சியில் புரிசை கண்ணப்ப தம்பிரான் குழுவின் இந்திரஜித் - கூத்து, ஆத்தூர் கோமதி வில்லுப்பாட்டு, கட்டபொம்மன் இசை நாடகம், ம.க.இ.க. கலை நிகழ்ச்சி, ஒயிலாட்டம், பாவேந்தர் பாடல்கள், கம்பம், உத்தமபாளையம் வட்டார சமூக உறவுகளும் - நாட்டுப்புறக் கலைகளும், தஞ்சை, மதுரைப் பகுதி கூத்துப் பாடகர்களின் பாடல்கள் போன்றவை இடம் பெற உள்ளன.

பார்ப்பனியத்தின் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்திற்கு தோள் கொடுக்க, தமிழ் மக்களே திரண்டு வாரீர்!

இவண்,
ம.க.இ.க., தமிழ்நாடு.




படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## காவேரி மேல்சாதியினர் சொத்தா?

ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமுடி நகருக்கு அருகேயுள்ள நாகநாயக்கன்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர், குளிப்பதற்கும், துணிகளைத் துவைப்பதற்கும், அ.தி.மு.க. ஆட்சியின் பொழுது, அக்கிராமத்தின் வழியே ஓடும் காவேரி ஆற்றில் படித்துறையொன்று கட்டப்பட்டது. சமீபத்தில், நாயக்கர் சாதியைச் சேர்ந்த ஆதிக்க சக்திகள், ''அப்படித்துறை மேல்சாதியினருக்கானது; தாழ்த்தப்பட்டோர் அதனைப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம்'' எனத் தீண்டாமையைப் புகுத்தினர். தாழ்த்தப்பட்டோர் இத்தீண்டாமையை எதிர்த்து படித்துறையைப் பயன்படுத்த முயன்றதோடு, மேல்சாதி வெறியர்களின் அடாவடித்தனத்தைப் பற்றி போலீசில் புகார் செய்தனர். இதனால் மேல்சாதி ஆதிக்க சக்திகளும், கிராம பஞ்சாயத்துத் தலைவரும் கூட்டு சேர்ந்து கொண்டு தாழ்த்தப்பட்டோரை ஊரை விட்டு ஒதுக்கி வைத்து விட்டனர். அக்கிராமத்தில் செயல்படும் பால் சொசைட்டி, தாழ்த்தப்பட்டோருக்கு பால் வழங்க மறுக்கிறது; குன்னத்தூர் அரசு மருத்துவமனையில் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க மறுக்கப்படுகிறது. மேல்சாதி வெறியர்களிடம் அடங்கிப் போய் விடும்படி தாழ்த்தப்பட்டோருக்கு அறிவுரை கூறிவிட்டு, இத்தீண்டாமையை வேடிக்கை பார்க்கிறது தமிழக போலீசு. சமத்துவபுரம் காணும் தி.மு.க. ஆட்சியின் இலட்சணம் எப்படியிருக்கிறது பாருங்கள்!

## மதப்பாகுபாட்டினை எதிர்க்கும் மேற்கு வங்க மாணவர்கள்

''ஈஸ்வர அல்லா தேரே நாம்'' - இப்படிதான் 'மார்க்சிஸ்டு'கள் மத ஒற்றுமை பற்றி முழக்கமிடுவார்கள். ஆனால், அவர்கள் ஆளும் மேற்கு வங்க மாநிலத் தலைநகரில் உள்ள ஏடன் இந்து மாணவர் விடுதியில் முசுலீம் மாணவர்கள் தங்கிப் படிக்க அனுமதிக்கப்படுவதில்லை. பிரசிடென்சி, மௌலானாஆசாத், கோயங்கா மற்றம் சமசுகிருதக் கல்லூரிகளில் பயிலும் இந்து மதத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும்தான் இவ்விடுதியில் இடமுண்டு. இக்கல்லூரிகளில் படிக்கும் முசுலீம் மாணவர்களுக்குத் தனியாக இரு விடுதிகள் உள்ளன. அவ்விடுதிகளில் இந்து மதத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடமில்லை. கடந்த 110 வருடங்களாக கண்டிப்புடன் கடைபிடிக்கப்பட்டு வரும் இந்த அருவெறுக்கத்தக்க நடைமுறையை நீக்கக் கோரி, அக்கல்லூரிகளைச் சேர்ந்த முற்போக்கு எண்ணம் கொண்ட மாணவர்கள் போராடத் துவங்கியுள்ளனர்.

## ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி

ஜெர்மன் நாட்டின் ஹெஸ்ஸே மாநிலத்தைச் சேர்ந்த உயர்நீதி மன்றம், ஈழத் தமிழர்கள் அரசியல் காரணங்களுக்காக ஜெர்மனியில் தஞ்சம் கோருவதற்கு எவ்வித உரிமையும் கிடையாது எனத் தீர்ப்பளித்துள்ளது. ஈழத் தமிழ்ப் பெண் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த அரசியல் தஞ்சத்தை ரத்து செய்துள்ள இந்நீதிமன்றம், அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ள 4,000 ஈழத் தமிழர்களின் விண்ணப்பங்களையும் நிராகரித்து விடுமாறு உத்தரவிட்டுள்ளது. ''ஈழத்தில் இப்பொழுது மனித உரிமை மீறல்களே நடைபெறுவதில்லை; அதெல்லாம் கடந்த காலம்'' எனப் பொய்க் காரணத்தைக் கூறி, சந்திரிகாவின் இனவெறிப் படுகொலைகளை - மனித உரிமை மீறல்களைப் பூசி மெழுகி விட்டு, ஈழத் தமிழர்களுக்கு இச்சர்வதேச உரிமையை வழங்க மறுத்துள்ளது அந்நீதிமன்றம்.

## பா.ஜ.க.வும், பதுக்கல் வியாபாரிகளும்

அத்தியாவசிய பண்டங்கள் சட்டம் கடந்த ஜூலை மாதமே காலாவதியாகிவிட்டது. இச்சமயத்தில் வெங்காயத்தின் விலையும், ஏற்றுமதியினாலும், பதுக்கலின் காரணமாகவும் அதிகரிக்கத் தொடங்க, அகில இந்திய வியாபாரிகள் சங்கத் தலைவராக இருக்கும் பா.ஜ.க. எம்.பி. ஷியாம் பிஹாரி மிஸ்ரா, பா.ஜ.க. அரசு இச்சட்டத்தைப் புதுப்பிக்காமல் இருப்பதற்காக பேரம் நடத்தினார். வட இந்திய வியாபாரிகளின் கட்சியான பா.ஜ.க.வும் இச்சட்டத்தைப் புதுப்பிக்காமல் கிடப்பில் போட்டு விட, வெங்காய வியாபாரிகள் மூன்று - நான்கு மாதங்களுக்குள்ளாக அடித்த பகற்கொள்ளை 3,000 கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. இந்த வர்த்தகச் சூதாடிகளைக் காப்பாற்றுவதற்காகதான், பா.ஜ.க வருண பகவான் மீது பழியைப் போட்டது. தெய்வம் நேரில் வந்து பேசவா போகிறது என்ற தைரியம் தான்!

## இருவேறு இந்தியா

அமெரிக்க கோழிக்கறி, இத்தாலியின் ''பிஸ்ஸா'' ரொட்டி என விதவிதமான அயல்நாட்டு உணவு வகைகளைத் தின்று தீர்க்கிறது ஒரு கூட்டம்; மற்றொரு புறமோ, ஒரிஸ்ஸா மாநிலத்தின் அகல்புர் வட்டத்தைச் சேர்ந்த பதாதிகா கிராமத்தில், பல நாட்கள் அரை வயிறு கஞ்சி கூடக் கிடைக்காமல் பட்டினியால் சுருண்டு கிடந்த 9 ஏழைகள், சமீபத்தில் இறந்து போயினர்; அப்பகுதியில் பஞ்சமும், வறட்சியும் தலைவிரித்தாடுவதால், ஆயிரக்கணக்கான மக்கள் பஞ்சம் பிழைக்க வீடு - வாசலைத் துறந்து, கிராமங்களை விட்டு வெளியேறிச் செல்கிறார்கள். ஒரிஸ்ஸா மாநிலத்தின் சுயேச்சை சட்டசபை உறுப்பினர் பாலகோபால் மிஸ்ரா, இந்த அதிர்ச்சி தரும் உண்மையை அம்பலப்படுத்தி, வழக்குத் தொடர்ந்த பின்தான், ஆளுங்கும்பல் விசாரணை நாடகத்தைத் தொடங்கியது.

## இந்தியக் கிராமத்தின் மறுபக்கம்

உத்திரப் பிரதேசத்திலுள்ள ஹரியாகி கர்ஹி கிராமத்தைச் சேர்ந்த சூரியா, யசோதா, பிரேமாவதி என்ற மூன்று பெண்களை - அவர்களுள் சூரியாவும், யசோதாவும் சகோதரிகள்; பிரேமாவதி அச்சகோதரிகளின் மாமியார் - எட்டு பேர் கொண்ட கும்பலொன்று இரண்டு மணி நேரத்துக்கும் பாலியல் பலாத்காரப்படுத்தி, அதன் பின் அம்மூவரையும் நிர்வாணமாக கிராமத்தின் தெருக்களில் இழுத்துச் சென்று அவமானப்படுத்தியது. சூரியா - யசோதாவின் சகோதரர் வினோதும் ராஜ்பால் என்ற ஆதிக்க வெறியனின் மகள் கமலேஷும் காதல் திருமணம் செய்து கொள்ள கிராமத்தை விட்டு வெளியேறிச் சென்று விட்டதால், ராஜ்பால் குடும்பம், வினோதின் குடும்பப் பெண்களுக்குக் கொடுத்த 'தண்டனை'யாம் இது!

**சிங்கள இனவெறி பயங்கரவாதத்துக்கு, உறவினரைப் பலிகொடுத்த ஈழத் தமிழர் குடும்பம்**



Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

பாபர் மசூதி இடித்துத் தள்ளப்பட்ட டிசம்பர் 6-ஆம் தேதியை, ''நம்மை நாமே ஆத்ம பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய நாள்; சமரசத்தைக் குறிக்கும் நாள்; மத நல்லிணக்கக் குறிக்கோளுக்காக, நாம், நம்மை மறு அர்ப்பணிப்பு செய்து கொள்ள வேண்டிய நாள்'' எனக் குறிப்பிட்டு, பிரதமர் வாஜ்பாயி அறிக்கை வெளியிடுகிறார்.

அத்வானி, இன்னும் ஒரு படி மேலே போய், ''பாபர் மசூதி இடிக்கப்பட்டது தனிப்பட்டதொரு துரதிருஷ்டமான சம்பவம்'' எனக் கூறுகிறார்.

உத்திரப் பிரதேச அயோத்திக்காக வருத்தப்படுவது போலவும், இனி அது மாதிரி சம்பவங்கள் நடக்காது என்பது போலவும் அறிக்கைவிடும் இந்துமத வெறியர்கள், மறுபுறமோ, இன்னுமொரு அயோத்தியை கர்நாடகாவில் உருவாக்கச் சதித் திட்டம் தீட்டுகிறார்கள்.



இரத யாத்திரை நடத்தி இன்னுமொரு அயோத்தியை கர்நாடகாவில் உருவாக்கத் துடிக்கும் இந்துமத வெறியர்களின் சதித்தனம்.

கர்நாடக மாநிலத்தின் சிக்மகளூர் நகருக்கு அருகேயுள்ள பாபா புதன் கிரி மலையில், குரு தத்தாத்ரேய பாபா புதன் சுவாமி தர்கா அமைந்துள்ளது. 1200 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த தர்கா, முசுலீம்களுக்கு மட்டுமின்றி, இந்துக்களின் வழிபாட்டுத் தலமாகவும் விளங்குகிறது. இறைத் தூதர் முகம்மதுவின் சீடரான ஹஸ்ரத் தாதா ஹயத் மீர் காலந்தர் இந்த மலையில் தங்கியிருந்தார் என்பது முசுலீம்களின் நம்பிக்கை. விஷ்ணுவின் அவதாரமாகக் கருதப்படும் தத்தாத்ரேயா என்ற இந்து மத முனிவர், இந்த மலையில் தவம் செய்து, பின் மறைந்து போனதாக இந்துக்கள் நம்புகின்றனர்.



குகை வழிபாட்டுத் தலத்தின் அருகே காவிக் கொடி ஏற்றும் இந்துமத வெறியர்கள்

இந்துக்களும் முசுலீம்களும் பாபா புதன்கிரி மலையில் உள்ள சிறு குகையில் தான் நம்பிக்கையோடு வழிபாடு நடத்துகின்றனர். இறைத்தூதரின் இரத்த உறவினராகக் கருதப்படும் ஒரு முசுலீம் குடும்பத்தினர் தான் தலைமுறை தலைமுறையாக இந்தக் குகை வழிபாட்டுத் தலத்தை நிர்வகித்து வருகின்றனர். முசுலீம்கள் இத்தர்காவில் சந்தனக் கூடு திருவிழா நடத்துவதைப் போல, இந்துக்கள், கடந்த பத்தாண்டுகளாக, தத்தாத்ரேயா ஜெயந்தியினை நடத்துகின்றனர்.

இந்துக்களின், முசுலீம்களின் மத நம்பிக்கைகள் ஒருபுறமிருக்க, முசுலீம் மதப் பிரிவுகளுள் ஒன்றான சூஃபி பாரம்பரியத்தின் மையமாக இந்தப் பகுதி நீண்ட நெடுங்காலமாக இருந்து வருவது வரலாற்று உண்மை. பாபர் மசூதி பிரச்சினையில் நடந்ததைப் போலவே, இந்த வரலாற்று உண்மையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு, இந்துமத வெறி அமைப்புகள், இந்தக் குகை வழிபாட்டுத் தலத்தை முசுலீம்களிடமிருந்து மீட்க வேண்டும் என்று நான்கைந்து ஆண்டுகளாகப் பிரச்சாரம் செய்து வருகின்றன.

சென்ற டிசம்பர் மாதம் தத்தாத்ரேயா ஜெயந்தி நடைபெறுவதற்கு முன்பு, விசுவ இந்து பரிஷத், பஜ்ரங் தள், ஆர்.எஸ்.எஸ். ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து ''இந்தக் குகை வழிபாட்டுத் தலத்தை விடுதலை செய்யும் இரத யாத்திரைகளை'' நடத்தின. பா.ஜ.க.வின் கார்வார் தொகுதி எம்.பி. அனந்த குமார் ஹெக்டே, குகை வழிபாட்டுத் தலத்தை விடுவிக்கத் தற்கொலைப் படையை அனுப்பப் போவதாக மிரட்டினார். இரத யாத்திரை மூலம் இந்துமத வெறியூட்டப்பட்ட பத்தாயிரக்கணக்கான இந்துக்களை ஜெயந்தி அன்று திரட்டி வந்து, இவ்வழிபாட்டுத் தலத்தை முசுலீம் நிர்வாகத்திடமிருந்து மீட்டுவிட இந்துமத வெறியர்கள் போட்ட திட்டம் தோற்றுப் போனது. ஆனாலும், ஜனதாதள அரசின் கையாலாகாத்தனத்தால், இந்துமத வெறியர்கள் குகை வழிபாட்டுத் தலத்தின் அருகே காவிக் கொடிகளை ஏற்றினர். தத்தாத்ரேயா சிலையை நிறுவி பூசை செய்யும் புதிய பழக்கத்தையும் புகுத்தி விட்டனர்.

அயோத்தி, காசி, மதுரா - இந்தப் பட்டியலில் கர்நாடகாவின் சிக்மகளூரையும், தமிழ்நாட்டின் திருப்பரங்குன்றத்தையும் சேர்த்துவிடத் தீவிரமாக முயலுகிறது இந்து மதவெறிக் கும்பல். இந்தப் பட்டியல் இப்படி நீண்டு கொண்டே போனால், பா.ஜ.க.வின் ஓட்டுப் பெட்டி கனக்கக் கூடும். ஆனால், உழைக்கும் மக்களை அச்சுறுத்தும் ஆலை மூடலுக்கும், விலைவாசி உயர்வுக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் இந்துமத வெறியாட்டங்கள் எவ்வகையிலும் தீர்வாகி விடாது!